கிராம நலம்

ஜனவரி 62

13 ந.பை

“ பொருளாதார அரண் ”

“ இந்தியா, தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து, தன் சொந்த வளத்தையே நம்பி வாழ்ந்து, சுரண்டலுக்கு இடம் கொடுக்காத நிலையை அடைந்துவிட்டால், கீழ்நாடுகளோ, மேல்நாடுகளோ தம் பேராசைப் பார்வையை இந்தியாவின்மீது செலுத்த முடியாது. அதிகச் செலவில் ஆயுத பலம் திரட்டாமலே, இந்தியா தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் நிலையை, அப்பொழுது அடையும். இந்தியாவின் உள்நாட்டுப் பொருளாதார அமைப்பே, எந்த அயல்நாட்டு ஆக்ரமிப்பையும் தடுக்கும் சிறந்த அரணாக விளங்கும்.”

—மகாத்மாவின் மணிமொழி.



கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 7 | ஜனவரி 1962 | படி 4

புதிய பஞ்சாயத்து ஆட்சி, திறம்பட நடைபெறுவதற்கு, இரண்டு முக்கியமான தேவைகள் உண்டு. அவற்றுள் ஒன்று, நிர்வாக அதிகாரம் (Executive Authority) என்பது; மற்றொன்று ஆளும் ஸ்தாபனம் (Governing Body) என்பது. இந்த இரண்டும், தக்க முறையில், ஒன்றுக்கொன்று மோதல் ஏற்படாமல் இயங்கினால் தான், புதிய பஞ்சாயத்து ஆட்சி, சரியான பாதையில் முன்னேற முடியும்.

பஞ்சாயத்து யூனியனைப் பொருத்த வரையில், பஞ்சாயத்து யூனியன் மன்றமே (Panchayat Union Council) ஆளும் ஸ்தாபனமாகும். அதில் அங்கத்தினராய் உள்ள எல்லோரும், தமக்குள்ள பொறுப்பைச் சரியாக உணர்ந்து, நிறைவேற்றும் பொழுதுதான், ஆளும் ஸ்தாபனம், திறமையாகப் பணியாற்ற முடியும். இந்த ஆளும் ஸ்தாபனம் வகுக்கின்ற திட்டங்களை, நிறைவேற்றி வைக்கும் கருவிகளாக நிர்வாக அதிகாரம் பெற்றுள்ள அரசாங்கப் பணியாளர்கள், தொழில் புரிய வேண்டும். இந்த இரு சாராரும், தத்தம் கடமைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் இருந்தால், குழப்பம் ஏற்படுவது நிச்சயம். அதாவது, ஆளும் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கின்ற பொதுஜனத் தலைவர்கள், நிர்வாக அதிகாரங்களைச் செலுத்த முற்பட்டாலும், அல்லது, நிர்வாக அதிகாரிகள் ஆளும் ஸ்தாபனத்தார் வகுக்கும் நெறிமுறைகளுக்கு மாறாகவோ, மீறியோ, காரியம் செய்யும்போதும், பல்வேறு சிக்கல்கள் தோன்றிவிடுகின்றன.

இந்த முக்கியமான அடிப்படை உண்மையை, பொதுஜனப் பிரதிநிதிகளும், அதிகாரிகளும், சந்தேகமில்லாமல் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், பஞ்சாயத்துத் தலைவர்களும், அரசாங்க அதிகாரிகளும், இந்த அடிப்படை உண்மைகளை மறக்கவே கூடாது. இவை, தத்துவார்த்தமாகப் பேசக்கூடிய லட்சியங்கள் என்று எண்ணி, அவற்றை அசட்டை செய்துவிடக் கூடாது. நடைமுறைக் கொள்கைகள் எனக் கொண்டு, திறம்படப் பணியாற்ற வேண்டும். இல்லையென்றால், பஞ்சாயத்து ஆட்சிக்கே கெட்ட பெயர் ஏற்படும் சூழ்நிலை, சுலபமாக உருவாகிவிடலாம். ஜனநாயகம் தழைத்தோங்கும் நமது பாரத நாட்டில், கிராம ஆட்சி, சிறந்த முறையில் நடைபெறுவதற்கு, இந்த நெறிமுறைக்கோட்பாட்டை, பொதுமக்கள் எல்லோரும் உணர வேண்டும். இதற்கான சமூகக் கல்வித் திட்டமாகவே (Social Education Programme) பல்வேறு கருத்தரங்குகளும், பயிற்சிக் கூட்டங்களும் பயன்பட வேண்டுமென்பது, அரசாங்கத்தின் விருப்பம் ஆகும்.

—ஆசிரியர்.

அட்டைப்படம் :

பொங்கல் திருநாளில் . . . . .

ஆனந்தம் பொங்குக !
உழைப்பு சக்தி ஓங்குக !
உலக அமைதி மலர்க !
பொறுப்புணர்ச்சி வளர்க !
கூட்டு முயற்சி வெல்க !
உரிமை இன்பம் வாழ்க !
மங்களம் தங்குக !
பொங்குக பால் பொங்கல் !!

முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் கூட்டம்

1960-ம் ஆண்டு மே மாதம் பஞ்சாயத்து அபிவிருத்திக் கருத்தரங்குகள் முதன் முதலாக நடைபெற்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை அங்கத்தினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், மற்றும் விவசாயம், கிராம நெடுஞ்சாலைகள், கால் நடை, கூட்டுறவு முதலிய பல்வேறு இலாகா அதிகாரிகளும் கலந்து கொண்டு புதிய பஞ்சாயத்து ஆட்சியின் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி கலந்து ஆலோசித்தார்கள். அச்சமயம், அபிவிருத்திக் கமிஷனராக இருந்த திரு. ஆர். ஏ. கோபாலசாமி அவர்கள், மேற்சொன்ன கருத்தரங்குகளை ஆரம்பித்ததோடன்றி, எல்லாவற்றிற்கும் தலைமை வகித்து, பல்வேறு கருத்துக்களையும், அநுபவங்களையும் பரிமாறிக் கொள்ள ஏற்பாடு செய்தார். பன்னிரெண்டு மாவட்டங்களை நான்கு பிரிவுகளாகப் பாகுபடுத்தி, அந்தந்தப் பிரதேசத்தைப் பற்றிய விசேஷ பிரச்சினைகள், சிறப்பாக ஆராயப்பட்டன. ஒவ்வொரு கருத்தரங்கும் ஆறு நாட்கள் நடை பெற்றது. இந்தக் கருத்தரங்குகளின் நிகழ்ச்சித் தொகுப்பை, 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாத "கிராம நல" இதழாக வெளியிட்டிருந்தோம்.

அதற்குப் பிறகு, புதிய பஞ்சாயத்து யூனியன்கள் மூன்று தொகுதிகளாக, (முறையே 2-10-1960, 13—1—1961, 2—10—1961 ஆகிய தேதிகளில்) செயல்படத் தொடங்கின. 1960-ம் ஆண்டு நடைபெற்ற கருத்தரங்குகளில் வெளியான அனுபவங்களையும், அபிப்பிராயங்களையும் பின்னணியாகக் கொண்டு, அரசாங்க ஆணைகளும், விதி முறைகளும், நடை முறை விளக்கங்களும் அவ்வப்போது வெளியிடப்பட்டன.

முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள், ஆரம்பமாகி, ஒரு வருஷத்துக்கு மேலாக, புதிய பஞ்சாயத்து ஆட்சியை ஏற்று நடத்தி வந்துள்ளன. சிறப்பாக, பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பொது ஜனத் தலைவர்கள், புதிய பொறுப்புக்களை எவ்வாறு சமாளித்து வருகிறார்கள் என்பதை அறிவதற்காக, ஒரு விசேஷக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை.

1960-ம் ஆண்டு மே மாதம் கருத்தரங்குகள் நடை பெற்ற போது, அபிவிருத்திக் கமிஷனராகப் பணி புரிந்தவர், இன்றைய தினம், தமிழ் நாடு அரசாங்கத்தின் தலைமைச் செயலாளராகி இருப்பதோடு கிராம நல, தல நிர்வாகத் துறையின் செயலாளராகவும் பொறுப்பேற்றுள்ளது யாவரும் அறிந்ததே. எனவே, எல்லா இலாகாக்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும் தலைவராக விளங்கும் அவர், புதிய பஞ்சாயத்து ஆட்சியை நிறைவேற்றுவதில் உள்ள உண்மையான சிக்கல்களை பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மூலம் நேரடியாக அறிந்து கொள்ள விரும்பினார். அத்துடன், இவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் நடை பெற்ற மாநில பஞ்சாயத்து மகா நாட்டில், பல பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தங்களுடைய சமீப கால அநுபவங்களை வெளியிட வாய்ப்பு இல்லாமல் போகவே, அதற்காக ஒரு விசேஷக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வதாக கிராம அபிவிருத்திக் கமிஷனர் வாக்களித்திருந்தார். இவற்றை யொட்டி, முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பெற்றது. சென்னை ராஜாஜி மண்டபத்திலும், பாலர் அரங்கத்திலும், மூன்று நாட்கள் நடைபெற்ற அந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளை, சுருக்கமாக கீழே வெளியிட்டுள்ளோம்—ஆசிரியர்.

தமிழ் நாட்டில் 75 வட்டாரங்களில், முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் சென்ற காந்தி ஜெயந்தி தினத்திலிருந்து (2-10-1960) செயல்படத் தொடங்கி சிறந்த பணியாற்றி வருகின்றன. முதல் தொகுதி யூனியன்களில் புதிய பஞ்சாயத்து ஆட்சி செயல்படத் தொடங்கி ஓராண்டுக் காலம் ஆகி விட்டது. "உண்மையான மக்களாட்சி மலர வேண்டுமென்றால், மக்களின் கையில் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும்; அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்காமல் பரவலாகப் பிரித்தளிக்கப்பட வேண்டும்" என்ற அடிப்படை இலட்சியத்தைக் கருத்திலிருத்தி, தமிழ் நாட்டில் பஞ்சாயத்து ஆட்சியைத் துவக்கி நடத்துவதென்று தமிழ் நாடு அரசாங்கம் முடிவு செய்து, அதன்படி மாநிலத்தில் பஞ்சாயத்து யூனியன்களைத் தோற்றுவித்து, அவை செயல்படத் தொடங்கியுள்ளன.

ராஜாஜி மண்டபத்தில் நடை பெற்ற கூட்டத்தின் துவக்கத்தில் கிராம அபிவிருத்திக் கமிஷனர் **திரு. கோ. வெங்கடாசலபதி,** யூனியன் தலைவர்களை வரவேற்றுப் பேசினார். அவர் தம்முடைய வரவேற்புரையில் கருத்தரங்கு கூட்டப்பட்டதின் நோக்கத்தைப் பற்றி விளக்கிக் கூறினார் "முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மூத்த சகோதரர்கள் மாதிரி; உங்களுக்கு பொறுப்பு அதிகம். பொறுப்பினை நீங்கள் உணர்ந்து காரியங்கள் செய்ய வேண்டும். பஞ்சாயத்து ஆட்சி வளருவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களின் வளர்ச்சி பஞ்சாயத்தின் வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. பஞ்சாயத்தின் வளர்ச்சி உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. புதிய பஞ்சாயத்து ஆட்சியினை நடத்துகின்ற பொறுப்பு அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதைக்காட்டிலும் உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது தான் பொருத்தமாகும். ஜன நாயகத்தின் பெருமையைக் காப்பாற்றுகின்ற பொறுப்பு உங்களிடம் விடப்பட்டுள்ளது " என்று அவர் குறிப்பிட்டார்கள்.

தமிழ் நாடு அரசாங்க தலைமைச் செயலாளர் **திரு. ஆர் ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்.** கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் சிறந்த கருத்துரைகளை எடுத்து வழங்கினார்கள். அவர் தம்முடைய முகவுரையில் குறிப்பிட்டதாவது :—

" 1960 ஆம் மே மாதத்தில் சென்னையில் ஒரு கூட்டத்தை நடத்தினோம். அப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படவில்லை. அக் கூட்டத்தில் பஞ்சாயத்து ஆட்சியினை எப்படி நடைமுறையில் செயல்படுத்துவது என்பது பற்றிய விஷயங்களையெல்லாம் பேசி, கலந்து ஆலோசித்து ஒரு முடிவு ஏற்பட்டு அதன்படி நடக்க ஆரம்பித்தோம். அந்தக் கூட்டத்தையே ஆதாரமாக வைத்து, வட்டார அளவிலே இப்படிப்பட்ட கருத்தரங்குகள் நடத்துவது என்று முடிவு செய்தோம். அதை ஒட்டி, பிறகு என்ன நடந்தது என்று கவனித்துப் பார்த்தோம். அப்படிப் பார்த்ததில், நாம் எடுத்த முடிவு நல்ல முடிவு தான், நாம் சரியான பாதையில்தான் செல்கிறோம் " என்ற உறுதி ஏற்பட்டது.

இரண்டாவது முக்கியமான விஷயம், இந்த வருடம் செப்டெம்பரில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்காகும். விவசாயத் திட்டம் எப்படி செயல்படுத்தப்படுகிறது, என் னென்ன செய்ய வேண்டியுள்ளது என்பதுபற்றியெல்லாம் அக் கூட்டத்தில் ஆராயப்பட்டது."

"அதிகாரப் பரவல் முறை நாம் எதிர்பார்த்தபடி நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. அரசாங்கமே எல்லா வற்றையும் வைத்துக் கொண்டிருப்ப தெல்லாம் இன்னும் கொஞ்ச நாட்களுக்குத்தான். அதற்குப் பிறகு, எல்லாக் காரியங்களும் மாவட்ட அளவிலே நடந்துவிடும். நீங்கள் பஞ்சாயத்து ஆட்சியினைப் பராமரித்து நடத்து கின்றவர்கள். நீங்கள், கலெக்டர், டிவிஷனல் அதிகாரி ஆகியோர் புதிய ஆட்சிக்குப் பொறுப்பாளர்கள் (Trustees) எனலாம். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாகிய நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு பொறுப்பாளர் குழு மாதிரி. அமைப்பு முறை ஒரு ஒழுங்குக்கு வந்திருக்கிறது. காரியம் இனிமேல் தான் நடத்தவேண்டும். ஓராண்டில் கிடைத்த அனுபவத்தை வைத்துக்கொண்டு பார்த்தால் எல்லாம் ஒழுங்காகத்தான் நடக்கிறது என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஒரு வருட வேலையினைக் காட்டும் ஒரு அளவுப் படம் போட்டுப் பார்த்தால் தைரியம் வளர்ந்து இருக்கிறது, பயம் குறைந்திருக்கிறது என்பது தெரிகிறது. இன்னும் இரண்டு வருடங்கள் நாம் கண்காணிப்புடனும், உஷாராகவும், ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்ள வேண் டும். எல்லாம் ஒழுங்காக நடக்கிறது. சரியான பாதையில் ஜாக்கிரதையாகச் சென்றுக்கொண்டுதானிருக்கிறோம் என் பதை அடுத்து வருகிற இரண்டு வருட காலங்களிலே நாம் நிரூபித்துக் காட்டவேண்டும்."

பஞ்சாயத்து யூனியன்களில் நடைபெற்ற தேர்தல்களைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் பேசுகையில், " கிராம மக்கள் நல்ல முறையில், மதிப்புடன் நம்மைப் போற்றுகின்ற முறையில் நாம் நடந்துகொள்ளவேண்டும். நாணயமும், கண்ணியமும் தான் முக்கியம். அவை காப்பற்றப்பட வேண்டும். கிராமப் பொது வாழ்வு சீரழிந்து விட்டால், பின்பு பஞ்சாயத்து ஆட்சி என்ற அமைப்பே உடைந்து விடும். அப்படி நேரிடாமல் இருக்க, அதைக்காப்பாற்ற வெறும் சட்டம் மாத்திரம் போட்டாலும் போதாது. மனம் மாறவேண்டும். இப்பொழுது இருக்கிற தேர்தல் முறையிலே கொஞ்சம் மாறுதல் செய்ய வேண்டும். நல்ல முறையில் காரியங்கள் நடக்கின்ற வகையில், அறிவொளி பரப்புகின்ற வேலையைச் செய்ய வேண்டும் " என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் "இரண்டாவது, முக்கியமான விஷயம் நிர்வாகம் சம்பந்தமானது. மனக்கசப்புக்கே புதிய பஞ்சாயத்து ஆட்சியில் இடமிருக்கக்கூடாது. அரசாங்கம் நடைபெறுவதற்கு பெரிய உத்தியோகஸ்தர்கள், சிறிய உத்தியோகஸ்தர்கள் என்று ஒரு ஒழுங்கான முறையில் சிவில் சர்விஸ் எப்படி உள்ளதோ அதே மாதிரி, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு சிவில் சர்வீஸ் ஏற்படுத்திக் கொடுத்தால் ஒழிய, சரிப்பட்டுவராது என்று நான் அப்பொழுதே சொன்னேன். பஞ்சாயத்துத் தலைவர்கள்—பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஆகியோருக்கும் அரசாங்க அதிகாரிகள், கிராம அதிகாரி களுக்குமிடையே சுமுகமான உறவு நிலவ வேண்டும். உயர்ந்த உத்தியோகம் பார்த்த ஐ.ஸி.எஸ். உத்தியோகஸ் தர்களைப்பற்றி பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னால், பெரிய அளவில் ஜனப் பிரதிநிதிகளாக இருந்த தலைவர்கள் எப்படிக் கவலைப்பட்டார்களோ, அதே மாதிரி, ஒரு வருடத்திற்கு முன்பு, கிராம அதிகாரிகளைப் பற்றி பஞ்சாயத்துப் பிரதிநிதிகளும் கவலைப் பட்டார்கள். அந்தக் கவலைக்கே இடமில்லை. இப்பொழுது தான் பஞ் சாயத்து ஆட்சியைத் துவக்கியிருக்கிறோம். இந்த

அமைப்பு முறை அப்படியே, ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டுமென்பதல்ல. மாற்றங்கள் செய்து கொள்ளலாம். மெல்ல, மெல்ல நின்று நிதானித்து எல்லாவற்றையும் செய்து கொள்ளலாம். 1964-ம் ஆண்டு வாக்கில், இந்த அமைப்பு முறையே திருத்தி அமைக்கப் படலாம். கிராமத்திலும், பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு நிரந்தரமான "சிவில் சர்வீஸ்" அமைக்கப்பட்டு விடும்."

முடிவுரையில் அவர், "பஞ்சாயத்து ஆட்சி ஒழுங்காக இருக்கவேண்டுமானால், பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், கிராம மக்களிடையே தங்களுக்குள்ள மதிப்புக்கு ஒரு சிறிதும் மாசு ஏற்பட்டு விடாமல், தங்களுடைய நல்ல பெயரைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அத்துடன், நிர்வாகம் ஒழுங்காக நடை பெறவேண்டுமென்றால், அரசாங்க அதிகாரிகளுக்கும், ஜனப்பிரதிநிதிகளுக்கும் இடையே சுமுகமான உறவு நிலவவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

தலைமைச் செயலாளரின் முகவுரைப் பேச்சுக்குப்பின் விவாதம் தொடங்கியது. பல் வேறுபட்ட பிரச்னைகளைப் பற்றிய விவாதம் நவம்பர் 29, 30 தேதிகள், டிசம்பர் முதல் தேதி ஆகிய மூன்று நாட்களிலும் தொடர்ந்து நடைபெற்றது. பொது நிர்வாகம், கல்வி, சுகாதாரம், நிதி வசதிகள், வேலைத் திட்டங்கள் என்று விஷயங்கள் பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு அம்சமாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரதிநிதிகள் மனம்விட்டுப் பேசினார்கள். தங்களுடைய பிரச்சினைகளை, சிக்கல்களை, தங்களுக்குள்ள குறைகளை எல்லாம் யூனியன் தலைவர்கள் எடுத்துத் தெளிவாக விளக்கினார்கள்.

அமைப்பு முறையும்—நிர்வாக விஷயங்களும்

அமைப்பு முறை—நிர்வாக சம்பந்தமான மொத்தம் 24 விஷயங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. நிர்வாக விஷயம் சம்பந்தமாக கீழ்க்கண்ட யோசனைகளையும், முடிவுகளையும் தலைமைச் செயலாளர் வெளியிட்டார்.

கிராமவேலைகள் திட்டம் பற்றிய விவாதம்.—மிகவும் விரிவாகவும், அனுபவரீதியாகவும் இருந்தது. பஞ்சாயத்துத் தலைவர்கள் கிராமக் கட்டுவேலைகளை செயல் படுத்துவதில் உள்ள சிக்கல்களையும், பில்கள் அனுமதிக்கப்பட்டு பணம் பட்டுவாடா செய்வதில் நடைமுறையில் நிலவுகின்ற தாமதத்தையும் சிக்கல்களையும் விளக்கினார்கள். பிரதம இஞ்சினியர் (நெடுஞ்சாலைகள்) விவாதத்தில் கலந்து கொண்டு சிக்கல்களுக்கு தீர்வு காணும் முறையில் இந்த விஷயங்களைப்பற்றி விளக்கிப் பேசினார். ஜூனியர் இஞ்சினியருக்கு உள்ள அனுமதி அளிக்கும் அதிகாரத்தை ரூ. 3,000-க்கு உயர்த்துவது என்றும், அசிஸ்டெண்ட் இஞ்சினியர் ஒவ்வொரு மாதமும் வட்டாரத்திற்கு விஜயம் செய்ய வேண்டுமென்றும், பஞ்சாயத்து யூனியன் தலைவர் அவருடன், நேரில் பிரச்னைகளைப் பற்றிக் கலந்து பேச வேண்டும் என்றும்—அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படவேண்டும் என்றும் முடிவாகியது.

"பஞ்சாயத்துக்களும் ஆரம்பக் கல்வியும்".—பற்றிய விவாதத்தில், கல்வி-பொதுச் சுகாதாரத் துறை காரியதரிசி திரு. கே. சீனுவாசன், ஐ.ஏ.எஸ்., கலந்து கொண்டார். "**பஞ்சாயத்து நிதிகள்**" சம்பந்தமான விஷயங்களுக்கு பஞ்சாயத்து நிதி இயக்குநர் திரு. கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்களும், "**விவசாயம்**", "**வேலைத்திட்டம்**" சம்பந்தமாக எழுப்பப்பட்ட வினாக்களுக்கு கிராம நலம் தல நிர்வாகத்துறை துணைக் காரியதரிசி திரு. டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்., அவர்களும் தக்க விளக்கங்கள் கூறினார்கள்.

கூட்டத்தின் கடைசி தினமாகிய 1-12-61 அன்று காலை தலைமைச் செயலாளர் "**பஞ்சாயத்து ஆட்சி**" பற்றி தெளிவான விளக்கங்களை எடுத்துக் கூறி, அரியதொரு கருத்துரை வழங்கினார். (அவருடைய பேச்சின் சாரத்தை—7ம் பக்கம் காண்க).

கூட்டத்தின் முடிவுரையாக, "பஞ்சாயத்துத் தலைவர்கள்—கிராம அதிகாரிகள் உறவு" பற்றிப் பேசும்போது தலைமைச் செயலாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்:— "நாம் புதுப் பாதையிலே தட்டுத் தடுமாறிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறோம். ஒருமித்த எண்ணங்களை, கருத்துக்களை உருவாக்க வேண்டியுள்ளது; உடன்பாடான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. எல்லாவற்றையும் உத்தரவு போட்டு, எல்லாக் காரியங்களையும் நடத்திவிட முடியாது. நிர்வாகத்திலே சிரமங்கள் ஏராளமாக உள்ளன என்று இந்த மூன்று நாட்கள் விவாதத்திலிருந்து உங்கள் மனதிலே பதிந்தால், வரப்போகிற வருடங்களில் செம்மையாகப் பணியாற்ற உறுதுணையாக இருக்கும்.

புதிய பஞ்சாயத்து ஆட்சி ஒரு சோதனை (Experiment) என்று சொல்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. சோதனையை எந்த வேகத்தில், எந்த உணர்ச்சியில் சமாளிக்க வேண்டும் என்பது தான் இப்பொழுதுள்ள பிரச்சினையெல்லாம். ஆகவே, செய்கின்ற பணியில் கவனத்தை சற்று அதிகமாகத் திருப்பி, தம் மேல் உள்ள கவனத்தை சற்று குறைத்துக்கொண்டால், நல்லது என்று நினைக்கிறேன். ஒற்றுமை மனப்பான்மையுடன் காரியத்தை நடத்திக்கொண்டு போனால்தான் பயனுள்ள தாகவும், நன்றாகவும் இருக்கும். முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாகிய உங்களுக்கு மற்ற பஞ்சாயத்து யூனியனின் தலைவர்களைவிட ஆறு மாதம் அதிகமான காலமும் ஆறுமாத அனுபவ வாய்ப்பும் (lead) கொடுத்திருக்கிறது. உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த அதிகப்படியான வாய்ப்பினை, நீங்கள் கண்காணிப்புடன் பாதுகாத்து, செம்மையான முறையில் பணியாற்றுவதன் மூலம் நிலைநிறுத்திக் காட்ட வேண்டும்.

மாவட்ட அபிவிருத்தி மன்றங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு, உங்களுடைய வேலைகளை நடத்திச் செல்வதற்கு

பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயம், குடும்பக் கட்டுப்பாடு ஆகிய இரண்டு விஷயங்களில் நாம் வெற்றிகாண வேண்டும். இந்த இரண்டு விஷயங்களை நாம் செய்து விட்டால், மூன்றுவது திட்டகால முடிவுக்குள், மக்கள் மனப்பான்மையில் முழு மாறுதல் கண்டிப்பாக ஏற்பட்டுவிடும். பொதுத் தொண்டில் இறங்குவதற்கு முன்னால், முதலில் நம் மனம் சுத்தமாக இருக்கவேண்டும். சகிப்புத் தன்மையுடனும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும், ஒற்றுமையுணர்ச்சியுடனும் நடந்தால், பஞ்சாயத்து ஆட்சி இந்த மாநிலத்தில் அசைக்க முடியாத பெரும் வெற்றியினைப் பெறும் என்பது உறுதி".

கூட்டத்தின் கடைசி நாளன்று (1-12-61) திட்டக் கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீமந் நாராயண் அவர்களும் கலந்து கொண்டு பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கினர்.

ஸ்ரீமந் நாராயண் அவர்களை வரவேற்று தலைமைச் செயலாளர் பேசுகையில், புதிய பஞ்சாயத்து ஆட்சி தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட முறையினையும், அதை ஒட்டி எடுக்கப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளையும்பற்றி குறிப்பிட்டதுடன், 1960-ம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற கருத்தரங்கு, அதன்பிறகு நடைபெற்ற கூட்டங்களைப் பற்றி எடுத்துக் கூறி சமூகக் கல்வி பரப்பும் திட்டம் எப்படிச் செயலாற்றப் பட்டு வந்துள்ளதென்பதையும் எடுத்துத் தெளிவாக விளக்கினர்.

பிரதேச அபிவிருத்தி வேலைகளுக்காக கொடுக்கப்படும் மானியத் தொகை, கிராமக் குடி தண்ணீர் வேலைகளுக்காக மட்டுமல்லாமல், பள்ளிக்கூட கட்டடங்கள் கட்டுதல், ரோடு போடுதல் போன்ற மற்ற வேலைகளுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சார்பில், திட்டக் கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீமந் நாராயண் அவர்களிடம் கோரப்பட்டது.

ஸ்ரீமந் நாராயண் பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார் :—

"கிராமக் குடி தண்ணீர் வசதி செய்து தருதல் மிகவும் அத்தியாவசியமானதும், அடிப்படைத் தேவைகளில் மிகவும் முக்கியமானதுமாகும். இத்தனை திட்டங்களைப் போட்டு, இவ்வளவு பணம் செலவழித்து, கிராம மக்களுக்கு குடிதண்ணீர் வசதிகூட செய்யவில்லை என்றால் அது அவமானகரமான விஷயமாகும். மூன்றுவது திட்டகால முடிவுக்குள்ளாக, இந்தியாவில் உள்ள எல்லாக் கிராமங்களும் போதிய குடி தண்ணீர் வசதியினைப் பெற்றாக வேண்டும் என்று திட்டக் கமிஷன் முடிவு செய்துள்ளது.

அடுத்தப்படியாக உள்ளது, கிராம வேலைகள் திட்டமாகும் (Rural Works Programme). மூன்றுவது திட்டக் கால முடிவுக்குள் 25 லட்சத்திலிருந்து 30 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த வேலைகளில், விவசாயத்திற்கு முதல் இடம் தரப்பட்டுள்ளது. அதற்கடுத்தபடியாக, ரோடுகள் போடுதல், பள்ளிக்கூட கட்டடங்கள் முதலியன வருகின்றன. இதற்கான நிதி 50 சத விகிதம் பண உதவி என்ற முறையிலும், 50 சத விகிதம் கடன் மூலமாகவும் எழுப்பப்படும். பிரதேச அபிவிருத்தி வேலைகளின் கீழ் எவை எவை செய்யப்பட முடியவில்லையோ, அவை கிராம வேலைகள் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு செயலாற்றப்படும்.

அத்துடன், சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு, மேலும் அத்துறையில் ஒரு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டுகின்ற முறையில் சில விசேஷ சலுகைகள் அளிக்கின்ற விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். நல்ல முறையில் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் பணியாற்ற இப்படிப்பட்ட ஏற்பாடு செய்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதுகிறேன்."

"இன்னொரு விஷயம். அண்டை நாடான சீனவில் கம்யூன்களை ஏற்படுத்தி, ராணுவ முறையில் மக்களைத் திரட்டி பணியாற்றுகின்ற முறை கையாளப்பட்டது. ஆனல், இந்த சர்வாதிகார முறை, தாற்காலிகமாக பயனை அளிப்பதாக தோன்றினலும், மெல்ல மெல்ல மக்களிடையே ஆர்வம் குறைந்து, கடைசியில் போட்ட திட்டமே சீர்குலைந்து போகிற நிலையினைக் கண்டோம். ஆனல், நம் நாட்டிலோ, காந்தியநெறியை ஒட்டி, மனமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு, ஜனநாயக முறையில் செய்யப்படும் திட்டங்கள் படிப்படியான முன்னேற்றத்தையும், நிலையான ஒரு அமைப்பையும் பெற்றுவருகிறது. விநோபாஜி கூறுகிற 'கிராம தான இயக்கமும்' இந்தக் கருத்தின் பிரதிபலிப்பேயாகும்". [அலங்கா நல்லூரில் நடைபெற்ற கிராமதான மகாநாட்டில் ஸ்ரீமந் நாராயண் கலந்து கொண்ட செய்தி யாவரும் அறிந்ததே.]

அருள் பாதை!

என். எஸ். சிதம்பரம்

1. நம்முடைய பாரதத்தை நாமே ஆளும்
 நல்லாட்சி தனையடைந்தோம்! நலிவில் லாத
செம்மைநிறை திட்டங்கள் சேரக் கண்டோம்!
 சேவையொன்றே புரிந்து நின்று சிறந்த காந்தி
தம்முடைய அறநெறியால் தரணி போற்றும்
 தன்னிகரில் நிலையுற்றேம்! தவிப்பு நல்கும்
வெம்மைமிகு பிணி வறுமை விழச் செய்து
 வெற்றியெனும் கொடியேந்தி விளங்கு வோமே!

2. எய்தியதோர் குடியரசை இரு கண் போலே
 எந்நாளும் காத்திடுவோம்! இதயம் ஒன்றி
மெய்திகழும் சுதந்திரத்தின் மேன்மை யோங்க
 மேலான பணிசெய்வோம்! மேவு துன்பப்
பொய்திகழும் வழிவிலகிப் புனிதன் காந்தி
 புகன்றஅருட் பாதைதனிற் பொருந்தி யின்பம்
பெய்திடுமோர் வகைபெறுவோம்! பிறந்த நாடு
 பீடுடனே இலங்கிடுமோர் பேர்சேர்ப் போமே!

‘ முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் கூட்டத்தில் ’ கலந்து கொண்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் விவரம் :

பெயர்.	யூனியன் பெயர்.

செங்கற்பட்டு மாவட்டம்

1. திரு எம். தம்பிரான் நாயக்கர். திருக்கழுக்குன்றம்.
2. ,, எஸ்.ஏ. எஸ். காதர் .. ஸ்ரீபெரும்புதூர்.
3. ,, கே. சுப்பராய முதலியார். கடம்பத்தூர்.
4. ,, கே. ஏ. கோவிந்தப்ப நாயுடு. திருவள்ளூர் (ஈக்காடு.)

வட ஆர்க்காடு மாவட்டம்

5. திரு ஜி. கோதண்ட கவுண்டர். போளூர்.
6. ,, கே. எஸ். பெரியசாமி .. கலசப்பாக்கம்.
7. ,, பி. சீனுவாசன் .. துரிஞ்சாபுரம்.
8. ,, பி. ராஜமாணிக்க முதலியார். ஆரணி.
9. ,, பெருமாள்சாமி நாயக்கர் .. வேம்பாக்கம்.
10. ,, ஆர். ராமானுஜம் .. கே. வி. குப்பம்.
11. ,, வி. எஸ். சிவநேசன் .. ஆர்க்காடு.

தென் ஆர்க்காடு மாவட்டம்

12. திரு. எல். கருப்ப மூப்பர் .. கள்ளக் குறிச்சி.
13. ,, என். வேணுகோபாலன் .. ஒரத்தூர்.
14. ,, வி. வரதராஜ நயினர் .. செஞ்சி.
15. ,, வி. டி. இளைய பிள்ளை .. சின்னசேலம்.
16. ,, ஜே. கிருஷ்ண ரெட்டியார். மேல்மாயனூர்.
17. ,, கே. ராமசாமி .. .. திருநாவலூர்.

சேலம் மாவட்டம்

18. திரு ஏ. நல்லப்ப ரெட்டி .. ஹோசூர்.
19. ,, எஸ். வரதராஜன் .. நாமகிரிப் பேட்டை.
20. ,, வி. ஆர். ஜகதீச முதலியார். தர்மபுரி.

21. ,, ஏ. கந்தசாமி நாயனுர் .. காவேரிப் பட்டணம்.
22. ,, பி. எஸ். காசி விஸ்வ நாதன். பெத்த நாயக்கன் பாளையம்.
23. ,, ஆர். கோவிந்த கவுண்டர். எடப்பாடி.
24. ,, டி. ஆர். செங்கோட கவுண்டர். கொளத்தூர்.
25. ,, ஆர். வெங்கடாஜலம் .. கிருஷ்ணகிரி.
26. ,, கே. பிரசன்னன் .. கங்கவல்லி.

கோயமுத்தூர் மாவட்டம்

27. திரு கே. துரைசாமி நாயுடு .. பெரியநாயக்கன் பாளையம்.
28. ,, கே. எம். ராமசாமி .. அவினுசி.
29. ,, கே. எம். சுப்பிரமணியம். கோபிச் செட்டிப் பாளையம்.
30. ,, ஏ. கே. காளியப்ப கவுண்டர். சத்தியமங்கலம்.
31. ,, ஆர். எம். குமாரசாமி கவுண்டர். பல்லடம்.
32. ,, என். பொன்னுசாமி கவுண்டர். திருப்பூர்.
33. ,, எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர். ஈரோடு.
34. ,, கே. சின்னசாமி .. பெருந்துறை.

நீலகிரி மாவட்டம்

35. திரு பி. கே. பெல்லா கவுடர் .. உதகமண்டலம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

36. திரு ஆர். விசுவநாதன் .. தொட்டியம்.
37. ,, எஸ். சுப்பிரமணியம் .. முசிறி.

பெயர்.	யூனியன் பெயர்.

38. ,, கே. என். தங்கவேலு .. லால்குடி.
39. ,, வி. எஸ். மஹாலிங்கம் .. குளித்தலை.
40. ,, கே. தங்கவேல் உடையார். வேப்பந்தட்டை.
41. ,, டி. ஏ. எஸ். தங்கவேலு சேர்வை. திருவரங்குளம்.

தஞ்சாவூர் மாவட்டம்

42. திரு சண்முகசுந்தரம் .. கீவளூர்.
43. ,, என். சுந்தரேச தேவர் .. பட்டுக்கோட்டை.
44. ,, பி. வெங்கடாசல தேவர் .. வேதாரணியம்.
45. ,, பி. சி. வேலாயுத புரையார். திருத்துறைப் பூண்டி.

(திரு. சதானந்த வாண்டையார்—திருத்துறைப் பூண்டி பிளாக் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.)

46. திரு ஆர். சௌந்திர ராஜன் .. பாபநாசம்.
47. ,, ஜி. சௌந்திரராஜ வன்னியர். கும்பகோணம்.
48. ,, கே. ரங்கநாதன் .. .. சீர்காழி.
49. ,, கே. ராமையா நயினர் .. மாயூரம்.

மதுரை மாவட்டம்

50. திரு வி. பாலகுருவா ரெட்டியார். வாடிப்பட்டி.
51. ,, ஆர். சுந்தரராஜன் .. அலங்காநல்லூர்.
52. ,, எஸ். ராஜு .. .. டி. கல்லுப்பட்டி.
53. ,, எஸ். பெரியசாமி அம்பலம் மதுரை கிழக்கு.
54. ,, ஏ. எம். ராமசாமி .. மதுரை மேற்கு.
55. ,, பி. வி. வி. ராமச்சந்திரன். மேலூர் I.
56. ,, ஏ. எம். நல்லதம்பி .. உசிலம்பட்டி.

இராமனுதபுரம் மாவட்டம்

57. திரு காதர்பாட்சா என்று அழைக்கப்படுகிற வெள்ளைச்சாமி. கமுதி.
58. ,, என். கிருஷ்ணசாமி .. ஸ்ரீவில்லிபுத்தூர்.
59. ,, வி. வால்மீகி .. .. சிங்கம்புணரி.
60. ,, கே. ராமசாமி .. .. சிவகாசி.
61. ,, ஏ. டி. எம். ராமநாத தேவர். திருவாடானை.
62. ,, கே. ஏ. தங்கச்சாமி பிள்ளை. பரமக்குடி.

திருநெல்வேலி மாவட்டம்

63. திரு எஸ். எசக்கி முத்து பாண்டியன். சேரன்மாதேவி.
64. ,, எம். கந்தசாமி மழவராயர் பாப்பாகுடி (முக்கூடல்).
65. ,, பி. எஸ். பெரியநாயக நாடார். தூத்துக்குடி.
66. ,, எஸ். வி. சுப்பையா பாண்டியன். மானூர்.
67. ,, எஸ். சண்முகசாமி .. சங்கரன்கோயில்.
68. ,, எஸ். பி. ஏ. ராமசாமி .. கோயில்பட்டி.

மற்றும் கிராமநல-தல நிர்வாகத்துறை அதிகாரிகள், கல்வி-பொது சுகாதாரத்துறை காரியதரிசி திரு. கே. சீனுவாசன், ஐ.ஏ.எஸ்., துணைக்காரியதரிசி திரு. எஸ். சுப்பிரமணியம், திரு. பி. சுராஜுடீன், தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலைகள் & கிராம வேலைகள்) திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., விவசாயத்துறை இயக்குநர், ஆகியோரும் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

அதிகாரமும் பொறுப்பும்

முதல் தொகுப்பு பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் கடைசி நாள் கூட்டத்தில், தலைமைக் காரியதரிசி பேசியதாவது.—

" ஆட்சிப் பொறுப்பைப் பரவலாகச் செய்து வருகிறோம். ஆட்சி நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால், அதிகாரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, பொறுப்பு கொஞ்சம் கொஞ்சமாக, அதிகமாக வேண்டும். மன மாறுதலை ஏற்படுத்தாமல், சர்வாதிகார ரீதியில் உத்தரவு போட்டு, அந்த உத்தரவைப் பின்பற்றி நடக்காதவர்களை தண்டித்து, ஆட்சி நடத்த முடியாது. ஆட்சி நடத்துபவர்கள் எல்லாவற்றிற்குள்ளேயும் நுழைந்து பார்த்து, ஜாக்கிரதையாக இருந்து, மக்கள் மனதிலே மாற்றம் பண்ணி நடத்திச் செல்ல வேண்டும். எனவே, எதையும் கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பார்த்து, சரியான நேரத்தில் கவனமாகச் செய்ய வேண்டும்.

2. ஜில்லா போர்டுகளை எல்லாம், இப்போது ரத்து செய்துவிட்டோம். முன்பு இருந்த 11 ஜில்லா போர்டுகளின் வரவு செலவு, மொத்தத்தில் 4 அல்லது 5 கோடி இருக்கும். இந்த 11 ஜில்லா போர்டுகளுக்குப் பதிலாக, 363 பஞ்சாயத்து யூனியன்களை அதற்கு வாரிசாக ஏற்படுத்தி இருக்கிறோம். இந்தப் பெரிய மாறுதல்களின் பலன் என்ன என்பது, உங்கள் எல்லோருக்கும் தெரியும். பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றுக்கும், திட்டமிட்ட வரவு செலவுக் கணக்குப் போட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பஞ்சாயத்து யூனியன்களின் மூலம், 5 வருஷங்களில் சுமார் 140 கோடி, பலவித இனங்களில் செலவிடப் போகிறோம். அதாவது, வருடத்திற்கு 28 கோடி ரூபாய் ஆகிறது. 4½ கோடியாக இருந்த வரவு செலவு, இப்போது 28 கோடியாக பெருகியிருக்கிறது.

3. உங்களுக்கும், ஜனங்களுக்கும் பிரியமாக இருப்பது ரோடு முதலிய வேலைத் திட்டங்கள்தான். எப்போதும் நடக்காத அவ்வளவு அதிகமான வேலைகளை, ஒரே சமயத்தில் நாம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். இந்த வேலைகளுக்கு மதிப்பீடு போட வேண்டும். 'செக் மெஷர்' (Check Measure) அதாவது, அளவைத் தணிக்கை செய்தல்) பண்ண வேண்டும். இந்த வேலைகளுக்கெல்லாம் ஜூனியர் என்ஜினீயர்கள், அஸிஸ்டெண்ட் இன்ஜினீயர்கள் முதலிய பல பேர்கள் வேண்டியிருக்கிறது. வேலைகள் நல்ல முறையில் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்றால், ஒவ்வொன்றையும் ஆலோசித்துச் செய்ய வேண்டும்.

4. 'லார்டு லின்லித்கோ' வைசிராயாக இருந்தபோது, 'கிராம அபிவிருத்தி வேலைத் திட்டம்' என்ற ஒன்றை, ஆரம்பித்தார். இந்தியா முழுவதிற்கும், ஒரு கோடி ரூபாய் 'சாங்ஷன்' பண்ணிவிட்டார். அப்போது, அதை ஏதோ பிரமாதமாக நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், அந்த வேலைத் திட்டம், நாம் இப்போது நினைக்கிற மாதிரி, இந்த வேலைத் திட்டமாக இருந்ததில்லை.

5. இந்த வேலைகளுக்கு அடுத்தபடி, கல்வித் திட்டம். இந்தக் கல்வித் திட்டத்தை ஆரம்பிக்கும்போது, இத்திட்டத்திற்காக இவ்வளவு பணம் வேண்டுமென்றும், இவ்வளவு ஆசிரியர்கள் வேண்டுமென்றும், கமிட்டியார் கணக்குப் போட்டிருந்தார்கள். ஆனால், இப்போது யூனியன் வந்த பிறகு, நிலைமை மாறிவிட்டது. முன்பு, திட்டமிட்டிருந்த பணமும், ஆசிரியர்களின் எண்ணிக்கையும், இப்போது 3 பங்கு அதிகமாகியிருக்கிறது. நீங்கள் இந்த யூனியன்வேலையை ஏற்றுக்கொண்ட பிறகு, இவ்வளவு வேலை பெரியதாகியிருப்பது, உங்களுக்கு சந்தோஷம்தான். நாங்களும் அதை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், இந்தக் கல்வித் திட்டத்தை, இனி மேல் நடத்தி வைக்க வேண்டிய பொறுப்பும், கௌரமும், இனி உங்களைச் சார்ந்ததே.

6. மூன்றாவதாக, விவசாயத் திட்டம். விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய பொறுப்பையும், நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இதற்காகக் கண்மாய், ஏரி முதலியவற்றின் பராமரிப்பு, உங்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. "குடி மராமத்து" என்றால் என்ன என்று உள்ளே புகுந்து பார்ப்பதற்கு, ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டு இருக்கிறது. கணக்குப் பிள்ளையின் மனதிலே இருக்கிறதைத் தவிர, ரிகார்டு பூர்வகமாக ஒருவருக்கும் தெரியாமலிருந்த நிலங்கள், இப்போது எங்கெங்கே, என்னென்ன இருக்கின்றன என்று பார்த்து, அதை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய வேலைகள் எல்லாம் அமுலுக்கு வந்திருக்கின்றன. இவையெல்லாம் இப்போதுதான் புதிதாக வந்திருக்கின்றன.

7. மேற்சொன்ன விஷயங்கள் எல்லாம், உங்களுக்குத் தெரிந்த விஷயம். தெரியாத விஷயம் வேறு இருக்கிறது. அதாவது, குடும்பக் கட்டுப்பாடு திட்டம். இந்த திட்டம் எல்லோருக்கும் அனுகூலமாக மாறப் போகிறது. அதைப் பற்றி, எல்லா ஜனங்களுக்கும் சொல்லி, நடவடிக்கை எடுக்க வேண்டிய வாய்ப்பு, உங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. இத்துடன், பெண்கள், குழந்தைகள் சம்பந்தமான வேலைத் திட்டமும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. இப்படி, ஒன்றன் பின் ஒன்றாக, சர்க்கார் வேலை அதிகமாகிக்கொண்டே போகிறது. அந்த அதிகமான வேலையை, உங்களுடைய ஒத்தாசையினால் செய்யும்படியான ஏற்பாடு இது. இவை எல்லாம், சென்ற 18 மாதங்களுக்குள் நடந்த விஷயம்.

8. இந்த 28 கோடி ரூபாய் பூராவையும், எந்த விதத்திலே செலவழிக்க வேண்டும் என்று சொல்லுவதற்கு, ஒரு 'கவர்னிங் பாடி'யாக, (Governing body) அதாவது, 'ஆளும் ஸ்தாபனமாக' பஞ்சாயத்து யூனியன்களை சிலர் அமைத்திருக்கிறார்கள். சில யூனியன் தலைவர்கள் "கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதும், மினிட்ஸ் புத்தகத்தில் கையெழுத்துப் போடுவதும்தான் வேலை, வேறு வேலை இல்லையா" என்று நினைக்கிறார்கள். இன்

னும் சிலர், 'முன்பு இருந்த ஜில்லா போர்டு தலைவர்களுக்கு இருந்ததைப் போல, பள்ளி ஆசிரியர்களை மாற்றுவது, சிப்பந்திகளைத் தண்டிப்பது முதலிய அதிகாரங்கள் இல்லையே' என்று சொல்லுகிறார்கள். ஆனால் 'கவர்னிங் பாடி' வேறு, நிர்வாக அதிகாரி (Executive authority) வேறு என்று முனிசிபல் சட்டத்தில் இருக்கிறது. இந்த ஏற்பாடு சரியில்லை என்று ஸ்ரீ ரத்தினசபாபதி முதலியார் கமிட்டி சொல்லியிருந்தது. அதை எல்லாம் சட்டசபையில் பரிசீலனை செய்தார்கள். பரிசீலனை செய்த பிறகு, 'கவர்னிங் பாடி' வேறாகவும், 'நிர்வாக அதிகாரி' வேறாகவும் செய்வதுதான் சரி என்று தீர்மானம் செய்தார்கள். இதை அடிப்படையாக வைத்துத்தான், இந்தப் புதிய பஞ்சாயத்துச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

9. யூனியன் கௌன்சில், திட்டம் போடவேண்டும். எந்தெந்தத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்ய வேண்டும். வரவு செலவு எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் யோசித்துச் செய்ய வேண்டும். ஆனால், அந்தக் கவுன்சில் போட்ட திட்டத்தை, அவர்கள் வகுத்த வரவு செலவுப்படி நிர்ணயம் செய்வதற்கு, தனியாக ஓர் அதிகாரியைப் போட்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிதான் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர். இந்த யூனியன் கமிஷனருக்கு உதவியாக, வேறு சில சிப்பந்திகள் இருக்கிறார்கள். இந்த சிப்பந்திகளுடைய மனதிற்குள் புகுந்து பார்த்து, அவர்களிடம் வேலை வாங்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தீர்மானித்தபடி, கமிஷனர் காரியங்களை செய்ய வேண்டும். 'அந்த வேலைகளை எல்லாம் சர்க்கார் சிப்பந்திகள் பார்ப்பதுதான் நல்லதா, அல்லது, தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பார்ப்பது நல்லதா' என்ற விஷயங்களை எல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்த பிறகு, சர்க்கார் 'சிப்பந்திகளிடம் கொடுப்பதுதான் நல்லது' என்று முடிவு செய்திருக்கிறார்கள். சர்க்கார் சிப்பந்திகள் தவறு செய்ய மாட்டார்கள் என்பதல்ல. ஏதாவது பிசகு நடந்துபோய் விட்டது என்றால், சட்டசபையில் உள்ளவர்களுக்கோ, அல்லது பொது மக்களுக்கோ ஜவாப் சொல்ல வேண்டியவர், முதலமைச்சர். குறைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பை, சர்க்கார் ஏற்றிருப்பதால்தான், சர்க்கார் சிப்பந்தியாக உள்ள கமிஷனரிடம், நிர்வாகப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதைச் சரி என்றுதான் சொல்ல வேண்டும்.

10. சர்க்கார் சிப்பந்திகள், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை, மரியாதையுடன் நடத்த வேண்டுமென்று சொல்லி, அவர்களுக்குப் பயிற்சிகள் எல்லாம் கொடுத்து வருகிறோம். சர்க்கார் சிப்பந்திகளும், விஷயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்துகொண்டு வருகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் சேர்மேனுக்கு, ஏதாவது ஒரு அவமரியாதை வந்தது என்றால், அது சர்க்காருக்கு ஏற்பட்ட ஒரு அவமரியாதையாகும். இம்மாதிரி நடக்கக் கூடாது. சர்க்காருக்கு எப்படி மரியாதை கொடுக்கிறோமோ, அதே மாதிரி அந்தக் கிராமத்தில் இருக்கிற அதிகாரியும், அந்தத் தலைவரிடம் மரியாதையுடன் நடக்க வேண்டும் என்று, சொல்லி வருகிறோம். அதை சர்க்கார் சிப்பந்திகளும் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்துகொண்டுவருகிறார்கள். இதை நடைமுறைக்குக் கொண்டுவரும்போது சில பேருக்குத் தெரிகிறது; சில பேர்களுக்குத் தெரியவில்லை. அதற்கு ஒரு முறை ஏற்படுத்த வேண்டும். அதே மாதிரி, எந்த விதமான வேலை நடைபெறுவதாய் இருந்தாலும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குத் தெரிந்து நடக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அபிப்பிராயத்துக்கு மாறுதலாக, சர்க்கார் சிப்பந்திகள் நடக்கக் கூடாது. அப்படி நடக்க வேண்டுமென்று சொன்னால், அதை சர்க்காருக்குத் தெரியப்படுத்த வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் பிரதிநிதியாகச் சேர்மன் இருக்கிறார். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கூட்டத்துக்கு விரோதம் இல்லாமல், ஒரு விஷயத்தை இந்த மாதிரி தான் செய்ய வேண்டுமென்று சேர்மென் சொன்னால்' பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அதைச் செய்ய வேண்டும். ஆகையினால், இரண்டு பேருடைய சம்பந்தமும் மிகவும் நுணுக்கமான விஷயம். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குக் கட்டுப்பட்டிருக்கிறவர். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்தான், பஞ்சாயத்து யூனியன் சேர்மென் என்பதை, நினைத்து நடக்க வேண்டும். இதை நடைமுறையில் செய்யும்போது, பஞ்சாயத்து யூனியன் சார்பாக 'இதைச் செய், அதைச் செய்' என்று அங்கே இருக்கிறவர்களைக் கூப்பிட்டுச் செய்யச் சொல்ல வேண்டியிருக்கிறது. இதை எல்லாம், நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். 18 மாதங்களுக்குள் எவ்வளவு காரியம்தான் செய்ய முடியும்?

11. இந்த விஷயங்களை எல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டு, நீங்கள் ஊருக்குத் திரும்பிப் போனால், அதனால் பிரயோசனம் உண்டு. அதிருப்தியோடோ அல்லது விஷயத்தை நன்கு தெரிந்கொள்ளாமலோ போகிறீர்கள் என்றால், இதில் பிரயோஜனம் இல்லாமல் போய்விடும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் மூலமாக, நல்ல வேலைகள் நடைபெறுவதற்கு, எந்தெந்த விஷயங்களை எப்படிச் செய்தால் நல்லதோ, அப்படிச் செய்து, உங்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தையும், பொறுப்பையும், நல்ல முறையில் செய்வீர்கள் என்று நம்புகிறேன்."

ஆர். ஏ. கோபாலசாமி.
தலைமைக் காரியதரிசி.

கல்லூரிப் பாடப் புத்தகங்கள், தமிழில் வெளியிடும் முயற்சிக்கு வாழ்த்து

முதல் அமைச்சரின் கருத்துரை

[தமிழ் மொழி வளர்ச்சிக்காக, தமிழ்நாடு அரசாங்கம், பல்வேறு வேலைத் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வருவது யாவரும் அறிந்ததே. அவற்றுள், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது, தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சி மன்றத்தை நிறுவியதாகும். மூன்றுண்டுகளுக்கு முன் குடியரசு தினத்தன்று, நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் துவக்கப்பட்ட இம் மன்றம் தமிழ் மொழி வளர்ச்சிக்காக, ஆக்கப் பணிகள் பலவற்றைப் புரிந்து வருகிறது. அவற்றுள் முக்கியமானது, கல்லூரிகளில் தாய் மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் எடுத்த முடிவினைச் செயல்படுத்துவதற்காக 'கல்லூரித் தமிழ்க் குழு' இம் மன்றத்தினுல் அமைக்கப்பட்ட தாகும். 'கல்லூரிகளிலே, தமிழ் மொழி வாயிலாகக் கல்வி கற்பிக்க, போதிய பாட நூல்கள் இல்லை' என்ற குறையைப் போக்க வேண்டி, இக் கல்லூரித் தமிழ்க்குழு, தக்க நடவடிக்கைகளை எடுத்தது. அதையொட்டி, பி. ஏ. வகுப்புகளுக்கான பாட நூல்கள் பல வெளியாயின. அப் பாட நூல்களின் கண்காட்சி விழா ஒன்று. கோவையில் நடைபெற்றது. தமிழ்ப் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டு பேசினுர். அக் கண்காட்சியை முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் துவக்கி வைத்தபோது, ஆற்றிய சொற்பொழிவை, கீழே வெளியிட்டுள்ளோம். தமக்கே உரித்தான எளிய தமிழில், காரண-காரியங்களை எடுத்துக் கூறிய முதலமைச்சரின் விளக்கவுரை, எல்லோருடைய சிந்தனைக்கும் அரியதொரு விருந்தாகும்.
—ஆசிரியர்.]

தலைவர் அவர்களே, நண்பர்களே !

நம்முடைய மீனுட்சி சுந்தரனுர் நகைச்சுவையோடு ஒரு பிரசங்கத்தைச் செய்தார்கள். அவர் சொன்ன வார்த்தைகளிலிருந்து, இந்தப் புத்தகங்களைத் தயாரித்து வெளியிடுவதற்கும், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து தாய் மொழியிலே மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் எடுத்துக் கொண்ட முயற்சியில் எவ்வளவு சிரமம் இருக்கிறது என்று தெரிகிறது. "இந்த 1½ ஆண்டுகளாகச் செய்த முயற்சியையும், இந்த 23 புத்தகங்களையும் ஒத்திட்டுப் பார்த்தால், உடனே உங்களுக்கு இவ்வளவுதானு என்று நகைப்பு வந்தாலும் வரும், ஆனல் எங்களுடைய சிரமம் உங்களுக்குத் தெரியாது. இப்புத்தகங்களை வெளிக்கொண்டுவர மிகச் சிரமப்பட்டு இருக்கின்றோம்" என்று சொன்னுர்கள். எப்போதுமே புதிய வழியிலே போகிறது மிகவும் சிரமமான காரியம். புதிய வழியிலே போகும் போது, பழைய வழியிலே பழக்கப்பட்டவர்கள் யாரும் புதிய வழிக்கு வரமாட்டார்கள். சாதாரண ஜனங்கள் ஒரு வேளை வந்து விடுவார்கள் புதிய வழிக்கு; ஆனுல் படித்தவர்கள் வரவே மாட்டார்கள் ஒரே பிடிவாதம் பண்ணுவார்கள். பழக்கத்தைத் திடீர் என்று மாற்றிக்கொள்வது அவர்களுக்கு மிக்வும் சிரமம். சாதாரண ஜனங்களுக்கு இது நன்ருகப் புரியும். ஏனென்ருல், அவர்களுக்கு விஷயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை இருப்பதனுல், நல்லது எது கெட்டது எது என்பதை உடனே தெரிந்து கொள்ளுகிருர்கள். புதிய வழி நல்லது என்று தோன்றினுல் அதில் போக அவர்களுக்குப் பயமே இல்லை. பழைய வழியையே பிடித்துக்கொண்டு போகின்றவர்கள் படித்தவர்கள். புதிய வழிக்குப் போக வேண்டுமானுல் நமக்கு ஏன் இந்த சிரமம் என்று படித்தவர்கள் நினைப்பது இயற்கை. எனவே நம் தாய் மொழியை நம்முடைய மாணவர்களுக்குக் கல்விப் பயிற்சி மொழியாக்கி, அதன் மூலம் எல்லா விஷயங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நாம் நினைக்கும்போது, படிக்காதவர்களுக்கும், படித்தவர்களுக்கும் இந்த முரண்பாடு ஏற்படத் தான் செய்யும். இருந்தாலும் தாய் மொழியிலே பாடங்களைக் கற்றுக்கொடுப்பது தான் இயற்கை. மக்களுக்குப் புரியாத மொழியில் பேசினுல் எது வேண்டுமானுலும் பேசிக் கொண்டே போகலாம். மக்களை ஏமாற்றுவதற்கு, புரியாத மொழியில் பேச வேண்டும் என்பது அர்த்தம். எல்லாருக்கும் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் பேசினுல் ஏமாற்ற முடியாது. உடனே கண்டுபிடித்துவிடுவார்கள். படித்தவர்கள் எங்கே தப்புச் செய்கிருர்கள் என்று ஹாஸ்யமாகவும், வேடிக்கையாகவும், அவருடைய அனுபவத்தைக் கொண்டு சொன்னுர்; அது உண்மையாகவும் இருக்கலாம். இந்த நிலைமை போக வேண்டுமானுல், நம்முடைய தாய் மொழியிலேயே, தமிழ் மொழியிலேயே நல்ல புத்தகங்கள் வெளியிடவேண்டும். தமிழ் மொழியாகிய தாய் மொழியைப் பயிற்சி மொழியாக்கி நம்முடைய மாணவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது சில பேர் அதற்கு ஆட்சே

பீனயை-எதிர்ப்பு அல்ல, எதிர்ப்பாக இருக்க முடியாது: சத்தம் போட்டுச் சொல்லுகிருர்கள். தாய்மொழி வேண்டாம் என்று சொல்ல முடியுமா? சில சமயங்களில் கலைச் சொற்கள் இல்லை. புத்தகங்கள் இல்லை, பயிற்சி அளிக்க முடியாது, பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் கிடையாது என்று சொன்னர்கள். அந்தக் குறையை நீக்குவதற்குத்தான் இந்த முயற்சி எடுத்து இருக்கிறோம். அந்தக் குறையை நீக்குவதற்காகவே, தமிழிலே எல்லாப் பாடங்களையும் சொல்லிக்கொடுப்பதற்கு வேண்டிய கலைச் சொற்களைத் தேடிப் பிடிக்கவும், அதை அமைத்துக் கற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய புத்தகங்களை வெளியிடவும் அரசாங்கத்தார் தக்க ஏற்பாடு செய்து இருக்கிருர்கள். இன்னும் கொஞ்ச காலத்தில் தனிப்பட்டவர்கள் கூடப் புத்தகம் தயாரித்து வெளியிட ஆரம்பிப்பார்கள். ஆரம்பத்தில் தயங்குவார்கள். எல்லோரும் படிக்க ஆரம்பித்துவிட்டால், வியாபாரிகளுக்கு அந்தச் சரக்கு விற்குமா, விற்காதா என்பதைப் பற்றி எப்போதுமே நன்ருகத் தெரியும். ஆரம்பத்தில் நடக்குமா நடக்காதா என்றும், இந்தப் புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டால் வீணுகப் போய்விடுமோ என்றும் பயந்துகொண்டு முன்னுக்கு வரமாட்டார்கள். நடைமுறைக்கு வந்து, உறுதியாக நிலைத்து விட்டது என்று தெரிந்து கொள்ளும் வரையில், பார்த்துக்கொண்டேதான் இருப்பார்கள். தாய் மொழியை, கல்லூரிக் கல்வி மொழியாக்கும் கொள்கையை அரசாங்கத்தார் விட்டுவிடப் போவது இல்லை இந்தக் கொள்கையை அரசாங்கத்தார் நடத்தித்தான் பார்க்கவும் போகின்ருர்கள். இல்லாவிட்டால் இவ்வளவு சிரமம் ஏன் படவேண்டும்? நல்ல கொள்கை என்பதை உணர்ந்ததனுல்தான், இந்தக் கொள்கையைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று அரசாங்கத்துக்கு எண்ணமிருக்கிறதானுல்தான், இவ்வளவு சிரமப்பட்டுப் புத்தகங்களை வெளியிடவும், அதற்கு என்று ஒரு குழுவினரை ஏற்படுத்திக் கொண்டு மேலும் மேலும் முயற்சி எடுத்துக்கொண்டும் வருகினருேம். இதை விட்டு விடுவோம் என்று யாரும் கனுக்காண வேண்டாம்.

ஏழைச் சிறுவர்க்கும் ஆங்கிலக் கல்வி

ஆனல் நம்முடைய தாய்மொழி வளர்ச்சி எவ்வளவு அவசியம் என்று நினைக்கின்ருேமோ, அதே போல, உலகத் தொடர்பையும் அறுத்துக்கொண்டுவிட முடியாது. குறுகிய எல்லைக்குள் மட்டும் நாம் இருக்க முடியுமா? இருக்க முடியாது. உலகத் தொடர்பு வேண்டுமானுல் ஆங்கிலம் அவசியம் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து இருக்கிருேம். எல்லோருக்கும் என்ன பயம்? தமிழைப் பயிற்சி மொழியாக்கி அதிலேயே எல்லாப் பாடத்தையும் கற்றுக் கொடுக்கக்கூடிய காலத்தில், நம்முடைய குழந்தைகளுக்கு ஆங்கில அறிவு குறைந்து போகுமே என்பதுதான் பயம். அதற்குரிய ஏற்பாட்டை நாம் செய்தால்தான் அந்தக் குறையை நீக்க முடியும். அதற்கும் ஏற்பாடு செய்து இருக்கின்ருேம். ஆங்கிலத்தில் நல்ல முறையிலே நம்முடைய குழந்தைகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்கிருேம்.

இதில் பல சிக்கல் இருக்கிறது. பல மொழிகள் படிக்க வேண்டி இருக்கிறது. பல மொழிகளைப் படிக்க வேண்டிய கஷ்டம் போக வேண்டுமென்ருல், ஏதாவது ஒரு மொழியிலே நாம் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும் ' அதற்கு ஆங்கிலமே இருந்தால் போதாதா என்று கேட்கின்ருர்கள். அது எப்படி? ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகவோ கல்வி மொழியாகவோ ஒத்துக்கொள்ள முடியாது. நம்முடைய தமிழை விட்டுவிட்டு, தாய் மொழியை விட்டு விட்டு, அதைப் படித்துப் புரிந்து கொள்ளாமல், அதை விருத்தி செய்யச் சிரத்தை எடுத்துக்கொள்ளாமல் பிற மொழிகளிலேயே நாம் காரியம் நடத்திக்கொண்டு போக முடியுமா? முடியாது. எனவே நம்முடைய தாய் மொழி வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்ருேமோ அதைப் போல முக்கியத்துவம் உலக மொழிகளுக்கும் கொடுத்ததாக வேண்டும். உலகத் தொடர்பு நமக்கு வேண்டுமானுல், அதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொண்டு, நம்முடைய குழந்தைகள் ஆங்கிலத்தைச் சிறந்த முறையில் படிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அதற்காகவே, சிறு வயதிலேயே ஆங்கிலம் கற்றுத் தருவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்ருேம். ஆகவே, பல மொழி கற்கும் பிரச்சினையை ஒத்துக்கொண்டே தீர வேண்டும். இதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. நாம் தமிழில் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக, தமிழை பயிற்சி மொழி ஆக்கிக் கொண்டு, நம்முடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க முயற்சி எடுத்துக்கொண்டே இருக்கின்ருேம். ஆனல் சமுதாயத்தில் நல்ல அந்தஸ்து உள்ளவர்கள் படித்தவர்கள், பணக்காரர்கள், இதற்கு முன் வரமாட்டார்கள். கான்வெண்டில் தங்கள் பிள்ளைகளைக் கொண்டு போய் விடுவார்கள். அவர்கள் குழந்தைகள் பல மொழிகள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிருர்கள். சாதாரண ஜனங்கள் மனதிலே என்ன படுகிறது? என்ன இவர்கள் எங்கெங்கேயோ போய்க் கொண்டு இருக்கின்ருர்களே என்ற சந்தேகம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கான்வெண்டுக்கு அனுப்புகிருர்களே ? நம்முடைய பிள்ளைகளை மட்டும் தமிழ் படி என்கிருர்களே என்ற சந்தேகம் வருகிறது. சந்தேகம் ஏற்படவில்லை என்று சொல்ல முடியாது. சந்தேகத்தைப் போக்கித்தான் தீர வேண்டும். பல மொழிகளைக் கற்பித்துத் தங்களுடைய குழந்தைகளை முன்னேறும்படி செய்ய வசதியற்றவர்கள், 20 முதல் 30 ரூபாய் கொடுத்து எப்படி கான்வெண்டில் படிக்க வைக்க முடியும்? பலர் 5 ரூபாய் கொடுத்துப் படிக்க வைப்பதற்கே கஷ்டப்படுகிருர்கள். இன்னும் 25 ரூபாய் யார் கொடுப்பது? இந்த நிலைமை இருந்து கொண்டேதான் இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியாது. அதற்குப் பரிகாரம் தேட வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தார் இந்தத் தாரதம்மியத்தைப் போக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்ருர்கள். பணக்காரர்களின் பிள்ளைகள் பல மொழி கற்கும் நிலையையும் ஏழைகள், தமிழ் மட்டும் கற்கும் நிலைமை

யும் மாற்ற வேண்டும். இதற்காகவே, பழையபடி ஐந்தாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தை ஆரம்பித்துக் குழந்தைகளுக்கு ஆங்கில மொழி அறிவை வளர்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

நாட்டின் ஒற்றுமையும் மொழியும்

மேலும், நம்முடைய தமிழ்நாடு, இந்தியா தேசத்திலே சேர்ந்து இருக்க வேண்டுமா, வேண்டாமா? இது ஒரு பிரச்சினை; இது ஒரு சிக்கலான பிரச்சினை; முடிவு சுலபமாகக் காணக்கூடிய பிரச்சினை அல்ல. உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய பிரச்சினையாக இருப்பதனால் ஜாக்கிரதையாக நடக்க வேண்டி இருக்கிறது. கவர்ன்மெண்டு சம்பந்தப்பட்ட வரையில், நம் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு சிறு பகுதிதான். இந்தியாவின் உறவு இல்லாமல் முடியாது. அதற்கு இந்தி வேண்டும். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த மட்டில் தமிழ் மொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்றையும் படித்துத்தான் ஆக வேண்டும்.

ஆனால் கட்டாயப்படுத்தினாலோ ஒரே கூச்சல் உண்டாகி விடும். இவர் யார்? இவருக்கு என்ன தெரியும்? மூன்று மொழியைப் படிக்கச்சொல்லுகிறாரே; படிக்கிறது அவ்வளவு சுலபமா என்ற கேள்விகள் பிறக்கும். அதனால் கட்டாயப் படுத்த முடியாது. படிக்க வேண்டும் என்று இஷ்டப்படு பவர்களுக்கு வசதியும் நாம் செய்து கொடுத்தாகவேண்டும். ஆங்கிலம் படிப்பேன் என்று சொன்னால் அதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். இந்தியும், படிப்பேன் என்று சொன்னால் அதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். தமிழ் மட்டும் வேண்டும் என்றாலும் அவர்கள் படிக்கட்டும். இதைத்தான் அரசாங்கத்தின் கொள்கையாக வைத்து இருக்கின்றோம். கட்டாயப்படுத்தாமல் அவர்களுக்கு இஷ்டமான மொழியிலேயே அறிவு வளர்ச்சி அடைவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பயிற்சி மொழியில் புத்தகங்கள்

தமிழிலேயே நாம் நல்ல புத்தகங்களை எழுதி அதைப் பயிற்சி மொழியாக்கிக் கொண்டு, காரியங்கள் செய்வதனால், எல்லோரும் ஆங்கிலத்தை நன்றாகப் படிக்க முடியுமா என்ன? ஆங்கிலம் மூலம் பாடம் படித்தவர்களுக்கே, இப்போது ஆங்கில மொழியறிவு அரைகுறையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாள் போனால் அவர்களுக்கும் ஒன்றுமே புரிந்து கொள்ள முடியாது. நாம் என்றைக்கு ஆங்கிலத்தைப் பயிற்சி மொழி நிலையிலிருந்து எடுத்துவிட்டோமோ, அப்புறம் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள முடியும் என்று சொல்ல முடியாது. அப்புறம் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள முடியுமா? எல்லோரும் எழுதுவார்கள், படிப்பார்கள், ஆனால் அரைகுறையாய்த்தான். ஆங்கிலத்தில் இப்போது ரொம்பப் பேர் ஆங்கிலேயனை விட அழகாகப் பேசக்கூடிய சக்தி வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை போய் விடும். கொஞ்சம் பேருக்குத்தான் ஆங்கிலம் தெரிந்து இருக்க முடியும். இருந்தாலும் இந்தக் கொஞ்சம் பேர் யார் என்று நாளடைவில் உருவாகலாம். இவர்கள் வெளிநாடுகள் சென்று ஆங்கிலத்தை உபயோகிக்கப் போகிறார்களா என்பது வேறு விஷயம்.

பெரும்பான்மையோருக்குத் தமிழ்தான் புரிந்து இருக்கும். அவர்களுக்கு வேண்டியது புத்தகங்களும், அறிவும்தான். தமிழ் மாத்திரம் தெரிந்தவர்களை விட்டு விட்டுப் போக முடியுமா? உனக்கு தமிழ் மட்டும்தான் தெரியுமா, அது உன் தலையெழுத்து, நீ போ என்று உதறித் தள்ள முடியுமா என்ன? உன்னை யார் தமிழ் படிக்கச் சொன்னது என்று சொல்லிவிட்டு ஓட முடியாது! அப்படிச் செய்தால் சமூகத்தில் பொறுப்பு அற்றவர்கள் ஆகிவிடுவோம். சமூகத்தில் பொறுப்புள்ளவர்கள் பொது மக்களுக்கு என்ன என்ன வேண்டுமோ அந்தத் தேவைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொடுப்பது தான் கடமை.

எளிய தமிழில் நூல்கள்

பெரும்பான்மையோருக்கு, அதாவது 100-க்கு 90 பேருக்குத் தமிழ் தவிர வேறு ஒன்றும் தெரியாது. எல்லோரும் எல்லா மொழிகளையும் தெரிந்து இருக்க முடியுமா என்ன? எல்லா மொழிகளையும் படிப்பதற்கு எங்கே நேரம் இருக்கிறது? நேரமே கிடையாது! வயிற்றுப் பிழைப்புக்குச் சம்பாதிக்கவே நேரம் இல்லையே வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு யார் படிக்க முடியும்? நம்மால் படிக்க முடியுமா என்ன? ரொம்ப சிரமமான காரியம். இந்தப் புத்தக வெளியீடுகளை எல்லாம் படிக்கணும் என்கிற ஆசைதான் எனக்கு. ஒரு தடவை படிப்பது நல்லதுதான். எனக்கு எங்கே நேரம் இருக்கிறது? இதே மாதிரிதான் எல்லோரும் ஆனதினாலே ஒரே மொழியைப் படிக்க நேரம் இல்லாதபொழுது, பல மொழிகளை எப்படிப் படிக்க முடியும். படிக்க முடியாது. தமிழ் தாய் மொழியாக இருக்கின்றதனால் அது பழக்கமான மொழி. அந்த மொழியை தெரிந்தவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். இந்தத் தாய் மொழியே சிரமப்பட்டு எழுதப் படிக்க கற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்கள் சுலபமாகப் படிக்கக்கூடிய இம்மாதிரியான புத்தகங்கள் அவசியம். தமிழ் மக்கள் எல்லோருக்கும் அறிவு வளர்ச்சியடையவேண்டும். ஆங்கிலம் கற்றவர்கள் மட்டும் அறிவு வளர்ச்சி பெற்றால் ஒரு நாளும் போதாது. பொது மக்கள் அறிவு வளர்ச்சி அடைய வேண்டுமானால் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மட்டும் அல்ல, எல்லோருக்கும் உபயோகப்படக்கூடிய முறையில் தமிழ் மொழியில் புத்தகங்கள் வெளியிடவேண்டும். மீனாட்சி சுந்தரனார் சொன்னதுபோல இவை மாணவர்களுக்குத் தயார் செய்தது. சாதாரண மக்களுக்கு வேறு தயார் செய்ய வேண்டும் என்று சொன்னார். காரணம் என்ன? அவர்களுக்குப் புரியாது என்ற எண்ணத்தில் அவ்வாறு கூறி இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். கொஞ்சம் சிரமம்தான். தமிழிலேயும், தனித்தமிழாக, சுத்தத் தமிழாக வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். அந்த ஆசை நல்லதுதான். அதற்காகப் புரியாத வார்த்தை

களைப் போட வேண்டாம். புரியாத வார்த்தைகளைப் போட்டால் யாருக்கு என்ன லாபம்? ஒருவரோடு ஒருவர் பேசுவதெல்லாம், ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்குத்தான். மொழி வல்லமையைக் காட்டுவதற்கு அல்ல. அப்படி வேண்டும் என்றால் புலவர் குழுக் கூட்டத்தில் உட்கார்ந்து, அவர்களுடைய உணர்ச்சிகளை, சாமர்த்தியங்களை, சொல் அலங்காரங்களை, கவியாகப் பாடச் சொல்லிக் கேட்கலாம். அது இனிமையாக இருக்கும். இதனால் நான் சொல்லுவது என்ன என்றால் எளிய தமிழ் நடையிலேயே, எல்லோரும் புரிந்து கொள்ளும் படி, எழுதவேண்டும்.

ஆங்கிலத்தின் அவசியம்

சாதாரணமாக மக்கள், மத்தியிலே நடைமுறையில் இருக்கக்கூடிய வார்த்தைகளைப் பழக்கத்தில் கொண்டு வரவேண்டும். புதிய தமிழ் வார்த்தைகள் நல்லதாக இருந்தால் அதையும், பழக்கமான வார்த்தையாய் இருந்தால் இதையும், இரண்டையும் சேர்த்துக் கொள்ளலாம். சில வார்த்தைகள் நாளடைவில் பழக்கத்தில் நின்று விடலாம். இப்பொழுது யாரைப் பார்த்தாலும் வணக்கம் என்று சொல்லுகிறார்கள். 40, 50 வருஷத்திற்கு முன்னால் யாராவது வணக்கம் என்று சொன்னார்களா? இல்லை. நமஸ்காரம் என்றுதான் சொன்னார்கள். சின்னப் பையன்கள் கூட இப்போது வணக்கம் என்று சொல்லுகிறார்களே! இடைக்காலத்தில் இப்படித்தான் ஒரு விதமாக இருக்கும். நாளடைவில், நடைமுறையில் பழக்கத்தில் வரக்கூடிய காலத்தில் சில சொற்கள் உறுதியாக நிலைத்து போய் விடும். சில பதங்களுக்குத் தனித் தமிழாக்கினால் அது நீளமாகக் கணக்கில்லாமல் போகும். எங்கேயோ சுற்றிச்சுற்றிக் கொண்டு போகும். சொல்லி முடிப்பதற்குள் ஆரம்பித்தது மறந்துபோய் விடும். ஒரு வார்த்தை சொன்ன உடனே சட்டென்று மனதில் அதன் அர்த்தம் படவேண்டும். அதை ஞாபகத்தில் கொண்டு வருவதற்கு ஒரு நிமிஷம் நினைக்க வேண்டி இருக்கக் கூடாது. அந்த மாதிரி அவஸ்தை இல்லாமல் வரும் சொற்களை, வேறு மொழிச் சொல்லாக இருந்தாலும் அப்படியே போட்டு விடலாம். ஆங்கிலச் சொல்லையும், இந்திச் சொல்லையும் அப்படியே போடலாம். அதிலே என்ன தப்பு என்றுதான் கேட்கிறேன். அதில் ஒரு தப்பும் இல்லை. அப்பொழுதுதான் தமிழ் மொழி மிக வலிவுள்ளதாக வளர்ச்சி அடையும். மொழி வளர்ச்சி அடைந்து தமிழ் நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைய ஆசைப்படுகின்றோம். அதற்காகவே தான் தமிழைப் பயிற்சி மொழியாக்கிக் கல்லூரிகளிலேயும் புகுத்த வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

தமிழ் வளர்ச்சியைச் சுற்றி வட்டம் போட்டுக்கொண்டு அதன் உள்ளேயே உட்கார்ந்துகொண்டுதான் இருக்கப் போகிறேன் என்றால், இருக்கலாம். உலகத் தொடர்பு வேண்டாம் என்றால், இப்படியே இருக்கலாம். உலகத் தொடர்பு இல்லாமல் இக் காலத்தில் இருக்கவே முடியாது. அந்தக் காலத்தில் ரோடு மார்க்கம் இருந்ததா, வான மார்க்கமாகப் போனார்களா? இல்லை. அல்லது போக முடிந்ததா? அதுவுமில்லை. ஆனால், இந்தக் காலத்தில் அப்படி இல்லாமல் நமக்குப் பல தொடர்புகள் ஏற்பட்டு விட்டன. அப்படிப்பட்ட தொடர்புகள் அவசியம் வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் வளர்ச்சி தடைப்பட்டுப் போகிறது. தமிழ் மொழி வளர்ச்சிக்கும் இவ்வுலகத் தொடர்பு அவசியம். அதிலேயும் விஞ்ஞானத் துறைக்குள் புகும் போது ஜாக்கிரதையாக இருக்க ஆசைப்படுகிறோம். அதை அவ்வளவு எளிதாகத் தமிழுக்கு கொண்டுவருவது முடியாது. அதற்கு ரொம்ப நாள் ஆகலாம். திடீர் என்று அதில் கை வைக்கும் உத்தேசம் நமக்கு இல்லை. எப்படியும் ஒரு காலம் வரும்; வராமல் போகாது. இதில் கொஞ்சம் சிரமம் இருக்கிறது. தமிழ் மூலம் படித்துவிட்டு, அப்புறம் ஆங்கில அறிவு இல்லாமல் இருந்து விடுமோ, விஞ்ஞானத் துறைக்குப் போகும் பொழுது தடுமாற்றம் கஷ்டம் ஏற்படுமோ, என்ற பயம் இருக்கிறது. அதற்கு ஒரே பரிகாரம் தான் இருக்கிறது. அதாவது ஆங்கில மொழியில் நல்ல பயிற்சி அளிப்பது தான் அந்தப் பரிகாரம். வேறு வழி கிடையாது. நம்முடைய குழந்தைகள் ஆங்கில அறிவைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சியிலே, நாம் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அதை எடுத்துத்தான் ஆகவேண்டும்.

ஆசிரியர்களின் கடமை

இதிலும் ஆசிரியர்களுக்கு ரொம்பப் பொறுப்பு இருக்கிறது. காரணம், சாதாரணப் பெற்றோர்களின் குழந்தைகளும், பண வசதி இல்லாத குழந்தைகளும் படிக்க வருகின்றார்கள். அவர்களுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பது ஆரம்ப காலத்தில் கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். அவர்களுக்கு ஆங்கிலப் படிப்பு வராது. கான்வெண்டில் சேர்ந்து இருக்கிற பையன்களுக்கு நன்றாக ஆங்கிலப் படிப்பு வருகிறது. அவர்களுக்கு மாத்திரம் தான் ஆங்கிலம் வருமென்று அவர்களுக்கு மட்டும் சொல்லிக் கொடுத்தால், மற்ற ஏழைப் பிள்ளைகளின் கதி என்னவாகிறது? அந்த ஏழைக் குழந்தைகளின் பெற்றோர்கள் ஆசிரியர்களையே நம்பி இருக்கிறார்கள். பையனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாகிவிட்டது; இனி ஆசிரியர்களே கதி என்று இருந்து விடுகிறார்கள். பணக்கார பெற்றோர்களுக்கு ஆசிரியர்களிடத்தில் நம்பிக்கை இருக்கிறதா என்ன? இல்லை. பையன்கள் வீட்டுக்கு வந்த உடனே அவர்கள் வீட்டில் பெற்றோர்கள் பள்ளியில் என்ன சொல்லிக் கொடுத்தார்கள் என்று பரீட்சை பண்ணிப் பார்க்கிறார்கள். பண வசதி அற்ற பெற்றோர்கள் தம் குழந்தைகளைப் பரீட்சை பண்ணியா பார்க்கிறார்கள்? பரீட்சை பண்ணிப் பார்க்கவும் தெரியாது; அவர்கள் பார்க்கவும் முடியாது; நேரமும் கிடையாது. ஆகவே உங்களையே நம்பி அனுப்புகிறார்கள். ஆசிரியரே நீரே கதி என்று நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதனால் பொறுப்பு எங்கே இருக்கிறது? நம் கையில் கொண்டுவந்து ஒப்படைக்கிறார்கள். எல்லாம் ஆசிரியர்களின் பொறுப்புதான். அவரே தான் பார்த்துக்கொள்ளவேண்டும். இது ஆசிரியர்களின் கடமை. ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமம். அந்தச் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் ஆசிரியர்கள் அவர்

களுக்கு ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். கிராமந்தோறும், பள்ளிகள் ஏற்பட்டு இருக்கின்றன. கிராமப்புறப் பள்ளிகளில் படித்து விட்டு வந்த உடனே ஆங்கிலம் கற்றுக்கொள்வது கொஞ்சம் சிரமம். கிராமப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களுக்கு ஆங்கிலத் திறமை இருக்கிறதா என்று சந்தேகம். ஆகவே, அங்கிருந்து வரும் பையன்களுக்கு ஆங்கிலத்தில் படிப்பதற்குச் சிரமம் இருக்கும் ஆரம்பத்தில். அந்த சிரமத்தைப் பொருட்படுத்தாமல், தேவையான நல்ல முறையில் பொறுமையோடு இருந்து, எல்லாக் குழந்தைகளுக்கும் ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற ஆர்வம் ஆசிரியர்களுக்கு இருந்தாலொழிய, இதில் வெற்றி அடைய முடியாது. அரசாங்கத்தார் புத்தகம் எழுதி, பிரசங்கம் செய்துகொண்டு இருக்கலாம். நடைமுறைக்குக் கொண்டுவரும்போதுதான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஏழைப் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்க ஒரு ஆவேச மனப்பான்மை இருக்க வேண்டும். ஆங்கிலம் கற்றுக் கொடுக்க வசதி இல்லையென்று நான் சொன்னால் ஏழை மக்கள் சும்மா இருப்பார்களா? சத்தம் போடுவார்கள். சத்தம் போடாமல் வீட்டிலே சும்மா உட்கார்ந்து கொண்டு இருப்பார்களா? நான் ஊர்களைச் சுற்றி வருகிறேனே, அவர்கள் கேட்பதை நான் அசட்டை செய்ய முடியுமா? நமக்கு சிரத்தை வேண்டும்; ஆர்வம் வேண்டும்; உணர்ச்சி வேண்டும். இந்த ஏற்பாட்டைச் செய்தால்தான் நடைமுறைக்கு வரும்.

அறிவு வளர்ச்சிக்குப் புத்தகங்கள் அவசியம்

படித்த ஜாதி, படிக்காத ஜாதி, ஆங்கிலம் படித்த ஜாதி, ஆங்கிலம் படிக்காத ஜாதி, என்று உண்டாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆங்கிலத்திற்கு இருக்கக்கூடிய உயர்வை குறைத்துக்கொள்ள முடியாது. எல்லாக் குழந்தைகளுக்கும் நல்லமுறையில் ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுப்பதன் மூலம்தான் தமிழ் மொழிக்கு ஆக்கம் வரும். அவ்வளவு சுலபமாக ஆங்கிலத்தைத் தள்ளிவிட முடியாது; தள்ளவே முடியாது என்பது என் கருத்து. எனவே நல்ல முறையில் ஆங்கில மொழிப் பயிற்சிக்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். அரசாங்கத்தார் அதிகமாக சிரத்தை எடுத்துக்கொண்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்துப் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலத்திற்கு உயர்வை அளித்திருக்கிறார்கள். அதைப் போலத் தமிழிலே இன்னும் பல புத்தகங்களை எழுத ஆரம்பிக்கவேண்டும். தமிழிலே நல்ல புத்தகங்கள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன. சமீப காலத்தில் தமிழ் நாட்டில் எல்லா விதமான புத்தகங்களும் வந்துகொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே படித்தவர் தொகை பெருகிக்கொண்டு வருகிறது. படித்து எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆர்வம் இருக்கிறது. அந்த ஆர்வத்தை நிறைவேற்றுவதற்கு நல்ல புலமை உள்ளவர்களைக்கொண்டு நல்ல புத்தகங்களை, உலக வரலாறு போன்ற புத்தகங்களையும், மற்ற புத்தகங்களையும் எழுதி வெளியிடுவோமானால் அந்த குறை நீங்கிவிடும். அந்தக் குறையை போக்குவதற்குத்தான் புத்தக வெளியீட்டுக் கழகம் ஒன்று ஆரம்பிக்க இருக்கின்றோம். தமிழைப் பயிற்சி மொழியாக்கிக் கல்லூரிகளில் நம்முடைய மாணவர்களுக்குத் தமிழ் மொழி மூலம் தொடர்ந்து சொல்லிக் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. பரீட்சார்த்தமாக ஒரு கல்லூரியில் வைத்து இருக்கின்றோம். இந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு மேலே போவதற்கு வசதியாக இருக்கும். நமக்கு கிடைத்த அனுபவத்தில் இதுவரைக்கும் இந்த முன்னோடிக் கல்லூரியில் தமிழ், பயிற்சி மொழியாக, நல்ல முறையில் சரியாக நடந்து வருகிறது. எனவே, மேலும் மேலும் இதை நல்ல முறையில் செய்தால் இந்த முயற்சி வெற்றியடையும். அந்த வெற்றியை அடைவதற்காக முயற்சி எடுத்துக் கொண்ட தமிழ் கல்லூரிக் குழுவுக்கும், ஆசிரியர்களுக்கும், எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

வந்தது பொங்கல்!

அழகனார்

தங்கத் தமிழ் இசைபாடித்
தரணியெலாம் சிறந்துயர,
மங்கலங்கள் பலபெருகி
மனையெல்லாம் வளங்கொழிக்க
வந்ததே பொங்கல்—நலம்
வளர்த்ததே பொங்கல்!

புத்தரிசி அமுதுண்ணப்
பொன்போலும் வளம்பெருக,
எத்திசையும் புகழ்பரப்பி
ஏந்திழையார் பண்பாட
வந்ததே பொங்கல்—நலம்
வளர்த்ததே பொங்கல்!

நல்மஞ்சள் வாழையுடன்
நலமான இஞ்சியுடன்
மெல்லிடையார் நெஞ்சுவக்க
மேன்மைநலம் கூடிடவே
வந்ததே பொங்கல்—நலம்
வளர்த்ததே பொங்கல்!

செங்கரும்புச் சாறுண்ண
சிறப்பான வாழ்வுயர
தங்குபுகழ் கொண்டிலங்கித்
தேயமெல்லாம் உழவுயர
வந்ததே பொங்கல்—நலம்
வளர்த்ததே பொங்கல்!

ஏர்பிடித்தோன் உவப்படைய
இணையில்லாப் பயன் பெருக
கார்குழலார் உளம்போலும்
காளையர்கள் திறன்போலும்
வந்ததே பொங்கல்—நலம்
வளர்த்ததே பொங்கல்!

வளரும் சமுதாயம்

பஞ்சாயத்துக்களின் புதுமலர்ச்சி

கண்டதும் கேட்டதும்

பொதுஜனத் தொடர்பு அதிகாரி

சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி. அன்று, பொங்கல் திருநாள். விடுமுறை நாளானதால், வீட்டில் ஓய்வெடுக்கத் திட்டமிட்டிருந்தேன். அன்று காலையில், எதிர்பாராத முறையில் "உடனே புறப்பட்டு, ஒரு முக்கிய பிரமுகருடன், சமுதாய நல வட்டாரத்துக்குச் செல்லவேண்டும்" என்ற உத்தரவு, அலுவலகத்திலிருந்து கிடைத்தது. என் சொந்தத் திட்டம் முறிந்தது. "பொங்கல் தினத்தன்றுகூட, ஓய்வில்லையே," என்று சலிப்போடு எண்ணியது, என் மனம். ஆனால், கடமையைப் புறக்கணிக்க முடியுமா? பிரமுகரைக் காண, உடனே விரைந்து சென்றேன்.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்களைப் பார்க்கவரும் முக்கிய பிரமுகர்களுக்கு, ஓர் அளவே இல்லை. எந்த நேரத்திலும் அவர்கள் விஜயம் செய்வார்கள். நம் கிராமங்களில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் காணவரும் அயல் நாட்டவர் எண்ணிக்கை, சமீப காலத்தில், அதிகமாகி வருகிறது.

ஆனால், அன்றைய தினம், கிராமங்களைப் பார்க்க வந்திருந்த பிரமுகர், அயல் நாட்டவர் அல்ல; பாரத நாட்டின் திட்டக் கமிஷன் அங்கத்தினரான **ஸ்ரீமந் நாராயண்** என்பவர். (மகாத்மா காந்தியடிகளுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்ற ஒரு சிலருள் அவரும் ஒருவர்; காந்தியப் பொருளாதாரத் திட்டத்தில், அசையாத நம்பிக்கை கொண்டவர்).

அன்றைய தினம், நாங்கள் இருவரும் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கடம்பத்தூர் வட்டாரத்திற்குச் சென்று, பல கிராமங்களைச் சுற்றிப் பார்த்தோம். கிராமத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினோம். அப்போது, ஸ்ரீமந் நாராயண் அவர்கள், கிராமவாசிகளோடு அநேக விஷயங்களை விவாதித்தார். குறிப்பாக, கிராம மக்களிடம் உள்ள வேலையில்லாத் தொல்லையை நீங்கும் வழிகள் என்ன என்பதை, விரிவாக விசாரித்துக்கொண்டு இருந்தார். "உள்ளூரிலேயே சில ரஸ்தாக்கள், கட்டட வேலைகள் முதலியவற்றை நடத்தத் திட்டமிட்டால், கிராமவாசிகளுக்கு வேலை கிடைக்க வழி பிறக்குமே" என்று, கடம்பத்தூர் கிராமவாசிகளிடையே அறிவுரை கூறினார். அப்போது அருகில் இருந்த ஒரு கிராமவாசி, "இதெல்லாம் தத்துவரீதியான ஆராய்ச்சியே தவிர, நடைமுறைக்கு எங்கே வரப்போகிறது? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? ஏழை எளியவரைப்பற்றி யார் அக்கறை காட்டப் போகிறார்கள்," என்று முணுமுணுத்தார். ஸ்ரீமந் நாராயண் அவர்கள், "அந்தக் கிராமவாசி என்ன கூறுகிறார்" என்று என்னைக் கேட்கவே, நான் அதை அப்படியே, அவருக்கு மொழி பெயர்த்துக் கூறினேன். அவர் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே, அந்தக் கிராமவாசியை நோக்கி, "ஏன் நடைபெறக் கூடாது? நீங்களே, அதை நடத்தி வைக்கும் காலம் வரலாம். ஆண்டவனின் திருவுள்ளத்தை யார் அறிய முடியும்?" என்று நகைச்சுவையோடு கூறினார். அவர் சொன்ன வார்த்தை, எவ்வளவு அர்த்தபுஷ்டியுடன் இருந்தது என்பதை, இப்போது எண்ணிப்பார்த்து மகிழ்கிறேன். தீர்க்க தரிசனத்தோடு அவர் அன்று கூறியவை, இன்று நனவாகி வருகின்றன.

சில மாதங்களுக்கு முன்னால், புதிய பஞ்சாயத்து ஆட்சியைப்பற்றி அரசாங்க உத்தரவுகளை எல்லாம் தொகுத்து ஒரு தனி நூலாக (Guide Book on Panchayat Development in Madras State) வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது மனித சக்தியைப் பயன்படுத்தும் திட்டங்கள் (Man power utilisation projects) தமிழ் நாட்டில், பத்து வட்டாரங்களில் நடைபெறுகின்றன என்ற செய்தியை அறிந்தேன். அதாவது, 1961-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி வெளியான அரசாங்க ஆணை எண். 276-ல், ஒரு மாவட்டத்தில், ஒரு வட்டாரம் வீதம், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு விரிவான விளக்கம் தரப்பட்டிருந்தது. கிராமங்களில் பயனற்றுக் கிடக்கும் மனித சக்தியை, பயனுள்ள அபிவிருத்தித் திட்டங்களாக மாற்றுவதற்காக, ஓரளவு நிதி உதவியும், உபகரணங்களும் கொடுத்துதவ, அதில் வழி வகை செய்யப்பட்டிருந்தது. திட்டக் கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீமந் நாராயண், சுமார் நான்கு வருஷங்களுக்கு முன்பு, கிராமவாசிகளுடன் விவாதித்துக்கொண்டிருந்த கருத்துக்கள், செயலளவில், நடைமுறைத் திட்டங்களாக நிறைவேறி வருவதை, சமீப கால புதிய பஞ்சாயத்து ஆட்சி வரலாறு விளக்கிவிட்டது. அனுபவம் வாய்ந்த நிர்வாகிகள், கிராமங்களுக்கு விஜயம் செய்வது வேடிக்கை பார்ப்பதற்கல்ல என்பதும், நடைமுறைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழி முறைகளைக் காண்பதற்கே என்பதும், காலப் போக்கில்தான் தெரியவரும்.

கடம்பத்தூர், துரிஞ்சாபுரம், செஞ்சி, கிருஷ்ணகிரி, அவினுசி, தொட்டியம், பட்டுக்கோட்டை, வத்தலகுண்டு, ஸ்ரீவில்லிபுத்தூர், குருவிக்குளம் ஆகிய பத்து வட்டாரங்களிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றுவதற்கு அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் விசேஷ சிரத்தை காட்டி வருவதாகத் தெரியவந்தது.

சென்ற நவம்பர் மாதம், ஒரு நாள் காலையில், துணைக் காரியதரிசி அவர்கள், 'கிராம நலம்' இதழைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது, "கிராம அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறையில் எவ்வாறு உருவாகி நடைபெறுகின்றன என்பதை நேரில் கண்டறிந்து, எழுதினல் நலமாயிருக்குமே" என்ருர். எந்த இடத்திற்குப் போகலாம் என்று நான் கேட்ட போது, "மனித சக்தியைப் பயன்படுத்தும் திட்டம்" கடம்பத்தூரில் எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்த்து வரலாம் என்ருர். அத்துடன், விவசாய அபிவிருத்திக்கு, மாதிரித் திட்டமாக (Model programme) எடுத்துக்கொள்ளப்பட்ட 'கல்யாண குப்பம்' கிராமத்துக்குப் போய் வரலாம் என்று நிச்சயிக்கப் பட்டது.

முதன் முதலாக, 1953-ம் வருடம், தேசிய வளர்ச்சித் திட்டம் ஆரம்பமானபோது, செங்கற்பட்டு மாவட்டத்தில், கடம்பத்தூர், திருவள்ளூர் ஆகிய இரண்டு வட்டாரங்களில் வட்டார அபிவிருத்தி அதிகாரிகளின் மேற்பார்வையில், கிராம நல வேலைகள் தொடங்கப்பட்டன. அதற்கு முன்பு சுமார் 7 ஆண்டுகளாக (அதாவது 1946-ம் ஆண்டு முதல்) கிராம அபிவிருத்தி அதிகாரியின் கீழ் 'பிர்க்கா அபிவிருத்தி வேலைகள்' இங்கே நடைபெற்றுள்ளன. எனவே, சுமார் 15 வருடங்களாக கிராம அபிவிருத்தி சம்பந்தமான வேலைகள் நடைபெறும் பிரதேசமாக இது இருந்து வருகிறது. அத்துடன், இந்த வட்டாரங்கள் சென்னைக்கு அருகில் (மேற்கில் சுமார் 30 மைல்) உள்ளவை. எனவே, இவை மிகவும் அபிவிருத்தி அடைந்த கிராமங்களைக் கொண்டவை என்ற கருத்து, பெரும்பாலும் இருந்து வருகிறது.

சிறப்பாக, 'கடம்பத்தூர் வட்டாரம்' என்று சொன்னலே, அனுபவமும், உழைப்புத் திறனும் வாய்ந்த விவசாயப் பெருமக்கள் வாழும் வளம் நிறைந்த பிரதேசம் என்பது பலரின் எண்ணம். இந்த வட்டாரத்தில் உள்ள ஒரு சில கிராமங்களைப் பொறுத்த வரையில் இது உண்மையே.

கடம்பத்தூர் ரயில் நிலையத்திலிருந்து பார்த்தால், மின்சார பம்பு செட்டுகள் மூலம், பசுமையான வயல்கள் காட்சியளிப்பதும், அழகான புதிய வீடுகள் தெரிவதும், இந்தக் கருத்தை வலியுறுத்தும். ஆயினும், அந்த வட்டாரத்தின் முக்கால் பகுதிக்கு மேல் வரண்ட பிரதேசம் என்பதும், இன்றும் இந்த வட்டாரத்தில் உள்ள பாதிக்கு மேற்பட்ட ஊர்களுக்கு ரஸ்தா வசதிகள் ஏற்படவில்லை என்பதும், நான் நேரில் சென்றபோது (நவம்பர் 23-ம் தேதி) தெரிந்துகொண்டேன்.

கடம்பத்தூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு சுப்பராய முதலியார் அவர்களைக் கண்டு பேசியதில், அநேக புது விஷயங்களை நான் அறிந்துகொண்டேன். குறிப்பாக, ரஸ்தா வேலைகளில் மக்களுக்கு உற்சாகம் ஏற்படுவது ஏன் என்பதை அவர் தமக்கே உரிய பாணியில், அழகாக விளக்கினர். கிராமங்களில் பயனற்றுக் கிடக்கும் மனித சக்தியைப் பயன்படுத்தும் திட்டத்தின் கீழ், இந்தப் பஞ்சாயத்து யூனியனில், பத்து கிராமங்கள் பயன் பெற்றுள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவை ரஸ்தா வேலைகளே. அத்துடன், குளங்களைச் செப்பனிட்டிருக்கிருர்கள். பள்ளிக்கூடக் கட்டடம், பஞ்சாயத்து அலுவலகம், பள்ளி ஆசிரியருக்காக ஒரு வீடு முதலியனவும், அமைத்திருக்கிருர்கள்.

இந்த வேலைகளைப் பற்றிய விவரங்களை எல்லாம், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் திரு எம். திரவியம் அவர்கள் எடுத்துரைத்தார். முக்கியமாக, இந்த வேலைகளை மேற்கொண்டதன் மூலம், அந்தந்தப் பிரதேசங்களைச் சார்ந்த கிராம வாசிகளுக்கு (சுமார் 50 பேருக்கு), தொடர்ந்தாற்போல பல நாட்களுக்கு வேலை கிடைத்ததை, புள்ளி விவரங்களோடு விளக்கினர். கிராம பஞ்சாயத்துத் தலைவர்களும், மற்ற அங்கத்தினர்களும், இந்த வேலைகளை நடத்தி வைக்க ஒத்துழைத்ததோடு, வேலை செய்தவர்களுக்குப் பகலுணவு அளிக்கவும், ஏற்பாடு செய்துள்ளனர். மேலும், இந்த வேலைகளைச் செய்வதற்கான கருவிகள் வாங்க (அதாவது, மண்வெட்டி, கடப்பாறை முதலியவற்றை வாங்க) அரசாங்க மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

புதுப்பட்டு, கோட்டையூர், உளுந்தை, அதிகத்தூர், செஞ்சிராமன் கோயில் போளிவாக்கம், பாப்பரம்பாக்கம், வெங்கத்தூர், வெள்ளேரித்தாங்கல், புதுமாவிலங்கை, தண்டலம், பேரம்பாக்கம், இருளஞ்சேரி, கீழச்சேரி, பன்னூர், திருமணிக்குப்பம் ஆகிய கிராமங்களில் மேற்சொன்ன திட்டம் நிறைவேறியிருக்கிறது. ஏறக்குறைய சுமார் 3,600 ரூபாய் இத் திட்டத்தின்படி ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன எல்லாக் கிராமங்களையும் நேரில் சென்று பார்த்து, அந்தந்தப் பஞ்சாயத்துக் தலைவர்களுடன் விரிவாகக் கலந்து பேச விரும்பினேன். ஆயினும், எனக்குக் கிடைத்த அவகாசம் ஒருநாள்தான். எனவே, அதற்குள் எவ்வளவு கிராமங்களைப் பார்க்க முடியுமோ, அவ்வளவையும் பார்க்க முயன்றேன்.

நான் பார்வையிட்ட கிராமங்களுள், குறிப்பிடத் தக்கவை இரண்டு. ஒன்று, பாப்பரம்பாக்கம், மற்ருென்று உளுந்தை. நான் சேகரித்த செய்திக் குறிப்புகளிலிருந்து, இந்த இரண்டு கிராமங்கள், சிறந்த முறையில் பணியாற்றி வருவதை அறிய முடிந்தது. இதற்கு ஆதாரம் என்ன என்று கேட்கலாம். அதற்கு விடை இதுதான்: "கிராமப் பஞ்சாயத்து ஆட்சி, சிறப்புடன் நடைபெறுவதற்கு, உரை கல்லாக இருப்பவை, பஞ்சாயத்துத் தலைமையும், கிராம ஜனங்களின் உற்சாகமும் ஆகும். இந்த இரண்டுக்கும் ஆதாரமாய் இருப்பது, பொறுப்புணர்ச்சி"

என்று நம் தலைமைச் செயலாளர் ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி அவர்கள் அடிக்கடி வற்புறுத்துவார். இந்த முக்கிய கருத்தை அளவு கோலாகக் கொண்டால், புதிய பஞ்சாயத்து ஆட்சியின் தரத்தை, ஓரளவு மதிப்பிட முடியும்.

இந்த வகையில், முதலில் சொன்ன பாப்பரம்பாக்கம் கிராமத்தில், பொறுப்புணர்ச்சி மிகுந்த பஞ்சாயத்துத் தலைமையைப் பாராட்டவேண்டும். முக்கியமாக, புறம்போக்கு நிலங்களில், சுமார் ஆயிரம் புளிய மரம் நட்டு வளர்ப்பதற்கான திட்டத்தை இந்த ஊரில் மேற்கொண்டுள்ளனர். குளத்தை ஆழப்படுத்தல், அதன் கரைகளில் பல்வேறு மரம், செடி கொடிகளை வைத்துப் பாதுகாத்தல், நவீன விவசாய முறைகளை மேற்கொள்ளல், முதலிய காரியங்கள், இங்கே நடைபெற்றுள்ளன. செப்பனிடப்பட்ட குளக்கரையின் மேல், விவசாய இலாகாவினர் கொடுத்த புதிய ஆமணக்குச் செடிகள் பயிராக்கப்பட்டுள்ளன. ஆயிரம் புளியங் கன்றுகள் நடுவதில், அரசாங்கத்தின் விவசாய இலாகா, காட்டு இலாகா அதிகாரிகள் தக்க உதவியும், ஆலோசனையும் புரிந்துள்ளனர். குறைந்த செலவில், பாது காவலான வேலி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செடிகளுக்கு நீர் பாய்ச்சவும், ஆடு மாடுகள் மேயாமல் பாதுகாக்கவும் (முப்பது ரூபாய் சம்பளத்தில்) ஒரு காவலனை, பஞ்சாயத்து நியமித்துள்ளது. 'குப்பன்' என்ற அந்தக் காவலர், அங்கேயே இருந்து, தன் சொந்தக் குழந்தைகளைக் காப்பது போல், கண்ணும் கருத்துமாய், புறம்போக்கு நிலத்தில் உள்ள அந்தச் செடிகளைக் காத்து வருகிறார். இந்தப் புதிய திட்டத்தின் பலனை, இன்னும் சில ஆண்டுகள் பொறுத்துத்தான், சரியாக மதிப்பிட முடியும். சுமார் ஆயிரம் புளிய மரங்கள் நிறைந்த ஒரு தோப்பு, கிராமப் பஞ்சாயத்தின் புதிய சொத்தாக வளரும் காட்சியை, இப்போது மனக்கண்ணால் தான் பார்த்து மகிழ வேண்டும். ஆயினும், அந்தப் பஞ்சாயத்துத் தலைவரான குப்புசாமி நாயக்கருக்கும், மற்ற அங்கத்தினர்களுக்கும் உள்ள உற்சாகத்தையும், திடமனதையும் பார்க்கும்போது, வெற்றி நிச்சயம் என்று உணர்ந்தேன். கிராமத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கு பஞ்சாயத்து மேற்கொள்ளக்கூடிய ஆக்கத் திட்டங்களுக்கு, இது ஒரு நல்ல உதாரணமாகும்.

தவிர, விவசாய அபிவிருத்திக்காக, பஞ்சாயத்துக்கள் திட்டமிட்டு வேலை செய்ய வேண்டுமென்பது, பஞ்சாயத்து ஆட்சியின் புதிய பொறுப்பாகும். இதற்காக, சமீபத்தில் சுமார் 2½ இலட்சம் ரூபாய் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் வரவு செலவுத் திட்டத்திலும் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய இலாகாவின் ஆலோசனைப்படி இதை நிறைவேற்ற விவரமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (கிராம நல நிர்வாகத்துறையின் 8–9–61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2460. "கிராம நலம்" அக்டோபர் 61 இதழில், பக்கங்கள் 29 லிருந்து 44 வரையில் பார்க்கவும்). இதையொட்டி பாப்பரம்பாக்கம் கிராமத்தில், புளியந் தோப்பு வளர்க்கும் விஷயமாக சிறந்த ஏற்பாடுகள் செய்திருப்பது மிகவும் பாராட்டத் தக்க செய்கையாகும்.

அடுத்ததாக 'உளுந்தை' என்னும் கிராமத்தில், அநேக வேலைகள் கிராமத்தார் அனைவருடைய ஒத்துழைப்புடனும் நடைபெற்றுள்ளன. பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. சுப்பராய முதலியார் அவர்கள், என்னுடன் இந்த ஊருக்கு வந்திருந்து, மக்களின் ஆர்வத்தைப் பாராட்டிக் கூறினார். சிறப்பாக, இந்த ஊர் இளைஞர்களின் உற்சாகம், ஆக்க வேலைகளுக்கு மிகவும் பயன்பட்டுள்ளது. சமூகக் கல்வி நிலையம் (Social Education Centre), ரேடியோ, முதலியவை இங்கே திறம்பட நடக்கின்றன. அநேக புத்தகங்களும், பத்திரிகைகளும் இங்கே படிக்கப்படுவதைக் கண்டேன்.

புத்தகங்கள் என்றதும், இந்தப் பஞ்சாயத்து யூனியன் உபதலைவர் திரு க. மு. பாலு அவர்களின் நினைவு வருகிறது. படிப்பதிலும், எழுதுவதிலும், ஆர்வமிக்க இவரை இலுப்பூர் கிராமத்தில் பார்த்துப் பேசினேன். கிராமியப் பாட்டுக்களைச் சேகரித்துவெளியிட வேண்டிய அவசியத்தைப் பற்றியும், கூவம் நதியிலிருந்து வாய்க்கால்கள்மூலம், நீர்ப்பாசன வசதிசெய்வதைப் பற்றியும் மிகவும் உற்சாகத்தோடு பேசினார். "மதிசுடர்" என்ற பெயரால் அவர் வெளியிட்டுள்ள நூலையும் பார்த்து மகிழ்ந்தேன்.

கிராம வாசிகளின் உற்சாகமும், சிறந்த தலைமையும் இயற்கையாகவே ஓரளவு வாய்க்கப்பெற்ற இடங்களைவிட [illegible] பிற்போக்குப் பகுதிகளில் அபிவிருத்தி வேலைகள் செய்ய ஏற்பாடுகள் செய்வது மிகவும் கடினம். இத்தகைய கடினமான வேலையிலும், கடம்பத்தூர் யூனியன் ஓரளவு வெற்றி கண்டுள்ளதை அறிந்தேன். அதாவது, செஞ்சி-ராமன் கோயில் என்ற கிராமங்கள் மிகவும் பிற்போக்கானவை என்று கேள்விப்பட்டேன். அங்கே போவதற்கான ரஸ்தா சரியில்லாததால் நான் நேரில் செல்ல இயலவில்லை. அத்தகைய இடத்திலும் பள்ளிக் கட்டடம், குளத்தை ஆழப்படுத்தல், பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடம் முதலிய வேலைகள் மேற்சொன்ன திட்டப்படி நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவ்வாறாக, கிராமங்களிலுள்ள மனித சக்தியைநல்ல முறையில் பயன்படுத்தும் திட்டம், கடம்பத்தூரில் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதைப் பார்த்த பிறகு, அதை அடுத்து திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியனுக்கு, மறுநாள் (4–11–61) புறப்பட்டேன். "கல்யாண குப்பம்" என்ற கிராமம், திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ளது. இங்கேதான் சுமார் ஒன்றரை வருடத்துக்கு முன்பு அபிவிருத்திக் கமிஷனர் இரண்டு நாள் தங்கியிருந்து, கிராமவாசிகளுடன் கலந்தாலோசித்து விவசாய உற்பத்தித் திட்டம் ஒன்றை உருவாக்கினார். "கல்யாண குப்பம்" விவசாய உற்பத்தித் திட்டத்தை முன் மாதிரியாகக் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள சுமார் 12,500 பஞ்சாயத்துக்களும், விவசாய வளத்தைப் பெருக்கத் திட்டமிட்டு வேலை செய்ய வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இத்தகைய பெருமையும், புகழும் வாய்க்கப் பெற்ற கல்யாணகுப்பத்தை, முக்கியமாக, அதைச் சார்ந்த ஹரிஜன மக்கள் வாழும் பகுதியை நேரில் சென்று பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

(தொடரும்)

(கல்யாண குப்பத்தில் நடைபெற்றுள்ள அபிவிருத்தி வேலைகளின் விவரமும், கூட்டுறவு விவசாய பாங்குகளின் செயல் முறையும், கலெக்டர், சப்-கலெக்டர் மாவட்ட விவசாய அதிகாரி முதலியோருடன் கலந்தாலோசித்த விவரங்களும், மாவட்ட அபிவிருத்தி மன்றம், பஞ்சாயத்து யூனியன் செய்தி நிலையங்கள், முதலியன பற்றிய குறிப்புகளும், அடுத்த இதழில் காணலாம்.

அறிவியல் கட்டுரை—5.

கண்ணில் தெரியாத காட்சிகள்

[டாக்டர் P. திருஞானசம்பந்தம், M. A., Ph. D., பௌதிகப் பேராசிரியர், P. S. G. கலைக் கல்லூரி, கோவை.]

கிராம மக்களுக்குப் புரியும் வகையில், எளிய நடையில், அரிய விஞ்ஞான உண்மைகளை எடுத்துக் கூறும் பணியினை மேற்கொண்டுள்ள, "கிராம நலம்" இதழ் அளிக்கின்ற ஐந்தாவது விஞ்ஞானக் கட்டுரை இது. கட்டுரை ஆசிரியர் கோவை பி. எஸ். ஜி. கல்லூரியில், விஞ்ஞானத் துறையில் பேராசிரியராகப் பணிபுரிகிறார். பால் பொங்கல் படைத்து சூரியனை வணங்குகின்ற இந்த நேரத்தில், சூரியனால் நாம் பெறுகின்ற நன்மைகளை ஆசிரியர் விளக்குகிறார். இந்தப் பொங்கல் நன்னாளில், இந்த உண்மைகளை உணர்ந்து, சூரியனைப் போற்றுவோமாக! —ஆசிரியர்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் வாயிலாக நாம் உலகத்தோடு உறவாடுகிறோம். இந்த ஐந்து பொறிகளுள் கண் என்பது நடுநாயகமாக விளங்குகிறது. கற்றவர்களை மக்களாகவும், மற்றவர்களை விலங்குகளாகவும் கூறுதல் ஒரு வழக்கம். கற்றவர்களுடைய கண்களே கண்கள்; பிறருடைய கண்கள் கண்கள் அல்ல. அவைகளை அவர்களுடைய முகத்திலுள்ள புண்கள் என்று கொள்ளுதல் பொருந்தும் என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறியிருக்கின்றார். எனவே, கற்றறிந்த மக்களுக்குக் கண்கள் சிறந்த உறுப்புக்கள் என்றும், அவைகளைக் கொண்டு பயன்பெற வேண்டும் என்றும் எளிதில் விளங்கும்.

நம் உடம்பினால் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம். வாயினால் அறுசுவை உணவை அருந்துகிறோம். கண்களினால் இனிய பல காட்சிகளைக் காண்கிறோம். மூக்கினால் நல்ல மணத்தை முகர்கிறோம். செவியினால் பலவகையான செய்திகளைக் கேட்டு அறிகிறோம். இந்த அனுபவங்களை எல்லாம் அவைகளின் தரம் கண்டு உணர்வதற்குப் பேருதவி புரிவது நம்முடைய அறிவாகும். அந்த அறிவே மக்களின் சிறந்த பொக்கிஷம் என்று கூறலாம். அதனையே பகுத்தறிவு என்று போற்றுகிறோம். ஆகவே, ஐம்பொறிகளையும் விட மேலான மனிதனின் மூளை அவனுடைய கண்களைவிடச் சிறந்தது என்பது தெளிவாகும்.

கண்களை நம்பாதீர்!

"கண்டதே காட்சி; கொண்டதே கோலம்" என்று திரிதல் அழகன்று என்று கிராம மக்கள் சாதாரணமாகச் சொல்லுவார்கள். புலன்களின் இன்பம் கருதியே வாழ்ந்து விடுவது தவறு. நாம் அறிவிற்கும் வேலை கொடுத்து மனிதன் என்ற சொல்லுக்கு இலக்கணமாக வாழவேண்டுமென்பது இப்பொழுது கூறப்பட்ட பழமொழிக்குப் பொருளாகும். இது மட்டுமன்று; விஞ்ஞான வழியில் பார்த்தால் இப் பழமொழியில் மிகப்பெரிய உண்மை இருக்கிறது என்று தெரியவரும்.

ஓர் உதாரணம் கூறலாம். சூரியன் காலையில் கிழக்கே உதிக்கிறது; மாலையில் மேற்கே மறைகிறது; இது ஒரு காட்சி; கண்ணிற்குப் புலனாகும் காட்சி. இது தோற்றம் உண்மையன்று. உண்மை என்ன வென்றால், நாம் வசிக்கும் பூமியானது சூரியனைச் சுற்றி வருகின்றது. ஆனால் தோற்றத்திற்குச் சூரியன் பூமியைச் சுற்றி வருவதைப் போல் காட்சியளிக்கிறது. ஆகவே கண்ணால் காண்பதெல்லாம் உண்மை என்று கூறிவிட முடியாது. அக் காட்சியில் மறைந்திருக்கும் உட்பொருளை உணர வேண்டும். இதுவே நல்ல வழி; விஞ்ஞான வழி. விஞ்ஞானம் ஆராய்ச்சி நிலையங்களில் நிகழ்வது, கிராமத்து மக்களுக்கு அதனுடன் தொடர்பு இல்லை என்று கருதலாகாது. மேலே கூறியவாறு, காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் கண்டு அவைகளின் உண்மையை உணர முயற்சி செய்வதே விஞ்ஞானிகளின் தொழில் என்று ஐயத்திற்கு இடமின்றிக் கூறலாம். விஞ்ஞானிகள் மட்டுமல்லர்; மக்கள் யாவரும் விஞ்ஞான வழியில், அதாவது அறிவு வழியில் வாழ முற்பட வேண்டும்.

வானவில்லின் வண்ணக் காட்சி

சூரியன் நமக்கு ஒளியளிக்கிறது. மக்கள் தோன்றிய காலம் முதல் இக்காட்சியை யாவரும் கண்டு வருகிறோம். இக்காட்சியில் மறைந்துள்ள ஒரு பேருண்மையை எடுத்துக் காட்டிய பெருமகன் நியூடன் என்னும் விஞ்ஞானி. அவர், வெண்மையாகத் தோன்றும் சூரிய ஒளியில், ஏழு நிறங்கள் கலந்திருப்பதைத் தெளிவாக்கினார். அவைகளை, ஊதா, அவுரி, நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு என்று அறிகிறோம். மழைக் காலங்களில் வானவில் தோன்றி நம் கண்களைக் கவர்கிறது அல்லவா? அந்த வில் காட்டும் நிறங்களே இவை. வெண்ணிறமுள்ள சூரிய ஒளி மழைத்துளிகளினால் சிதறடிக்கப்படும் போது இந்த வண்ணக் காட்சி புலனாகிறது. சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய இரதத்தில் பவனி வருவதாக ஒரு கருத்து கிராம மக்களிடையே வழங்கி வருகிறது. நாம் இப்பொழுது கூறும் ஏழு நிறங்களைத்தான் ஏழு குதிரைகளாக நம் முன்னோர்கள் கற்பனை செய்தார்களோ என்று சிந்திப்பதற்கு இடமிருக்கிறது.

கிராமத்திற்குச் செல்லும்போது இன்னொரு பழமொழி சாதாரணமாக நாம் கேட்கிறோம். கண்கெட்ட பிறகா

சூரிய நமஸ்காரம் ? என்று கேட்பார்கள். இது எளிய தொரு கேள்வி. ஆனால் இதைப்பற்றிச் சிந்திக்கும்போது அரிய கருத்துக்கள் புலனாகின்றன. கண்ணிருக்கும் போதே சூரிய நமஸ்காரம் செய்யவேண்டுமென்பது எளிய பொருள். அதிகாலையில் தினந்தோறும் சூரியனை நாம் வணங்கவேண்டும் என்று சொல்லும்போது நம் வாழ்வில் ஓர் ஒழுங்கு, ஒரு கட்டுப்பாடு உண்டாக வேண்டும் என்று தெளிவாகும். சூரியனை ஏன் வணங்கவேண்டும் ? சூரிய னால்தான் இவ்வுலகு தோன்றிற்று. இவ்வுலகிலுள்ள உயிர்கள் தோன்றின. இவ்வுயிர்கள் வாழ்கின்றன இவ்வுயிர்கள் பரிணமித்து வந்திருக்கின்றன. இவ் வாறு நமக்கு உயிரும், வாழ்வும் அளித்து நம்மைக் காப்பாற்றி வரும் கண்ணில் தோன்றும் கடவுளாகிய சூரியனை வணங்காமல் வேறு யாரை வணங்குதல் கூடும்?

இனி, கண் கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம் என்று கேட்கப்படும் கேள்வியில் மறைந்துள்ள ஒரு விஞ்ஞானக் கருத்தினை எடுத்துக் கூறலாம். நம்முடைய ஐம்பொறி களுள் சிறந்த பொறியாகிய கண்ணினை வளர்க்கத்தகுந்த, பழுதுறாமல் பாதுகாக்கக் கூடிய ஆற்றல் சூரிய ஒளியில் அடங்கியிருக்கிறது என்று கூறலாம். இவ்வரிய ஆற்றலைப் பெற்று நன்மை அடைய வேண்டும். இதைப் பெறு வதற்காகப் பணம் வேண்டியதில்லை. பிறருடைய அனு மதியும் தேவையில்லை. விரும்பினால் பெறலாம். பலருக்கு இதன் அருமை தெரிவதில்லை. விருப்பமும் உண்டாவதில்லை. டாக்டரிடம் சென்று கண்ணாடி போட்டுக் கொள்ளலாம் என்று இருந்து விடுகிறோம். இது பேதைமையே யன்றி வேறென்ன என்று சிந்திக்க வேண்டும்.

ஞாயிறு போற்றுதும் !

சூரிய ஒளியில் ஏழு நிற ஒளிகள் இருப்பதை முன்பே கூறினோம். இந்த ஏழு நிற ஒளிகளின் கலவையே நாம் காணும் வெள்ளொளி என்றும் கூறப்பட்டது. இதைக் கண்ணுக்குப் புலனாகும் காட்சி என்று கூறலாம். சூரியன் நமக்கு அளிக்கின்ற ஆற்றலில் ஒளி சிறிய தொரு பகுதிதான். பெரும்பகுதி நம் கண்ணிற்குப் புலனாவதில்லை. கண்ணிற்குப் புலனாகும் சூரியனுடைய வெள்ளொளியில் வலிமை மிக்க ஊதா ஒருபுறம், வலிமை குறைந்த சிவப்பு மறு புறம். ஆயினும் இவ் வரம்புகளுக்கு அப்பால் இரு புறங்களிலும் சூரியனுடைய ஆற்றல் பரந்து வருகிறது. ஊதாவுக்குப் புறம்பாக உள்ள பகுதியினை புற ஊதாப் பகுதி என்றும் சிவப்புக்கு அப்பாலுள்ள பகுதியினை புற சிவப்புப் பகுதி என்றும் வழங்குவது வழக்கம். நம் கண்ணில் தெரியாத புற ஊதா, புற சிவப்பு ஆகிய இரு ஆற்றல் பகுதிகளை நாம் தகுந்த கருவிகளைக் கொண்டு உணரலாம். அதிகாலையில் ஆகாயத்தில் தூசி, புகை முதலிய தூய்மையைக் கெடுக்கும் நச்சுப் பொருள்கள் குறைவாக இருக்கும். சூரியன் தரும் புற ஊதா ஆற்றல் நம்மை வந்தடைய வாய்ப்புண்டு. நமக்கு உதவி செய்கிறேன் என்று பறை சாற்றாமல் நமக்கு நன்மை தரும் புற ஊதாப் பகுதியின் அடக்கத்தையும் சிறப்பினையும் என்னென்று கூறுவது ? இப் புற ஊதாக் கதிர்கள் நம் கண்களுக்குப் பெரிதும் நன்மை செய்கின்றன. இன்னொரு சிறப்பு என்னவென்றால் இக்கதிர்களை ஒரு குறிப்பிட்ட அள விற்கு மேல் நாம் கொள்ளக் கூடாது. அளவிற்கு மீறி னால் அமுதமும் விஷமன்றோ ? நம் கண்கள் கெடாத வாறும், நம் கண்களுக்கு வேண்டிய அளவும் நன்மை தரத் தகுந்த அளவு புற ஊதாக் கதிர்களை நமக்குத் தந்து நம்மை வாழ்விக்கிறது சூரியன். இச் சூரியனை மறவாது போற்றுவோமாக !

எழுத்தாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

"கிராம நலம்" இதழுக்கு கதை, கட்டுரை, கவிதை எழுதி அனுப்புவோர் தங்களுடைய முழு தபால் முகவரியை தெளிவாக எழுதி அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு, எழுதியவரின் முழு தபால் முகவரி இல்லாத விஷயங்கள், வெளியிடப்பட்ட பின், அவற்றுக்குரிய சன்மானத் தொகை தவறான முகவரிக்குச் சென்று திரும்பிவருகின்றன.

உதாரணமாக, திரு. வி. பி. ரங்கசாமி, திரு. அரு. காந்தி, திரு. ஆர். கோவிந்தராஜன், திரு. ராஜவேத சிகாமணி முதலியோரின் கதை, கட்டுரைகள் கிராம நலத்தின் பல்வேறு இதழ்களில் வெளியிடப் பெற்றிருந்தும், அவர்களுடைய சரியான தபால் முகவரி இல்லாமையால், அவர்களுக்கு உரிய சன்மானத் தொகை அனுப்பப்பெற முடியாமல், அலுவலகத்தில் உள்ளது. ஆகவே, மேற்குறித்தவர்கள் இந்த அறிவிப்பு கண்ட இரண்டு மாதகாலத்துக்குள், தம்முடைய சரியான முகவரியும், தாமே அத்தொகைக்குரியவர் என்பதற்குத் தக்க சான்றும், அனுப்பிவைத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இல்லையென்றால், அவர்களுடைய அந்தத் தொகையை அவர்கள் இழக்க நேரிடும்.

எனவே, இத்தகைய சிக்கல்கள் இனிமேல் நேராமல் இருப்பதற்கு, "கிராம நலத்"திற்கு, கதை, கட்டுரை, கவிதை, அனுப்பிவைப்பவர் எல்லோரும், தவறாமல் தம்முடைய சரியான முழு தபால் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடுமாறு வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

கூட்டுறவுக் கல்வி

[திரு. வி. முருகேசன், விசேஷ துணைப் பதிவாளர்—மார்க்கெட்டிங், கூட்டுறவுத் துறை.]

ஆட்சி முறைகளில் ஜனநாயகம் தான் சிறந்தது என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அங்ஙனமே பொருளாதாரப் பிரச்சினைகளைச் சுமுகமான முறையிலும் திருப்தியான முறையிலும் தீர்த்து வைக்கும் சிறந்ததொரு பரிகாரம் கூட்டுறவு முறைதான் என்று, பொருளாதார நிபுணர்களும், அரசியல் அறிஞர்களும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஜனநாயகம் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டுமென்றால், அதில் சம்பந்தப்பட்ட மக்கள் தங்கள் கடமைகளையும், உரிமைகளையும் பூரணமாக உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அதே மாதிரி கூட்டுறவு இயக்கம் நன்றாக வேலை செய்ய வேண்டுமென்றால், அதாவது, கூட்டுறவுச் சங்கங்கள், அவை ஏற்பட்டதன் நோக்கங்களை நிறைவேற்ற வேண்டுமென்றால் அவைகளோடு சம்பந்தப்பட்ட அங்கத்தினர்கள், நிர்வாகஸ்தர்கள் முதலானோர், அவர்களுடைய கடமைகளையும், உரிமைகளையும் உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும். இந்த உணர்வினை உண்டாக்குவதே கூட்டுறவுக் கல்வியாகும்.

கூட்டுறவுக் கல்வியின் நோக்கம்

சாதாரண மக்கள் அவர்களாகவே வியாபாரிகளாகவும், பாங்கர்களாகவும், வேலை வாங்குவோர்களாகவும் இருக்க வேண்டியிருப்பதால் அவர்கள் இவ்வித விவகாரங்களில் தேர்ச்சி பெற்றவர்களாக இருத்தல் அவசியம். அங்கத்தினர்களே பஞ்சாயத்தார்களாகவும், தலைவர், காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்படலாமாகையால் அவர்களும் விவகாரம் தெரிந்தவர்களாக இருத்தல் அவசியம்.

எவ்வளவுக்கெவ்வளவு கூட்டுறவு இயக்கத்தில் கூட்டுறவுக்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு கூட்டுறவு இயக்கம் சிறந்ததாகவும், பலம் பொருந்தியதாகவும் இருக்கும். கூட்டுறவுக் கல்வியின் நோக்கம் அங்கத்தினர்களை ஒற்றுமைப்படச் செய்வதும், அவர்களது சங்கத்தின் மீது விசுவாசம் ஏற்படச் செய்வதும், அவ்விதம் விசுவாசத்தினால் அவர்களுக்குத்தான் நன்மை என உணரச் செய்வதுமாகும். இக்கூட்டுறவுக் கல்வித் திட்டம், சங்கங்கள் அமைவதற்கு முந்தியும், பிந்தியும், எப்போதும் தொடர்ந்திருக்கவேண்டும். இந்த உண்மையை உணர்ந்தே முதல் முதல் கூட்டுறவுச் சங்க இயக்கத்தைத் துவக்கிவைத்த "ராஷ்டேல் பயனியர்ஸ்" என்னும் ஆங்கிலக் கூட்டுறவு வழிகாட்டிகள் தங்களுடைய கூட்டுறவுப் பண்டகசாலையை ஆரம்பிக்குமுன், ஓராண்டிற்கு மேலேயே பண்டகசாலையை ஆரம்பிப்பதில் உள்ள பிரச்சினைகளை விவாதித்து, சிந்தித்து, பிறகுதான் தங்களது பண்டகசாலையை ஆரம்பித்தார்கள். ஒரு அங்கத்தினருக்கு ஒரு வாக்குரிமை, எல்லோருக்கும் அங்கத்தினர் உரிமை, ரொக்க வியாபாரம் இவை போன்ற ஏழு தத்துவங்கள் கொண்ட பண்டகசாலை இயக்கத்தை, இவர்கள் ஆரம்பித்தார்கள். இந்த ஏழு தத்துவங்களில் "தொடர்ந்த கல்வி முறை"யும் ஒன்றாகும். அவர்கள் லாபத்திலிருந்து ஒரு பகுதியை கூட்டுறவுக்கல்விக்கென ஒதுக்கிவைத்தார்கள். அவசியம் என்ற சூழ்நிலையிலும் மேற்கூறிய தத்துவங்களோடும் சிறிய அளவில் ஆரம்பித்த இந்த ஸ்தாபனமே இன்று உலகிலேயே மிகப்பெரிய பண்டகசாலையாகச் சிறந்து விளங்குகிறது.

மேல் நாட்டில் கூட்டுறவு

கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, நார்வே, டென்மார்க் இன்னும் இதர ஐரோப்பிய நாடுகளில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றி நன்றாக வளர்ந்திருப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று, நாட்டினர் கையாளும் கூட்டுறவுக் கல்வி முறையேயாகும். 1957-ம் ஆண்டு கொழும்புத் திட்டத்தின்கீழ் கனடா தேசத்திற்குச் சென்று அங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியை நேரில் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. கனடாவில் கூட்டுறவுக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அத்தேசத்தினர் பொதுக் கல்வியில் மிகவும் முன்னேற்றம் அடைந்திருந்தும் கூட்டுறவு அல்லது முதியோர் கல்வியைப் புறக்கணிக்கவில்லை. கனடா தேசத்தில் கூட்டுறவு இயக்கத்தை கட்டி வளர்த்த பெரியார்களில் ஒருவர் செயின்ட் பிரான்ஸிஸ் சேவியர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பாதிரியார் கோடி (Rev. Father Coady) என்பவர், அவர் கூட்டுறவுக்கல்வியின் அவசியத்தை வற்புறுத்தி கூறும்போது :

"The growing complexity of the modern society makes it necessary for education to be coterminus with active human life. If every man and woman in Canada had a College degree they would still need adult education" என்றார். அதாவது, 'மனித சமுதாயம் வளர்ந்து கொண்டேயிருப்பதால் அதற்கேற்ப கல்வியும் வளர்ந்து கொண்டே போகவேண்டியுள்ளது. கனடாவில் உள்ள ஒவ்வொரு ஆணும், ஒவ்வொரு பெண்ணும் பட்டதாரியாக இருந்தாலும்கூட அவர்களுக்கு முதியோர் கல்வி அவசிய

மாகும்' என்பதாகும். இதிலிருந்து முதியோர்கல்விக்கு வெளி நாட்டினர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக் கிருர்கள் என்பது தெரியவருகிறது. கனடா தேசத்தில் கூட்டுறவு இயக்கம் தோன்றி சுமார் 30 ஆண்டுகள்தான் ஆகின்றன; எனினும், கூட்டுறவு இயக்கம் மிகவும் வளர்ந்து மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும், சுரங்கத் தொழிலாளிகளுக்கும் சிறந்த சேவை செய்து வருகிறது.

நம் நாட்டில் கூட்டுறவு

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோன்றி 57 ஆண்டுகள் ஆகின்றன. விவசாயிகளின் கடன் பளுவைத்தீர்க்க, நம் நாட்டில் இவ்வியக்கம், 1904-ம் ஆண்டில் தோற்று விக்கப்பட்டு, இப்போது நம் மக்களின் வாழ்க்கையில், ஏறக்குறைய எல்லா துறைகளிலும் பரவியுள்ளது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்து, "கூட்டுறவை" மாநிலத்தின் பொறுப்பாக ஏற்படுத்திய திலிருந்து, இவ்வியக்கம் மிகவும் வளர்ந்து மக்களின் வாழ்க்கையை வளம்படுத்த அரிய சேவை செய்து வருகிறது. எனினும், இவ்வியக்கம் மக்களின் மத்தியில் வேரூன்றி அதன் பலனை மக்கள் பூரணமாக அடைந்த தாகக் கூற முடியாது. இதற்கு முக்கிய காரணம், பொதுவாக மக்கள், குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களி லுள்ள அங்கத்தினர்கள் கூட்டுறவுக் கல்விக்குப் போதிய அளவு கவனம் செலுத்தாததேயாகும். இதே விஷயத் தைத்தான் இந்திய அரசாங்கமும் ராஜ்ஜிய அரசாங்கங் களும் கூட்டுறவு இயக்கத்தைப் பரிசீலனை செய்ய ஏற் படுத்திய குழுக்களின் அறிக்கைகள் வலியுறுத்து கின்றன.

"கூட்டுறவு இயக்கம்" மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஏற்பட்ட ஒரு பொருளாதார இயக்கமாகும். ஆகையால்தான், திட்ட கமிஷன்கூட நம் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய கூட்டுறவு முறைதான் ஏற்றது என அறிவித்துள்ளது. அரசியல் முறையில் பஞ்சாயத்து முறையையும், பொரு ளாதார முறையில் கூட்டுறவு முறையையும் குறிக்கோ ளாகக் கொண்டு நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நம் ராஜ்ஜியத்தில் கூட்டுறவுத் துறையில் திட்டமிட்டதற்கு மேலேயே சாதனைகளை அடைந்துள்ளோம். மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இன்னும் பெரிய திட்டங்களை வகுத்துள்ளோம். இந்தத் திட்டங்களை வெற்றி பெறச் செய்யவும் அவைகளின் பூரண பலனை மக்கள் அடையவும் வேண்டுமானல் பொதுவாக மக்களும் முக்கிய மாக கூட்டுறவுச்சங்கங்களிலுள்ள அங்கத்தினர்கள், நிர் வாகஸ்தர்கள் இவர்களும், தங்கள் கடமைகளையும் உரிமைகளையும் சங்கங்களின் உபவிதிகளையும் தெரிந்தவர் களாக இருக்கவேண்டும்; கூட்டுறவுக்கல்வி பெற்றவர் களாக இருக்கவேண்டும்.

கூட்டுறவுப் பயிற்சியின் அவசியம்

கூட்டுறவுக் கல்வி பிரச்சாரம், பயிற்சி இவைகளை மக்க ளிடம் பரப்ப ராஜ்ஜிய அரசாங்கங்களும் ராஜ்ஜிய கூட்டுறவு யூனியன்களும் பல முயற்சிகள் எடுத்து வந்துள்ளன. சென்னை ராஜ்ஜியத்தில் அரசாங்க உதவியுடன் சென்னை ராஜ்ஜியக் கூட்டுறவு யூனியனும், மேற் பார்வைக்கழகங் களும் கூட்டுறவுக்கல்வியைப் பரப்ப பல முயற்சிகள் செய்தன. சென்னை அரசாங்கம் 1934-ம் ஆண்டில் சென்னையில் மத்தியக் கூட்டுறவுப் பயிற்சி சாலை ஒன்றை ஏற்படுத்தி அதில் கூட்டுறவு இலாகா சிப்பந்திகளுக்கும், சங்கங்களின் தலைவர், காரியதரிசி முதலியவர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி சம்பந்தமான பயிற்சி கொடுத்தது. மேற்பார்வையாளர்களுக்குப் பயிற்சி கொடுக்க தஞ்சை, கோவை முதலிய இடங்களில் கூட்டுறவுப் பயிற்சிச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. 1951-ம் ஆண்டில் ரிசர்வ் பாங்கார் அகில இந்திய கிராம கடன் பரிசீலனைக் குழு என்னும் ஒரு குழுவை நியமித்தனர். இக்குழு நம் தேசத்தில் கூட்டுறவு இயக்கம் வேலை செய்யும் விதத்தைப் பரிசீலனை செய்து இதர சிபாரிசுகளோடு கூட்டுறவில் ஈடுபட்ட அனை வருக்கும் பயிற்சி கொடுக்கும் அவசியத்தை வலியுறுத் தியது. 1953-ம் ஆண்டு நவம்பர் மாதம் கூட்டுறவுக் கல்விச் சரித்திரத்திலேயே முக்கிய கட்டமாகும். அப்போது தான் முதன் முதலாக கூட்டுறவு பயிற்சிக்கென மத்தியக் குழுவொன்று ரிசர்வ் பாங்கார், மத்திய அரசாங்கம் இவர்களின் ஆதரவின்கீழ் ஏற்பட்டது. கூட்டுறவுச் பயிற்சி சம்பந்தமான திட்டங்கள், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இவைகளைச் செய்யவேண்டிய பொறுப்பு அக் கமிட்டிக்கு விடப்பட்டது.

இக்குழுவின் திட்டப்படி கூட்டுறவு இலாகாவில் உள்ளவர்கள், இயக்கத்தில் உள்ள அனைவருக்கும் பயிற்சிச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த ஏற்பாட் பாட்டின்படி கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள அங்கத்தினர், அங்கத்தினரல்லாதார், நிர்வாகஸ்தர்கள், பஞ்சாயத் தார்கள் இவர்களின் பயிற்சி பொறுப்பு அகில இந்திய கூட்டுறவு யூனியனுக்கும், சீனியர் இன்ஸ்பெக்டர், ஜூனியர் இன்ஸ்பெக்டர், சூப்பர்வைசர் இவர்களது பயிற்சி ராஜ்ஜிய அரசாங்கங்களுக்கும், மற்றவர்கள், பெரிய பதவி வகிப்போர் முதலியோர் பயிற்சி மத்திய குழுவிற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பஞ்சாயத்தும் கூட்டுறவும்

நம் ராஜ்யத்தில் பஞ்சாயத்தார் பயிற்சித் திட்டம் தமிழ் நாடு கூட்டுறவு யூனியனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு வேண்டிய பண உதவி அரசாங்கம் செய்கிறது. இத்திட்டம் 1957-ம் ஆண்டிலிருந்து அமுலில் இருந்து வருகிறது. தற்போது எல்லா மாவட்டங்களிலும் சென்னை நகரிலும் இப்பயிற்சி நடந்து வருகிறது. அங்கத்தினர் களுக்கு மூன்று நாட்களும், பஞ்சாயத்தார்களுக்கு ஒரு வாரமும் நிர்வாகஸ்தர்களுக்கு ஆறுவாரமும் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கு ஒத்தாசையாக சினிமாப்படக் காட்சி வாகனமும் தமிழ் நாடு கூட்டுறவு யூனியனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டம் ஏற்பட்டதிலிருந்து

32,592 அங்கத்தினர், அங்கத்தினரல்லாதாரும்; 6,231 பஞ்சாயத்தார்களும; 1,244 நிர்வாகஸ்தர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

வளர்ந்து வரும் பயிற்சி நிலையங்கள்

சென்னையில் உள்ள மத்திய கூட்டுறவு பயிற்சிசாலையில் பயிற்சி வசதிகள் அதிகம் தேவைப்பட்டதால் இவ்வாண்டு மதுரையில் ஜூனியர் இன்ஸ்பெக்டர்களுக்கென பயிற்சி சாலை ஒன்று தனியே ஏற்படுத்தப்பட்டது. ஏற்கனவே கூறியபடி கூட்டுறவுப் பயிற்சிசாலைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன் தஞ்சை, கோவை ஆகிய இடங்களில்தான் இருந்தன. இரண்டாம் திட்ட காலத்தில் மதுரை, காஞ்சீபுரம், சேலம் ஆகிய மூன்று இடங்களிலும் புதிதாக கூட்டுறவுப் பயிற்சி சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. கூட்டுறவு அபிவிருத்தித் திட்டங்களை அமுல் நடத்த பயிற்சி பெற்றவர்கள் அதிகம் தேவைப் பட்டதால் இவ்வாண்டு இன்னும் இரண்டு புதிய பயிற்சி சாலைகள் வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. இப்பயிற்சிச்சாலைகள் தமிழ் நாடு கூட்டுறவு யூனியன் ஆதரவில் நடைபெறுகின்றன. அரசாங்கம் இப் பயிற்சிசாலைகளுக்கு வேண்டிய ஆசிரியர்கள், பயிற்சியாளர்களுக்கு வேண்டிய ஸ்டைபெண்ட், படிச்செலவு, வாசக சாலைக்கு மானியம் முதலியன கொடுத்து உதவுகிறது. இப்பயிற்சி சாலைகளில் ஒவ்வொன்றிலும் ஆண்டிற்கு 200 பேர்களுக்கு மேல் பயிற்சி பெறுகிறார்கள். இதோடு மட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களில் சேவை செய்து பயிற்சியின்றி இருப்பவர்களுக்குப் பிரத்தியேகமாக ஒரு குறுகிய காலப் பயிற்சித்திட்டம் ஏற்பாடாகி தமிழ் நாடு கூட்டுறவு யூனியன் சார்பில் நடந்து வருகிறது. இதனால் ஏற்படும் செலவு பூராவையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது.

இதர பெரிய அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுக்க ரிசர்வ் பாங்காரே பூனா கூட்டுறவு கல்லூரியிலும் பிராந்திய பயிற்சிசாலைகளிலும் ஏற்பாடு செய்கிறார்கள். நம் ராஜ்ஜியத்தின் பிரத்தியேகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, சென்னையில் ஒரு கூட்டுறவு கல்லூரியை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

கூட்டுறவுக் கல்வியைப் பரப்ப பயிற்சித் திட்டங்கள் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் பிரசாரமும், விளம்பரமுமாகும். நம் ராஜ்ஜியத்தில் இவ்வலுவல்களைத் தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் மேற்கொண்டுள்ளது. இவைகளுக்கு வேண்டிய நிதி உதவியை அரசாங்கம் செய்கிறது. இவைகளுக்கான கருத்தரங்குகள் பொருட்காட்சிகள், நாடகங்கள், மகாநாடுகள் நடத்துதல், பிரசுரங்கள் முதலிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மற்றும் யூனியன் ஆங்கிலத்தில் "சென்னை கூட்டுறவுச் சஞ்சிகை" என்ற ஒரு மாத இதழும் தமிழில் "கூட்டுறவு" என்ற மாத இதழும் நடத்தி வருகிறது. சென்னையில் "நவமணி" என்னும் கூட்டுறவு தமிழ் தினசரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு கூட்டுறவு இயக்கத்திற்குச் சிறந்த சேவை செய்து வருகிறது.

கூட்டுறவு முறை வளர....

இதுகாறும் கூட்டுறவுக்கல்வியைப் பரப்ப பொதுவாக நம் தேசத்திலும், குறிப்பாக நம் ராஜ்ஜியத்திலும், கையாளும் முறைகளைப்பற்றிக் கூறப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தை நல்ல முறையில் பரப்பவும், அதனால் மக்கள் முழுப்பயனை அடையவும், வெளி நாடுகளில் அரசாங்கமும், கூட்டுறவு சங்கங்களும் மட்டுமேயன்றி, பல்கலைக் கழகங்களும், வானொலி நிலையங்களும், விவசாயச் சங்கங்களும், தொழிற்சங்கங்களும், மாதர் சங்கங்களும், முதியோர் கல்வி ஸ்தாபனங்களும் மிகவும் பாடுபடுகின்றன. இவ்வித முயற்சிகள் முக்கியமாக நம் நாட்டில் மிக அதிகமாகத் தேவைப்படுகின்றன. கூட்டுறவு ஸ்தாபனங்கள் கூட்டுறவுக் கல்வியைப் பரப்ப தனிக்கவனம் செலுத்த வேண்டும். ராஜ்ஜிய கூட்டுறவு பாங்கு, மத்திய நில அடமான பாங்கு, ராஜ்ஜிய நெசவாளர் கூட்டுறவு சங்கம் போன்ற பெரிய கூட்டுறவு ஸ்தாபனங்கள் பிரத்தியேகமாக பொது ஜனத் தொடர்பு அதிகாரிகளை நியமித்து அங்கத்தினர்களிடம் கூட்டுறவுக் கல்வியைப்பரப்புவித்தால் ஸ்தாபனங்கள் எந்த நோக்கங்களுக்காக ஏற்பட்டனவோ அந்நோக்கங்களை அடைய ஏதுவாகும். ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் அமுலாகும் கூட்டுறவுத் திட்டங்களின் உண்மையான பலன்களை அடைய மக்கள் கூட்டுறவுக்கல்வியில் போதிய ஊக்கம் காட்டுவார்களாக!

(சென்னை வானொலியில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு)

கேள்வியும் பதிலும்

[சென்ற இதழ்த் தொடர்ச்சி.]

கேள்வி 9 : குடிதண்ணீர், ரோடுகளை இணைத்தல் ஆகியவற்றிற்காக உள்ள நிதி வசதிகளை கிராமப் பள்ளிக்கூட கட்டட வேலைகளுக்காக உபயோகப் படுத்தலாமா ?

பதில் : உபயோகப்படுத்தலாம். ஆனால் எந்தெந்த இடங்களில் குடிதண்ணீர், சாலைகள் இணைப்பு ஆகியவை களுக்காக, உபயோகப்படுத்த வேண்டிய நிதிகள் முழுமையும் உபயோகப்படுத்த முடியாத நிலையில் பிரதேச நிலைமைகள் உள்ளனவோ, அங்கேதான் இந்த மாதிரி மாற்றி உபயோகப்படுத்தலாம்.

கேள்வி 10 : பலவகைப்பட்ட வேலைத் திட்டங்களுக்காக அளிக்கப்படுகிற மானியத் தொகையின் விகிதாச்சாரம் என்ன ?

பதில் : 1. கிராமக் குடிதண்ணீர் வழங்கு வேலைகள்— 75 சத விகிதம்.*

2. சாலை வேலைகள்—

முறையே ஏ, பி, சி, டி என்று பிரிக்கப்பட்டுள்ள வட்டாரங்களுக்கு,

50 சத விகிதம்.
60 சத விகிதம்.
70 சத விகிதம்.
80 சத விகிதம்.

3. பள்ளிக்கூட கட்டடங்கள்—50 சத விகிதம்.

[கிராமப் பள்ளிக்கூட கட்டடங்களுக்கான நன்கொடை விகிதாச்சாரமானது, மூன்றாவது திட்டக் காலத்தில் புதிதாகத் துவக்கப்படும் ஒவ்வொரு பள்ளி இடத்திற்கும் ரூ. 15 என்ற அளவில் இருக்கும்.]

* ஹரிஜனங்கள், மற்றபடி ஏழைகள், பிற்பட்ட வகுப்பினர்கள நலனுக்காகச் செய்யப்படும் கிணறு வேலைகள் ஆகியவை முழு மானியம் பெற்ற வேலைகளாகச் செய்யப் படும்.

கேள்வி 11 : கிராம வேலைகள் மானியத்தின்கீழ் செய்யப் படுகிற வேலைகளுக்கு ஏதாவது நிதி வரையறை உள்ளதா ?

பதில் : ஆம். உண்டு. ரூ. 40,000-க்கு மேல் செல வாகிற வேலைகள் கிராம வேலைகள மானியத்தின்கீழ் செய்யப்படக்கூடாது. ஆனால், இந்த விதி, தகுதி யுள்ள அதிகாரிகளால் முன்பே அனுமதி அளிக்கப் பட்டுள்ள வேலைகளுக்கும், இப்பொழுது வேலை தொடங்கி நடைபெற்று வருகிற வேலைகளுக்கும் கிடையாது.

கேள்வி 12 : நிர்வாக ரீதியில் வேலைகளுக்கு அனுமதி அளிக்க, பல்வகைப்பட்ட அதிகாரிகளின் அதிகாரங்கள் என்னென்ன ?

பதில் : முன்பே 'ஒப்படைப்பு' ஆகிவிட்ட இடங்களில்— பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு முழு அதி காரங்கள் உண்டு.

மற்ற பிரதேசங்களில்—

வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கு—ரூ. 3,000 வரை யில் ;

ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளுக்கு—ரூ. 10,000 வரையில் ;

கலெக்டர்களுக்கு—ரூ. 25,000 வரையில் ;

அரசாங்கத்திற்கு (கிராம நல, தல நிர்வாகத்துறை)— ரூ. 25,000-க்கு மேல்.

கேள்வி 12(பி): வேலைகளுக்கு தொழில் ரீதியான அனுமதியினை அளிக்க தகுதிபெற்றுள்ள அதிகாரி களின் அதிகாரங்கள் எவை ?

பதில் : ரூ. 3,000 வரையில் செலவு ஆகும் வேலைகள்— யூனியன் எஞ்சினியர்கள்.

ரூ. 3,000 முதல ரூ. 10,000 வரையில் செலவு ஆகும் வேலைகள்—அசிஸ்டெண்ட் எஞ்சினியர்கள்.

ரூ. 10,000-க்கு மேல் செலவு ஆகும் வேலைகள்— டிவிஷனல் எஞ்சினியர்/சூபரின்டிங் எஞ்சினியர்.

கேள்வி 13 : வேலைகளுக்குப் பணம் அளிப்பது பற்றிய வகையில் உள்ள நடைமுறை என்ன ?

பதில் : ஒப்படைப்பு நடைபெறாத பிரதேசங்களில், புது வேலைகளுக்கு, கலெக்டர்கள், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள் ஆகிய வர்களால் அநுமதி அளிக்கப்படும். அவைகளுக்கு ஆகும் செலவு, 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதியிட்ட, கிராம நல-தல நிர்வாகத் துறை யின் அரசாங்க ஆணை எண் 2103-ன் பாராக்கள் 6 (v), 6 (vi) குறிப்பிட்டுள்ள மாநிலக் கணககுத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும். 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்போ, அல்லது அதற்குப் பிறகோ, வட்டார வளர்ச்சி அதிகாரி அல்லா மல், மற்ற அதிகாரிகளினால் அநுமதி அளிக்கப் பட்டு, ஒப்படைப்பு சமயத்தில் முடிவு பெறாமல் உள்ள வேலைகள், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளால் முடிக்கப்பெற்று, பிறகு அவை பஞ்சாயத்து யூனியன் கள்/பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்படும். அநுமதி உத்தரவுகளில் குறிப்பிட்டுள்ள அதே கணக் குத் தலைப்பிலேயே, இந்த வேலைகளுக்காகும் செலவானது தொடர்ந்து பற்று வைக்கப்படும்.

ஒப்படைப்புக்கு முன்பு, வட்டார வளர்ச்சி அதிகாரி களால் அநுமதிக்கப்பட்டு, ஒப்படைப்பு சமயத்தில் முடிவு பெறாமல் உள்ள எல்லா வேலைகளும், சம்பந் தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களால் முடிக்கப் பெறு வதுடன், அவைகளால் தங்களுடைய நிதியிலிருந்தே, தொடக்கத்தில், அந்த வேலைகளுக்காகும் செலவுக்கு பணம் அளிக்கப்படும். பஞ்சாயத்து யூனியன் மன் றங்களால் அனுமதிக்கப்பட்ட புதிய வேலைகளுக்காகும் செலவும் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்தே சமாளிக்கப்படும். 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதியிட்ட கிராம நல-தல நிர்வாகத் துறை யின் அரசாங்க ஆணை எண் 2103-ன் பாரா 7 (vi)-ல் விவரிக்கப்பட்டுள்ள வகையில், பஞ்சாயத்து யூனியன் கணக்குகளில் செலவானது புத்தகங்களில் பதிவு செய்யப்படும். பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்து செலவான தொகையைப்பற்றி வேலை வாரியாக காட்டப் பட்டுள்ள மாதாந்திர அறிக்கை கிடைக்கப் பெற்றதும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஏற்பட்டுள்ள செலவுத் தொகையினை ரெவினியூ டிவிஷனல் அதிகாரி செலவழித்ததைத் திரும்பிக் கொடுத்துவிடுவார்.

(தொடரும்)





"கடம்பத்தூர் காட்டும் வழி"

கடம்பத்தூர் பஞ்சாயத்து யூனியனில், மனித சக்தியைப் பயன்படுத்தி. நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அத்திட்டங்களில் பழுதுபட்ட பாதைகளைச் செப்பனிடுதல், புதிய பாதைகளை அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள், பஞ்சாயத்து அலுவலகங்கள், கூட்டுறவுக் கிடங்குகள் முதலயன கட்டுதல் ஆகிய வேலைகள் நடைபெறுகின்றன.

1, 4. பாலங்களும், சரியான பாதைகளும் இல்லாததால், மக்களும், வண்டிகளும் தொல்லைப்படுதல்.

2. வெள்ளேரித் தாங்கல் கிராமத்தில் மக்கள் கூட்டுறவால் ரஸ்தா போடப்படுகிறது.

5. தண்டலம் கிராமத்தில்....

6. அதிகத்தூரில் புதிய பள்ளி....

3, 7. புதியபாதைகள்....

* (விவரம் :—14-ம் பக்கம் பார்க்கவும்,)

மக்கள் சபைக்கும் (House of the People) தமிழ்நாடு சட்டசபைக்கும் (Legislative Assembly) ஒரே சமயத்தில் நடக்கும் தேர்தல்களில், வாக்குச் சீட்டுகள் பதிவு செய்வதற்காக, வாக்காளர்களுக்குக் கொடுக்கப்படும் விளக்கக் குறிப்புகள்

முதல் மேஜையில் உட்கார்ந்திருக்கிற தேர்தல் சாவடி அலுவலர் (Polling Officer), வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரைத் தேடிக் கண்டுபிடிப்பார். அதன் பின், உங்கள் இடது சுட்டு விரலில், அழிக்க முடியாத மைக் குறி இடப்படும். பின்னர், உங்களிடம் **இரண்டு** வாக்குச் சீட்டுகள் கொடுக்கப்படும். **இளஞ் சிவப்பு (pink)** நிறத்தி லுள்ள சீட்டு, சட்டசபைத் தோதலுக்குரியதாகும். **வெள்ளை** நிறத்திலுள்ளது, மக்கட் சபைத் தேர்தலுக்கு உரியதாகும்.

ஒவ்வொரு வாக்குச் சீட்டிலும் (ballot paper) அபேட் சகர்களின் பெயர்கள் இருக்கும். ஒவ்வொரு அபேட்சகரின் பெயருக்கு எதிரில், அவரது தேர்தல் சின்னம், அச்சிடப்பட் டிருக்கும். மாதிரி வாக்குச் சீட்டுகள் இரண்டு, எதிர்ப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன பெயர்கள் கற்பனையே).

இந்த இரண்டு வாக்குச் சீட்டுகளையும் எடுத்துக்கொண்டு, இரண்டாவது மேஜைக்குச் செல்லுங்கள். தேர்தல் சாவடி அலுவலர் ஒருவர், அந்த இரண்டு வாக்குச் சீட்டுகளையும் வாங்கிக்கொண்டு, நீங்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டு மென்பதை, உங்களுக்கு விளக்கிச் சொல்லி, சட்ட சபை வாக்குச் சீட்டையும் (இளஞ் சிவப்பு நிறம்), மையிட்ட ரப்பர் ஸ்டாம்பையும், உங்களிடம் கொடுப்பார். அந்த ரப்பர் ஸ்டாம்பை அழுத்தினால், இதில் குறித்துள்ள முத்திரை விழும். ⊗

வாக்குச் சீட்டையும், ரப்பர் ஸ்டாம்பையும் எடுத்துக் கொண்டு வாக்குப் பதிவுச் செய்யும் முதல் அறைக்குச் செல்லுங்கள்.

ஓர் உறுப்பினரை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும். எனவே, ஓர் அபேட்சகருக்கு மட்டுமே குறியிடுங்கள்.

இளஞ் சிவப்பு நிற வாக்குச் சீட்டை மேஜையின்மேல் வைத்து, நீங்கள் எந்த அபேட்சகருக்கு வாக்களிக்க விரும்புகிறீர்களோ, அந்த அபேட்சகரின் தேர்தல் சின்னத்தின்மேல், ரப்பர் ஸ்டாம்பு கொண்டு, தெளிவாக முத்திரையைப் பதியுங்கள். இப்போது சட்டசபை அபேட்சகருக்கு வாக்களிக்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரே ஒரு சின்னத்தில்தான், நீங்கள் குறியிடவேண்டும். தேர்தல் சீட்டின் பின்புறத்தில், குறியிடாதீர்கள்; வேறு எந்தக் குறியும் இடாதீர்கள்; பெருவிரல் முத்திரை பதிக்காதீர்கள். வாக்குச் சீட்டில், உங்கள் பெயரையோ, வேறு எதையுமோ, எழுதாதீர்கள். இவற்றில் எதை யேனும் நீங்கள் செய்தீர்களானால், உங்கள் வாக்கு செல்லாமல் போகும்.

குறியிட்ட பிறகு, வாக்குச் சீட்டை, முன்பு மடித்திருந்த முறையிலேயே மடியுங்கள். அதன் பின், வாக்குப் பதிவு செய்யும் அறையை விட்டு வெளியே வந்துவிடுங்கள்.

இரண்டாவது மேஜையின் மேல் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டியில் (Ballot box) மடித்த வாக்குச் சீட்டைப் போட்டு விடுங்கள். அங்கு உட்கார்ந்திருக்கிற தேர்தல் சாவடி அலுவலரிடம், ரப்பர் ஸ்டாம்பைக் கொடுத்துவிடுங்கள். இப்போது அவர் மக்கள் சபை வாக்குச் சீட்டையும் (வெள்ளை நிறம்), மையிட்ட ரப்பர் ஸ்டாம்பையும், உங்களிடம் கொடுப்பார்.

வாக்குப் பதிவு செய்யும் **இரண்டாவது** அறைக்குச் செல்லுங்கள். **வெள்ளை நிற வாக்குச் சீட்டில்,** நீங்கள் தேர்ந்தெடுக்க விரும்பும் அபேட்சகரின் சின்னத்தில் ரப்பர் ஸ்டாம்பைக் கொண்டு முத்திரை யிடுங்கள். நீங்கள் இப்போது மக்கள் சபை அபேட்சகருக்கு வாக்களிக்கிறீர்களென்பதை, ஞாபகத்தில் கொள்ளுங்கள். நீங்கள் செய்யக்கூடாதவை என்று மேலே குறிப்பிட்டிருப் பவற்றையும் நினைவு கூருங்கள்.

வாக்குச் சீட்டை அதே மாதிரி மடித்து, வாக்குப் பதிவு செய்யும் அறையைவிட்டு வெளியே வந்து, வாக்குச் சீட்டை அதே வாக்குப் பெட்டியில் போட்டுவிட்டு, ரப்பர் ஸ்டாம்பைத் தேர்தல் சாவடி அலுவலரிடம் கொடுத்து விடுங்கள்.

உங்களுக்கு ஏதேனும் சந்தேகமோ, கஷ்டமோ இருந்தால், **தேர்தல் சாவடித் தலைமை அலுவலரை** (Presiding Officer) **கேட்கத் தயங்காதீர்கள்.** அவர் **உங்களுக்கு உதவி செய்வதற்காகவே,** அங்கு இருக்கிறார்.

சட்டசபை வாக்குச் சீட்டு

[illegible]ண்ணாமலை



PUHAR

ஆறுமுகம்

இருசப்பன்



உலகநாதன்

ஏழுமலை

கண்ணப்பன்

மக்கள்சபை வாக்குச் சீட்டு

அனந்தராமன்

VANCHI

அருமைநாதன்



சந்திரன்

தம்புசாமி

மாணிக்கம்



முனுசாமி







1. கடம்பத்தூர் பஞ்சாயத்து யூனியனில் கூட்டுறவின் வளர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டும் கூட்டுறவு பாங்கின் கிடங்கு. இந்த பாங்கின் மூலம், கிராமவாசிகள் இலாபகரமான முறையில் மகசூலை விற்க வசதி ஏற்பட்டுள்ளது.

2. கடம்பத்தூர் பஞ்சாயத்து யூனியனை சேர்ந்த உளுந்தை கிராமத்தில் இளைஞர்களின் உற்சாகமான உழைப்பினால் ஏற்பட்டுள்ள சமூகக் கல்வி நிலையம். இங்கு ரேடியோ, நூல் நிலையம் முதலியன உண்டு.

3, 4. பெண்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தைப் பயனுள்ள கைத்தொழிலிலும், கல்வியிலும் செலவிடுகின்றனர். 5. திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியன்—காக்களூரில், கம்போஸ்டு உரத்திட்டம். கம்போஸ்டு சேகரிக்க வண்டி வருகிறது. அரசாங்கக் கடன் உதவியுடன் அமைக்கப்பட்ட இந்தத் திட்டம், எல்லா வசதிகளுடனும் வெற்றிகரமாக நடைபெறுகிறது.

6. கடம்பத்தூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கீழச்சேரி கிராமத்தில் முர்ரா ஜாதி எருமைகள் அதிகப்படியான பால் தருகின்றன.

ஐந்தாண்டுத் திட்டம்

(வில்லுப் பாட்டு)

திரு. இராமச்சந்திரன், முசிரி வட்டம்.

விநாயகர் வாழ்த்து

ஆனைமுகனே ! அம்மையுமை பாலனே !
ஆறுமுக தேவனின் அன்புமிகு அண்ணனே!
பானைவயிற்றோனே! பக்தர்க் கருள் வோனே !
பரமனின் மைந்தனே ! பரம தயாளனே !

தேன் தமிழில் திறமுடனே ஐந்தாண்டுத் திட்டம்தனை
தெளிவுடனே விளக்கிடவே துணைநீயும் வாரு
மையா !

மாண்புடன் மக்களெல்லாம் மகிழ்வுடன் வாழ்ந்திடவே
முன்வந்து நின்றுஎமை மூத்தவனே காருமையா !

கலைமகள் வாழ்த்து

பல்லவி.

நாடிவந்தேன் தேவியே—உன் மலரடி
பாடிப் புகழ்ந்திடவே.

அநுபல்லவி.

பாடிப் பணிந்துனையே பைந்தமிழ் இசைதனில்
பரவசம் அடையும்என் பாவங்கள் திரென்று (நாடி)

சரணம்.

நீலவானின் மதியே ! சிலத் திருவுருவே !
வீணையைக் கையிலேந்தும் கான சரஸ்வதியே !
அறியாமை காரிருள் அகற்றிடும் தேவியே !
அறிவொளி அளித்திடும் தேவியே உன்பாதம் (நாடி)

காந்திமகான் வாழ்த்து

அன்னைசொல் அகத்தில் கொண்டு
அன்னிய நாடு சென்று
கண்ணினும் மேலாம் கல்வி
கருத்துடன் கற்று வந்து
தன்னலம் தன்னை ஒட்டி
தருக்கர்கள் சூதை வாட்டி
மண்ணிலே குருதி சிந்தா
மகிமைப் போர் செய்த வீரா !

ஏசுவின் வழியில் புத்தன்
ஏற்றதோர் முறையில் வாழ்வை
மாசுமரு வின்றி வாழ்ந்து
மாண்புடன் அடிமை நீக்க
நேசமாய் மக்கள் தம்மை
நேர்மையாம் வழியிற் கூட்டி
பாசமாய் ஒன்று சேர்த்த
பாரத நாட்டு வீரா !

அகிம்சையெனும் தேரிலேரி
அன்பெனும் வில்லை ஏந்தி
சகிப்பெனும் வலிமை கொண்ட
சரங்களை நாணில் பூட்டி
மகிழ்வுடன் மக்கள் வாழ
மதிப்பரிய உரிமை தன்னை
அகிலமே வியக்கும் வண்ணம்
அளித்திட்ட காந்தி வாழ்க !

இப்படியாகத்தானே சபையோர்களே ! பெரியோர்களே ! தாய்மார்களே ! அன்பர்களே ! மூத்தவரான கணபதியையும் கல்விக்கரசியா[illegible] சரஸ்தவதியையும், அகிம்சா மூர்த்தி ! நம் தேசியத் தந்தை ! ஆசியாவின் ஜோதி ! மகாத்மா காந்தியையும் வாழ்த்திப் பாடி அவர்களின் துணை கொண்டு ஐந்தாண்டுத் திட்டத்தினைப் பற்றி உங்களுக்கு எடுத்துக்கூற நாங்கள் முன் வந்துள்ளோம். இதிலே ஏதேனும் குற்றம் குறைகள் தென்பட்டால் அவற்றைப் பொறுத்து எங்களை ஆசிர்வதிக்குமாறு வணக்கத்துடன் கேட்டுகொள்ளுகிறோம்.

வணக்கம்.

தேசமெங்கும் வளம்தன்னைப் பொங்கச் செய்யும் திட்டம்
திறமை மிக்கோர் தொழில் வளமும் திகழச் செய்யும் திட்டம்

நேசமுடன் மக்கள் ஒன்று கூடச் செய்யும் திட்டம்
நல்லவர்கள் நலமுடனே வாழச் செய்யும் திட்டம்

மாசுமரு வில்லாஏழை மக்கள்வாழும் திட்டம்
மாந்தரெல்லாம் மகிழ்வுடனே வாழச் செய்யும் திட்டம்
காசுபணம் தந்துதவி கடமைசெய்யும் திட்டம்
கருத்துடனே நமைகாக்கும் ஐந்தாண்டுத் திட்டம்

கல்வியுடன் கலைகளுமே வளர்ந்திடும்நல் திட்டம்
காடுவெட்டி கழனிவளம் காணும்நல்ல திட்டம்
செல்வம்தனை நாட்டினிலே பெருக்கும் நல்லதிட்டம்
சிறப்புடனே நாட்டைக்காக்கும் ஐந்தாண்டுத் திட்டம்

அணைக்கட்டு பலகட்டி பயிர்வளர்க்கும் திட்டம்
ஆராய்ச்சி சாலைபல அளிக்கும் இந்த திட்டம்
இணையில்லா தொழில்கள் பல வளர்க்கும் நல்ல திட்டம்
இவ்வுலகில் அமைதிநிலை நாட்டுமிந்த திட்டம்

பஞ்சாயத் தாட்சியிலே—பலவித
பலன்களும் பெற்றிடுவோம் ;
பஞ்சம் பசிப்பிணியே—இனி நம்
பக்கத்தில் வராமல் செய்வோம் ;

ஐந்தாண்டு திட்டம்தனில்—உதவி
ஐயமின்றிக் கிடைக்கும் ;
இந்நாட்டு மக்கள் கண்ணீர்—தனையே
இத்திட்டம் தான் துடைக்கும்.

சமுதாயத் திட்டம்தன்னுல்—நாமும்
சேமம் மிகப் பெறுவோம் ;
அமைதியாய் உழவர் இன்னுள்—இந்த
அவனியில் உயர்ந்திடுவோம்.

அறியாமை இருள்போக்கவும்—நாம்
அவனியில் உயர்ந்திடவும் ;
அறிவொளி பெற்றிடவே—பள்ளி
அமைத்தென்றும் நமக்குதவும்.

காந்திமகான் கனவும்—இன்றே
கருத்துடன் உயருதல்பார் ;
சாந்தியுடன் உலகில்—வாழ
சந்ததமும் செய்திடுவார்.

ஐந்தாண்டுத் திட்டமதில்—நல்உயர்வு
கண்டோமடி நல்உயர்வு கண்டோம் ;
நைந்து நிற்கும் நிலைமாறி—நல்வாழ்வு
கண்டோமடி நல்வாழ்வு கண்டோம்.

சமுதாயத் திட்டமதில்—புதுவாழ்வு
கண்டோமடி புதுவாழ்வு கண்டோம் ;
சமமாக செல்வர் ஏழை—ஒரு வாழ்வு
கண்டோமடி ஒருவாழ்வு கண்டோம்.

பஞ்சாயத்தாட்சிதனில்—இன்னுளில்
நாமுலகில் என்னுளும் நன்ருய் ;
பஞ்சமின்றி வாழ்ந்திடுவோம்—இன்னுளில்
நாமுலகில் என்னுளும் ஒன்ருய்.

காந்திமகான் கனவது போல்—சர்வ சம
வாழ்வில்நாம் சர்வ சம வாழ்வில்
சாந்திதனைக் கண்டிடுவோம்—சர்வ சம
வாழ்வில் நாம் சர்வ சம வாழ்வில்.

அதாவது......நம்மை அன்னியன் அடிமைப்படுத்தி இருந்த காலத்திலே நம்மிடம் இருந்த செல்வங்களை எல்லாம் சுரண்டிக்கொண்டு சென்றுவிட்டான். சுதந்திரம் பெற்ற நாம் நமது நாட்டின் பற்றுக் குறையை, நலிந்து போன வளத்தினை, ஈடு செய்ய வேண்டுமானுல்,நல் முறையிலே ஒவ்வொருவரும் உழைப்பது அவசியமாகும். அதற்கான வழி வகைகளைச் செய்யவும், அணைகள் கட்டவும், ஆராய்ச்சிசாலைகள் அமைக்கவும், தொழில்துறைகளை வளர்க்கவும், அரசியலார் திட்டம் தீட்டுகிருர்கள். அவைகளை ஐந்தாண்டுக்குள் செய்து முடிக்கிருர்கள்.

இதுவே ஐந்தாண்டு திட்டம் எனப்படுகிறது. இது போல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடைந்து விட்டன. தற்போது நடைபெறுவது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டமாகும். இத்திட்டம் நன்முறையில் நடைபெற உறு துணையாக மற்ருேர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதுவே தேசிய விஸ்தரிப்புத் திட்டமாகும்.

1952-ம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட சமுதாய அபிவிருத்தித் திட்டமானது நன்முறையில் உயர்ந்து வளம் தருகிறது. நமது பிரதமர் அவர்கள் கூறியுள்ளதுபோல், சமுதாய அபிவிருத்தி என்ற வித்தானது செடியாக பிரம்மாண்ட விருட்சமாக வளர்ந்து இந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் குளிர் நிழல் கொடுக்கும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை......

ஐயமில்லை........

ஐயமில்லை ஐயமில்லை ஐயமென்ப தில்லையே
வையகத்தில் நம்நாடு வளரும் என்றும் உண்மையே.
பையப்பையப் பாரதத்தின் சுதந்திரம்தான் உயர்ந்துமே
பாரினிலே பண்புடனே பெருமைகொள்ளும் திண்ணமே.

ஐயமில்லை........

ஐந்தாண்டுத் திட்டமதில் அபிவிருத்தித் திட்டம்தான்
எந்நாளும் எழில்தன்னை நம்நாட்டில் குவிக்குமே
நைந்துழைக்கும் ஏழைமக்கள் நலம்பெற்று வாழ்விலே
நலம்பலவும் கூட்டிவைத்து நானிலத்தில் உயருமே.

ஐயமில்லை........

மகாத்மா காந்தியடிகள் குறிப்பிட்டதுபோல் நமது நாட்டின் முதுகெலும்பு கிராமங்களேயாகும். கிராமம் அழிந்தால் இந்தியாவும் அழிந்துவிடும். கிராமத்தை இறைவன் உண்டாக்கினுன் ; நகரத்தை மனிதன் உண்டாக்கினுன். கிராம மக்கள் உழைத்து உற்பத்தியைப் பெருக்காவிட்டால் நகரம் நரகம் ஆகிவிடும்.

முன் காலத்தில் நம் நாடு செல்வம் கொழித்துச் சிறந்திருந்தது. வாணிபத்தில் வளம் பெற்றிருந்தது. எனவே ரோமாபுரியில் உள்ள செல்வமெல்லாம் இந்தியாவுக்கு வந்து குவிந்துவிட்டது என "பிளினி" என்னும் சரித்திர ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சமயம் நமது நாட்டை ஆண்ட மொகலாய சக்கரவர்த்தி ஒருவர் ராஜ்யத்தில் உள்ள தங்கத்தை எல்லாம் எடை போடும்படி கட்டளை இட்டார். ஆனுல்.... டில்லி, ஆக்ரா நகரில் இருந்த தங்கங்களை மட்டும் கூட 6 மாதங்களுக்குள் எடை போட்டு முடிக்க இயலவில்லையாம் ! அவ்வளவு செல்வங்களும் என்ன ஆயின. நம்மை ஆண்ட அன்னியர்கள்....

சுரண்டிக்கொண்டு ஓடிவிட்டான்டி—மானே
செல்வம்கொள்ளை கொண்டுவிட்டான்டி
மருட்டிநம்மை மடக்கி நாட்டில்
மதிப்பரிய செல்வமெல்லாம்........சுரண்டி

கஜினிஎனும் மன்னனொருவன்—படை
கொண்டுவந்து கொள்ளை கொண்டான்டி
விசஎண்ணம் கொண்ட வெள்ளையன்—நம்மை
வாட்டி செல்வம் கொண்டுசென்ருன்டி.

சூதுவாது அறியாநம்மை—மாற்ருன்
சிதைத்துச் செல்வம் கொண்டுசென்ருன்டி.
ஆதிமுதல் செல்வம்கொண்ட—நாமும்
ஆண்டியாகி விட்டோமடி.

ஏமாந்து போனோமடா—தம்பி
ஏற்றம் இழந்தோமடா
ஏமாளியாக நம்மை எண்ணிய அன்னியரால்
ஏமாந்து போனோமடா.

உலகினிலே உயர்ந்தமலை
இமயந்தனைப் பெற்றிருந்தும்
பலநாளும் காலம்பார்த்து
பதுங்கிவந்த பகைவனிடம்........(ஏமா)

இயற்கைவளம் பெற்றிருந்தும்
இன்பவாழ்வு கொண்டிருந்தும்
மயக்குமொழி பேசிவந்த
மற்றநாட்டுக் காரனிடம்........(ஏமா)

வள்ளல்குணம் நமக்கிருந்தும்
வாரித்தரும் கரமிருந்தும்
கள்ளமனம் கொண்ட வெள்ளைக்
காரனிடம் நாமும் அன்று........(ஏமா)

ஆகவேதான், நாம் சுதந்திரம் பெற்றும், சுபிட்சம் பெறாத நிலையில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறோம் இந்நிலையை மாற்றி, சுபிட்சம் பெருக்கத்தான் ஐந்தாண்டுத் திட்டம் அமைத்து சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நமக்கு உதவுகிறார்கள். இந்த உதவியானது பொதுமக்களுக்கு நன் முறையில் பலன்தர வேண்டுமென்தற்காகவே தான் தற்போது பஞ்சாயத்து யூனியன் அமைத்து பொது மக்களின் தலைவர்களாகிய ஊராட்சி மன்றத் தலைவர்களெல்லாம் ஒன்றுகூடித் தங்களுக்குள் "சேர்மென்" எனும் ஒரு தலைவரைத் தேர்தெடுத்து மக்களுக்கு நன்மை செய்கிறார்கள். இந்த யூனியன் திட்டமானது......

ஊராட்சித் தலைவர் ஒன்று கூடியே
உயர்ந்தநல் திட்டங்கள் திட்டிடுவார் ;
ஊராட்சிக் கூட்டு மன்றம் தன்னிலே
உன்னத செயல்பல செய்திடுவார்.

வேண்டிடும் திட்டங்கள் வெற்றியும் பெறவே
விருப்புடன் ஆணையர் துணைபுரிவார் ;
மாண்புடன் மக்களும் மகிழ்வுடன் வாழ்ந்திட
மாபெரும் செயல்களும் செய்திடுவார்.

அறியாமை இருளினை அகற்றி மக்களும்
அறிவொளி தன்னைப் பெற்றிடவே
பரிவுடன் பட்டி தொட்டி எங்குமே
பள்ளிகள் தன்னைத் திறந்திடுவார்.

மாசு இன்றியே மக்களும் வாழ்ந்திட
மதிப்பருங் கல்விகள் அனைத்தளிக்கும்
ஆசிரியர்தம் குறைகள் நீக்கியே
அன்புடன் உதவியும் செய்திடுவார்.

குடுகுடு........குடுகுடு.......குடுகுடு
குடுகுடு.........குடுகுடு.........குடுகுடு
பஞ்சாயத் தாட்சியிலே பஞ்சமெல்லாம் போகுது
பஞ்சம் பறக்குது பலகலை உயருது
நெஞ்சம் உயருது நேர்மை வளருது
கேளப்பா என்தம்பி ! கேளப்பா கேளு !....
குடுகுடு....

ஐந்தாண்டு திட்டத்திலே அறிவெல்லாம் வளருது
பள்ளிகள் பெருகுது படிப்பு வளருது
பிள்ளைகட் கிலவச உணவுமே கிடைக்குது
முதியோர் பள்ளியும் சமுகக் கல்வியும்
புதிய முறையிலே மக்களை உயர்த்துது.
கேளப்பா என்தம்பி ! கேளப்பா கேளு !....
குடுகுடு....

சமுதாயத் திட்டமே சேமமே செய்யுது
செல்வம் உயருது சிந்தை மகிழுது
கள்ளம் தொலையுது களிப்பு வளருது
கேளப்பா என்தம்பி ! கேளப்பா கேளு !....
குடுகுடு....

ஏழையை ஏய்ப்பவன் இனியிந்த உலகினிலே
ஐயோன்னு போவான் அழிந்துமே தான்சாவான்
கையோ(ஒ)டு ஏந்தியே கஷ்டமே தான்பெறுவான்
பாதைகள் புதுப்பித்து பஸ் பல ஓடுது
சேதங்கள் குறையுது சேமங்கள் வளருது
கேளப்பா என்தம்பி ! கேளப்பா கேளு !....
குடுகுடு....

அரசாங்கத்துக்கு நாம் செலுத்தும் பணமானது நமக்கே திரும்பிவந்து நலம் பல செய்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். முன்பு எல்லாம் சாதாரணமாக ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரைக் காணக் கூட. . . . பேசக் கூட மக்கள் அஞ்சுவார்கள். ஆனால் இன்றோ ! கலெக்டர், அமைச்சர்கூட மக்களோடு வந்து உள்ளங் கலந்து, உரையாடி, துன்பம் துடைத்து, நாட்டில் செழிப்பு உண்டாக்கிறார்கள். இப்போது காலம் மாறிப் போச்சு.

காலம் மாறிப் போச்சு—நம்
கவலைகள் நீங்கிப் போச்சு
ஆளும் அதிகாரி கண்டதும்—நாமும்
அஞ்சிடும் காலம் போச்சு.

நாலு பேருடன் அதிகாரி—கூடி
நன்மை செய்திட லாச்சு
ஏழை மக்களை வாட்டும்—கொடிய
எத்துகள் நீங்கிப் போச்சு. . . . காலம். .

வரிமிக நாமும் கொடுத்தும்—நாடு
வளம் பெற வில்லை என்றே
வருத்தம் கொள்ளும் காலம்—இன்று
வாடியே ஓடிட லாச்சு, காலம்

உரிமைகள் யாவும் தந்து—நம்
உழைப்புக்கு மதிப்பு தந்து
பரிவுடன் காக்கும் ஆட்சி—நம்
பஞ்சாயத் தாகிப் போச்சு.

மனிதர்களாகிய நமக்கு மட்டும் நன்மை செய்வதோடு அல்லாமல் நமக்குப் பயன்படக் கூடிய பயிர்த் தொழில், பிராணிகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும்கூட உதவி புரிகிறார்கள். கேளு தம்பி! இந்த ஐந்தாண்டுத் திட்டமானது . . . .

தொகையறா.

சேமம் தனையளிக்கும் திட்டமடா தேசமதில் உழவர்கள்
உயர்ந்திட உதவுமடா
தேசிய விஸ்தரிப்புத் திட்டம் தேசமெங்கும் புகழ்பொங்க
உயருதடா.

பாட்டு.

சமுதாய அபிவிருத்தித் திட்டம்தனை உங்களுக்கு
அமுலுடனே விளக்கிடுகிறேன் சின்னத்தம்பி—நீ
அறிவில் எண்ணி ஆற்றல் கொள்ளு செல்லத்தம்பி.
நாட்டினிலே விவசாயம் நாள்தோறும் உயர்ந்திடவே
காட்டிடுவார் புதுமுறைகள் சின்னத்தம்பி—ஜப்பான்
சாகுபடி கூடவுண்டு செல்லத்தம்பி.
கைத்தொழிலும் செய்தொழிலும் கருத்துடனே உயர்ந்
திடவே
ஐயமின்றி உதவி செய்வார் செல்லத்தம்பி—பல
கைத்தொழிலும் பழகிடுவார் சின்னத்தம்பி.
கால்நடைகள் வாங்கிடவும் கோழிப்பண்ணை வைத்திடவும்
நாட்டமுடன் உதவிடுவார் சின்னத்தம்பி—மக்கள்
வாட்டம் தன்னைப் போக்கிடுவார் செல்லத்தம்பி.
சமூகத்தில் பழகிடவும் சகல கலை அறிந்திடவும்
சமூகக் கல்வி போதிக்கிறார் சின்னத்தம்பி—நமக்கு
சகல கலை போதிக்கிறார் செல்லத்தம்பி.

தொகையறா.

தேசமெங்கும் வளம்பொங்கச் செய்திடும் திட்டம். . .
ஏ. . . ஏ. .
தேசிய விஸ்தரிப்புத் திட்டம்தான் தம்பி. . . . . .

பாட்டு.

தேசமெங்கும் வளம் பொங்கச் செய்திடும் திட்டம்
தேசிய விஸ்தரிப்புத் திட்டம்தான் தம்பி.

பாட்டாளி முதல் பட்டதாரி வரை பயன்பெறும் திட்டம்
பால்பண்ணையும் கால்நடையும் வளம்பெறும் திட்டம்.
உழவரெல்லாம் உண்மையுடன் உயர்ந்திடச் செய்யும்—
இந்த
உலகமெல்லாம் போற்றும்மிக உயர்ந்ததோர் திட்டம். .
. . . . . (தேச)

சமூக நிலை உயர்வடைய உழைத்திடும் திட்டம்
சமூகக்கல்வி இரவுபள்ளி அளித்திடும் திட்டம்
மக்களெல்லாம் மாண்புடனே கூடி மகிழ்ந்திட
மனமகிழ் மன்றம் அமைக்கும் நல்ல அபிவிருத்திட்டம்.

பாருக்கெல்லாம் உணவளிக்கும் உழவா தூக்கமோ—நல்ல
பாலுடனே உணவளிக்கும் உனக்கு ஏக்கமோ—இனி
வாட்டம் வேண்டாம் திரும்பிப்பாரு இந்தப்பக்கமா—
தேசிய
விஸ்தரிப்புத் திட்டம் உந்தன் துயரைப் போக்குமே.

பாடு பட்டும் பலன் காணுதேங்கும்
பழம்பெறு உழவர்களே—தமிழ்
ஏடுகள் போற்றும் எழில் மிகு உவமை
ஏற்றிடும் உழவர்களே!

கூடு உலகினில் உளவரை உழைத்து
உங்களுக் குதவிட தரும்—நல்
மாடுகள் நோயால் இறப்பதால் களைக்கும்
மாபெரும் உழவர்களே!

ஐந்தாண்டுத் திட்டத்தின் சமுதாயத் திட்டம் உம்
அவதியைத் தீர்த்திடுமே—நீர்
நைந்துமே உருகிட வேண்டாம் உடனே
அதிகாரி தனைக்காண்பீர்.

கால்நடை தனக்கெனத் தனித்தொரு மருத்துவர்
கருத்துடன் கவனிக்கிறார்—அவர்
சிலமாய் வந்துமே கால்நடை களுக்கு
சேமந்தனைச் செய்வார்.

பஞ்சாயத்தாட்சி உம் உயர்வினுக்கென்றே
பலவித உதவி செய்யும்—நீர்
அஞ்சிட வேண்டாம் அணுகியே அவரின்
உதவியைப் பெறவிரைவீர்.

பஞ்சம் பசியாலே—இனி நாம்
பயந்திடத் தேவையில்லே.
பஞ்சாயத் தாட்சியிலே—நமக்கினி
பசியெனும் குறையுமில்லை.

பள்ளியில்லா ஊர்கள்—இனி நம்
பக்கத்தில் எங்குமில்லே;
கல்வியிலா மக்கள்—இனி நம்
கிராமங்களில் எங்குமில்லே.

கஷ்டப்படும் ஏழை—உழவன்
கண்டிட இங்குமில்லே;
இஷ்டம் போல் நல் உதவி—பெற்றுமே
உயர்த்துவோம் குவியல் நெல்லே.

புதுமுறைச் செயலை எல்லாம் —நமக்கு
பரிவுடன் கூறிடுவார்;
புது வாழ்வு பெற்றிடுவோம்—நமது
பஞ்சாயத்து ஆட்சிலே.

மேலும் நமது நாட்டில் உணவு உற்பத்திக்கு மீறி மக்கள் உற்பத்தி மிகுதியாக இருக்கிறது. இதனால் மக்கள் நன்கு உழைத்தும் உணவு உற்பத்தியைப் பெருக்கியும் நாட்டில் பற்றாக்குறை இருந்து வருகிறது. அதனால் மக்கள் உற்பத்தியைக் குறைக்க வேண்டும்.

தம்பி : அண்ணே ! ஒரு சந்தேகம் !

அண்ணன் : சும்மா கேளு தம்பி !

தம்பி : நாட்டினில் மக்கள் பிள்ளையில்லை என்று சொல்லி
நாடியே செல்கிறார் கோவில் குளமே
வீட்டை யலங்கரிக்க மழலையும் இல்லையென்றே.
மாதவம் செய்கிறார் மக்கள் சிலரே.

மக்கள் தொகை குறைந்திட்டால் மற்றநாட்டான் நம்மை வென்று
மடக்கிடுவான் நம்மை என்றும் அண்ணே ! அண்ணே!
பக்கபலம் நமக்கின்றி பகைவனைக் கண்டு அஞ்சி
பயந்து நாம் வாழவேணும் சொன்னேன் சொன்னேன்.

அண்ணன் : முடிஞ்சுதா தம்பி ! அப்படியா !

பிள்ளை பெற வேண்டாமென்று சொல்லவில்லை ஆட்சி சட்டம்
போதுமான தாகப்பெற வேணும் தம்பி !
எல்லையின்றி ஏழும் எட்டும் எல்லோரும் பெற்றுவிட்டால்
எப்படித்தான் வளர்ப்பாரோ தம்பி ! தம்பி !

மச்சுமேலே மச்சுகட்டி மதிப்பாக வாழ்ந்தாலும்
மட்டின்றி பிள்ளை பெற்றால் தம்பி ! தம்பி !
குச்சு வீடு கூடமிச்சம் இல்லாமல் ஏழையாகி
கஷ்டப்பட நேரிடுமே தம்பி ! தம்பி !

நோஞ்சானாய் நூறு கோடி படைகளுடனே சென்று
பகைவெல்ல முடியாது தம்பி ! தம்பி !
பாஞ்சாலும் படை நடுங்கும் பலநூறு வீரர்கொண்ட
பலசாலி படைபோதும் தம்பி ! தம்பி !

தம்பி : அப்படியா அண்ணே ! அதுக்கு சனங்க என்ன செய்யறதுங்க. ஆண்டவன் அள்ளிப் போட்டுறானே நான் பாருங்கண்ணே ! எவ்வளவோ சாமர்த்தியமாய்த் தான் இருக்கேன். இருந்தாலும் எட்டு பொண்ணு ஐந்து பசங்க. இப்போ ஒன்னு அண்டர் பிரிப்பரேஷன்லே இருக்கு. வீட்டுக்கு நான் போனா. . . . . அண்ணே!

கஷ்டப்பட்டு வேலை செஞ்சு களைப்புடனே வீடுபோனா
கண்ணைக் கசக்கி நிக்கிறா பொண்டாட்டி
குழந்தைக்குப் பால் இல்லே என்கிறா.

இஷ்டப்பட்டு பிரிஞ்சுநாமும் இருப்போமே எனநினைந்தால்
என்மேலே கோபம் கொள்ளுறா பொண்டாட்டி
என்கூட பேசாதிருக்கிறா.

களைப்புத் திரக்கொஞ்சம் கண்ணைமூட லாம் என்றால்
காலைக் கட்டிக்கொண்டு நிக்குது கடைசிப் பிள்ளை
கருப்பட்டி வேணுமிங்குது.

எளைச்சுப் போன பையன் என்கழுத்தைக் கட்டிக்கொண்டு
எலும்புக்கறி வேணுமிங்குகிறான் தன்எலும்புக்
கூட்டைக்காக்க வேணுமிங்கிறான்.

பள்ளிக்கூடம் சென்றுவரும் பையன்பொண்ணு அஞ்சு பேரு
பணம் இப்போ வேணுமிங்கிறார் புத்தகம் வாங்க
பாடாய்ப் படுத்தி வைக்கிறார்.

வள்ளியெனும் மூத்தமகள் வாலிக்குமரியவள்
வாடி வதங்கி நிக்கிறா கல்யாணம் பண்ண.
வழியின்றி நான் முழிக்கிறேன்.

இத்தனை துயர்களையும் கொண்டு இங்கு வாழ்க்கையிலே
இம்சைப்படுவதிலும் அண்ணே ! அண்ணே !

செத்துத் தொலைவோம்என்றால் சிந்தையிலே துணிவில்லை
செய்வதொன்றும் தோன்றவில்லை அண்ணே !
[அண்ணே !

அண்ணன் : பொறு தம்பி ! பொறு !

நீயேன் சாகணும். . . . தம்பி. . .நீதான் வாழணும்

உழவால் உலகுக்கு ஊட்டிடும் தம்பி
உலகில் நீ உயர்ந்தோனே !
அழுது புரண்டு நீ வாடுதல் கண்டால்
அவனியோர் நகைத்திடு வாரே !

ஆஸ்திக்கு ஒன்று ஆசைக்கு ஒன்று
ஆணொன்று பெண்ணொன்று போதும்.
நாசமாய்ப் போகும் நப்பாசை யாலே
நிறைய குழந்தைபெறல் வேணும்.

பத்துக் குழந்தைக்குச் செலவிடும் பணத்தால்
பண்புடன் ஒருபிள்ளை வளர்த்தால்
சத்து நிறைந்ததாய் செழுமையாய் வளர்ந்தே
சீருடன் வளமுடன் வாழும்.

உன்னுடல் நிலையும் குறைவுபடாது
உழைத்திட சோர்வும் தோன்றாது
அன்புடன் கல்வியும் அறிவுமே பெற்றே
அவனியில் குழந்தையும் வாழும்.

செத்திடும் எண்ணமும் சிந்தையில் துன்பமும்
சிறிதும் இல்லாமல் நீ வாழ்ந்தே
இத்தரை மீதினில் என்றும் இன்பமாய்
இருந்து நீ வாழலாம் தம்பி !

அண்ணன் : தம்பி ! இந்தமாதிரித் துன்பநிலை இருக்கக்கூடாது என்றுதான், காந்தியடிகள் புலனடக்கத்தை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறினார். மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத்தானும் புலனடக்கத்தை மேற்கொண்டு வாழ்ந்தார்.

தம்பி : என்னண்ணே ! அது எல்லோருக்கும் சாத்தியப் படுங்களா ! வேறுவழி இருந்தா சொல்லுங்களே !

அண் : வேறு வழியிருக்கே ! அரசாங்கத்திலே கருத்தடை செய்யிறாங்க. மிகச் சுலபமான முறையில் கஷ்டமில்லாமே செய்துக்கலாம். அப்படிச் செய்துகொண்டால் முப்பது ரூபாயும் கொடுக்குறாங்க. அதுபற்றிப் படம் பிடித்து சினிமாவிலேகூட காட்டுகிறார்களே. நீ பார்க்கலேயா தம்பி ! பேப்பர்லேகூட போட்டிருக்கிறாங்களே !

தம்பி : இல்லே அண்ணே ! நான் எங்கண்ணே ! பேப்பர் படிக்கறது. படிச்சிருந்தாதானே ! மழைக்குக் கூட நான் பள்ளிக்கூடம் ஒதுங்கினதில்லே ! ஏதோ குழந்தை களைத்தான் அனுப்பி வைக்கிறேன்.

அண் : கவலைப்படாதே தம்பி ! இனிமேலாவது படிக்க முயற்சி செய் !

தம்பி : எங்கேயண்ணே ! படிக்கிறது ? ஐந்தில் வளை யாதது ஐம்பதிலா வளையப்போகிறது ?

அண் : அப்படிச் சொல்லாதே தம்பி ! ஐம்பதில்தானே முதுகு வளைகிறது. ஐந்திலா வளைகிறது ?

தம்பி : சரி அண்ணே ! எங்கே படிக்கறது ? பள்ளிக் கூடத்திலே சேர்த்துக்குவாங்களா ?

அண் : ஓ ! . . . . . . சேத்துக்குவாங்களே ! அதுக் காகத்தானே ஐந்தாண்டுத் திட்டத்திலே. . . . . . .

பள்ளி அமைத்திருக்கிறார் —முதியோர்
பள்ளி அமைத்திருக்கிறார்.

கல்வி பயிலாத முதியோர்கள் எண்ணெழுத்தும்
கற்றுத் தெளிந்திடவே கருத்துடன் முதியோர். . . .
பள்ளி

சமூகத்தில் நடைபெறும் செய்தி அறிந்திடவும்
சின்னஞ்சிறு நூல்கள் கற்றுத் தெளிந்திடவும்
சமூகக் கல்வியெனும் நிலையமும் அமைத்துமே
சின்னஞ் சிறு ஊரும் சேமம் அடைந்திடவே. . . . . .பள்ளி

இந்நாட்டில் வாழ்ந்திடும் முதிய பெரியோரே
கொஞ்சம் கேளீர்—நல்ல
ஐந்தாண்டுத் திட்டத்தின் இரவு பள்ளிகளை
வந்து பாரீர்.
எண்ணெழுத் தறியாத ஏழையும் செல்வரும்
இந்தப் பாரில்—இரு
கண்ணிருந்தும் அதைப் புண்ணெனக்கொண்டார்
உண்மை கேளீர்.
கல்வியில் உயர்ந்திட கருத்துக்கள் புரிந்திட
வந்து சேர்வீர்—முதியோர்
பள்ளியில் பண்புடன் கல்வியும் கைத்தொழில்
கற்றுத் தேர்வீர்.
சமூகக் கல்வியெனும் நிலையத்தில் நாளிதழ்
செய்தி பாரீர்—உலகில்
சமாதானமாக மக்கள் வாழ்ந்திட சமுதாய
கல்வி கற்பீர்.

தம்பி : சரியண்ணே ! முதல்லே நாம் ஒரு வேலை செய்யனுமே ! எப்போ போகலாம் ?

அண் : என்ன வேலை தம்பி ? எங்க போகனும் ?

தம்பி : அண்ணே. . . . . என்னண்ணே !—அந்த வேலைத்தான் —எப்படிச் சொல்வேனண்ணே-நீயும்
இப்பத்தான் அதைச் சொல்லித்தான்—உள்ளம்
இன்பம்தான்—எப்படிச் சொல்வேனண்ணே! . . . . .
அண்ணே !

துன்பம்தான் இனி தூரம்தான்
இன்பம்தான் உனக் கென்றுதான்—சொன்ன
உன்னைத்தான் உடன் கொண்டு நான்
அடைவேன் சுகம்தான் இனித்தான்
எப்படிச் சொல்வேனண்ணே. . . . அண்ணே !

தடைத்தான் கருத்தடைத்தான்
செய்யத்தான் எனக் கிஷ்டம்தான்—என்னைக்
கூட்டித்தான் சென்று எப்பொத்தான்
தடைதான் செய்யத்தான் வருவாயண்ணே !
எப்படிச் சொல்வே னண்ணே !. . . . அண்ணே

அண்ணன் : இதுக்குத் தானா தம்பி ! பிரமாதப்படுத் தறே ! இந்த வாரம் நம்ம ஊரு பள்ளியிலே சர்வோதய வாரம் கொண்டாடனும். அதை நான் தான் முன்னாடி இருந்து நடத்தனும். அது முடிஞ்சு, அடுத்த வாரம் போயிட்டு வரலாம் தம்பி.

தம்பி : அது என்ன அண்ணே ! சர்வோதய வாரம் !

அண் : அதுவா தம்பி !

அச்சமில்லே அவனியிலே அடிமைநிலே இல்லே என
அருந்தமிழில் கவிபாடி ஆங்கிலேயர் தமை எதிர்த்து
உச்சிமீது வானிடிந்து வீழ்ந்திடினும் அச்சம்கொள்ளா
உயர்ந்தகவி "பாரதி" தான் கண்டதும் சர்வோதயம் !
நடையாய் நடைநடந்து நாடெல்லாம் தினம் சுற்றி
நிலதானம் வாங்கிநாட்டின் ஏழைஎளி யோர்கள் தம்மின்
உடைமையாய்ச் செய்திடவே உண்மையுடன் உழைத்து வரும்
உத்தமனும் "வினோபாஜி" கண்டதும்சர் வோதயம் !
ஜான்ரஸ்கின் கண்டகொள்கை கருத்தெல்லாம் மனம் கொண்டு
கடமையிலே கருத்தூன்றி சுதந்திரத்தை வாங்கித் தந்து
வான் உலகம் தனையடைந்த வள்ளல்குண பேராளன்
வீரமிகு "காந்திமகான்" கண்டதும்சர் வோதயம் !

இதுதான் தம்பி சர்வோதயம் ! கடையனுக்கும் வாழ் வுண்டு எனும் கருத்தை மனதில் கொண்டு காந்தி மகான் சர்வோதயத்தை ஆரம்பித்தார். இனி எல் லோருக்கும் வாழ்வுண்டு.

தம்பி : அப்படியாயா அண்ணே ! சந்தோசம்.

அண் : அதனாலேதான் எல்லோருக்கும் கல்வி, எல் லோருக்கும் வாழ்வு என்ற நிலையில் அனை வருக்கும் உதவியும் உயர்வும் அளிக்கப்படுகிறது.

தம்பி : என்னண்ணே! நம்ம ஊரிலே இருக்கிற பள்ளியிலே, என்னண்ணே! நூல் நூற்கவும், தோட்டம் போடவும் வாத்தியார் சொல்லித்தர்றார். இரண்டு வருசங்களுக்கு முந்தி இருந்த வாத்தியாரு பிள்ளைகளை இப்படிக் கஷ்டப்படுத்தலியே.

அண் : ஓ! அதுவா தம்பி! இரண்டு வருசத்துக்கு முந்தி இருந்த கல்வித் திட்டம் இல்லை இது. வாத்தியார் ஒன்றும் பிள்ளைகளைக் கொடுமைப் படுத்தலே! கல்வித் திட்டம் ஒவ்வொருவரும் தாங்களே உழைத்து சுயதேவைப் பூர்த்தி செய்யும் வழியைத் தான் கற்றுக் கொடுக்கிறது. அது தான் தம்பி! காந்தியடிகள் கண்ட ஆதாரக் கல்வி.

தம்பி : ஆதாரக் கல்வியா? அது என்னண்ணே! ஆதாரக் கல்வி!

அண்ணன் : அதுவா! சொல்லுறேன் கேளு! நமக்கு....
. . . .

கல்விகலையுடன் உழைப்பையும் உயர்த்தும்
கருத்தான திட்டம் ஆதாரக் கல்வி.
எல்லா மக்களும் உழைப்பும் உரிமையும்
என்றும்காண வழிகாட்டும் கல்வி.

கைத்தொழில் தன்னில் கல்வி தன்னையும்,
கடமையுணர்த்தும் ஆதாரக் கல்வி.
செய்தொழில் தனிலே செம்மையும் சிறப்பும்
சிந்தையில் புகுத்திடும் இக்கல்வி.

காந்தி மகான் கண்ட கனவினை நனவாய்
காட்டிடும் திட்டம் ஆதாரக் கல்வி.
சாந்தியுடன் நாம் செகமதில் வாழ்ந்திட
வழியை வகுக்கும் புதுக்கல்வி.

ஏழை பணக்காரன் என்னும் வேற்றுமை
என்றும் கொள்ளா ஆதாரக் கல்வி.
கோழையாய் வாழுதல் பேதமை என்றே
கொள்கை புகுத்திடும் நம் கல்வி.

நூல் நூற்கறதோடே மட்டுமல்ல தம்பி! நூலை கதராடையாக நெய்து எல்லோரும் கதராடை உடுத்தவேண்டும் என்னும் அக்கல்வியில் போதிக்கப்படுகிறது. கதராடை கட்டுவதாலே அநேக நன்மைகள் உள்ளன. சொல்லுறேன் கேளு. . . . . . .

கதர்துணி கட்டுவோம் நாமே—பலர்க்
குதவி கிடைத்திடச் செய்திடுவோமே;
புது வாழ்வு கண்டிடுவோமே—காந்தி
போற்றிய முறைதன்னை வளர்த்திடுவோமே.

கதர்த்துணி விற்றிடும் பணமே-பல
கைத்தொழிலாளரின் பசியைத் தீர்த்திடுமே;
நிதம் நாமும் சுக்கிளி ராட்டை—தன்னை
நாடிநல் நூல்தன்னை நூற்றிடுவோமே.

நம்நாட்டுப் பணம்வேறு நாட்டை தினம்
நாடியே செல்லாமல் காத்திடுவோமே;
சும்மா நாம் இருக்காதோர் நாளும்—ஒரு
சிலமணி நேரமே நூல்தன்னை நூற்போம்;

காந்தி மகான்கண்ட கனவை—நாமும்
கருத்தினில் கொண்டுமே கதர்தன்னைக்காப்போம்
சாந்தியாய் நாமென்றும் வாழ—கதர்
சிந்தையில் நல்லுறம் நாளும் தந்திடுமே.

தம்பி : அப்படியா அண்ணே! பள்ளிக் கூடத்திலே கடைக்குட்டியைக் கூட சேர்க்கலாமன்று பார்த்தேன். மத்தியானம் சோறு போட்டாங்கன்னு பாவமில்லேன்று. நினைச்சேன். ஆனால் அரசாங்கத்திலே இருந்து பணம் இன்னும் வந்து சேரவில்லேன்னு சோறு போடறதை நிறுத்திட்டாங்களாம். நம் பொருவுக கூட ரெண்டு நின்னுக் கிடுதுக.

அண் : அந்தக் கவலை இனி வேணாம் தம்பி! பணம் வர தாமதமாகி இருக்கும். இனிமேல் அந்தக் கஷ்டம் இருக்காது. அது மட்டும் இல்லே! முந்தி எல்லாம் ஆசிரியர்கள் வீடு வீடாக கஷ்டப்பட்டுக் கேட்டு வாங்கி ஏழைப் பிள்ளைகளுக்கு சோறு போட்டாக. இனி அரசாங்கத்திலே இருந்து தர்ற பணத்தோட பஞ்சாயத்து யூனியனிலே இருந்தும் பணம் தர்றாங்க. மற்றும், அமெரிக்கா இல்லே. . . . . . அமெரிக்கா! அங்கே இருந்து கூட அரிசி, பால் பவுடர் எல்லாம் சப்ளை செய்கிறாங்க. இனிமேலே ஏழைப் பிள்ளைகளுக்கு வயிறார சோறு கிடைக்கும்.

தம்பி : அப்படியா அண்ணே! அமெரிக்கா காரங்க கூட உதவி செய்யிறாங்களா! தேவலையே! அப்பாண்ணே நம்ம தெருவிலே இருக்கிற அந்தக் கொளந்தை களையும் நாளைக்கே பள்ளிக்கூடத்திலே கொண்டு போயி சேர்த்திட்டு வந்து மறு வேலை பார்க்கிறேன்.

. . . . . அப்போ நான் வரட்டுங்களா அண்ணே!

அண் : இரு தம்பி! போகலாம். . . . . . இதை இன்னையோட மறந்திடக் கூடாது. நாம் எல்லோரும் எப்போதும். . . . .

ஐந்தாண்டுத் திட்டம் . . . . அபிவிருத்தித் திட்டம்
பஞ்சாயத் தாட்சி பார்போற்றும் மாட்சி
மக்கள் நலமுடன் வாழ்ந்திடவே
நலம் செய்யும் நாம் உயர்ந்திடவே. . . . .

ஒன்றாகக் கொண்டாடுவோம்
ஐந்தாண்டுத் திட்டம்தனை
பஞ்சாயத் தாட்சிதனை. . . . . (ஒன்றாக).

அன்னியர் ஆட்சியிலே அடைந்ததுயர் அளவுமில்லே
சுதந்திரம் பெற்ற பின்னே சுகமதில் குறைவுமில்லே
உழைப்பினை உயர்வில் வைப்போம் உரிமையைக்
காத்து நிற்போம்
ஐந்தாண்டுத் திட்டம் தனில் அன்பாய் வாழுவோம்.
. . . . (ஒன்)

உழவுத் தொழில் உயர்வுறவும் உலகில்கலை பயனுறவும்
உண்மையுடன் உதவிடுமே விஸ்தரிப்புத் திட்டமடா.
பஞ்சாயத் தாட்சிதனில் பஞ்சம்புக வழியுமில்லே
அஞ்சாது வாழ்ந்திடுவோம் அவனியில் உயர்ந்திடுவோம்
சமுதாயத் திட்டம்தனில் சுகமும் காணுவோம். (ஒன்).

கல்வியின்றி வருந்தோமே கவலைகொண்டு
வாழ்வோமே
கல்விநிலையமில்லா ஊருமிப்போ நாட்டிலுண்டோ
கல்விதனில் உயர்ந்திடுவோம்
கலைகளிலே சிறந்திடுவோம்
உழைப்பினை உயரவைப்போம்.
உலகினுக்கு ஊட்டுவிப்போம்.
பஞ்சாயத் தாட்சிதனில் பெருமை காணுவோம். . .
. . . . (ஒன்)

வாழிய நம்மொழி வாழ்கநம் நாடே
வாழிய நம்நாட்டு மக்களெல்லாம்
ஏழை பணக்காரர் பேதம் இன்றியே
எழுத்தறி வித்தே ஒன்றாய் நம்மை
ஆழி கடல் சூழும் அவனி தன்னிலே
அனுதினம் காத்திடும் ஐந்தாண்டுத் திட்டமே!
வாழிய வாழிய சமுதாயத் திட்டமே!
வாழிய பஞ்சாயத் தாட்சித் திட்டமே!

முற்றிற்று.

கிராம நலம்-
பகுதி-௨. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM
PART II PANCHAYAT GAZETTE

[பிறப்புக்களும் இறப்புக்களும் - பதிவு செய்யப்படுவதை வலியுறுத்துதல் - பஞ்சாயத்துக்கள் மாதந்தோறும் பரிசீலனை செய்தல்

[BIRTHS AND DEATHS—Enforcement of Registration and monthly review by Panchayats-Instructions Issued [R.D. & L.A. G. O. Ps. No. 3142, dated 24-11-1961.]

சென்னையில், 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8, 9 தேதிகளில் நடைபெற்ற மாநில பஞ்சாயத்து மகாநாட்டில், சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்கீழ் நிறுவப் பெற்றுள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், இரண்டு முக்கிய தேசியப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மக்கள் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டு போவதற்கு ஒப்ப, ஆண்டு தோறும் உணவு உற்பத்தியினைப் பெருக்கிக் கொண்டே போக வேண்டும் என்பது ஒன்று. மக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தை ஒரு வரையறைக்குள் கொண்டு வருவதென்பது இரண்டாவதாகும். இறப்புக்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது. சுகாதார, சமூக நல வேலைத் திட்டங்களினால் மேலும் எண்ணிக்கை குறையலாம். மக்கள் எண்ணிக்கைப் பெருக்கமானது ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்றால், பிறப்புக்களின் எண்ணிக்கை வீதமானது குறைக்கப்படுவதுடன், இறப்புக்களின் எண்ணிக்கை வீதத்தைவிட மிகவும் வேகமாகக் குறைய வேண்டும்.

2. இந்த நோக்கத்தை அடைய வேண்டி, இங்கிலாந்து மற்றும் சில மேற்கத்திய நாடுகளில் உள்ளதுபோல் சிறு எண்ணிக்கையுள்ள குடும்பங்களின் அவசியத்தை சுகாதாரத் துறை அமைச்சர் குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஐந்து, ஆறு என்றில்லாமல், ஒவ்வொரு ஏழ்மையான குடும்பத்திலும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் என்றிருந்தால், பெற்றோர்கள், உணவு, உடை, கல்வி ஆகிய விஷயங்களில் அந்தக் குழந்தைகளுக்கு இருமடங்கு வசதிகள் அளித்து, அவைகளை நல்ல முறையில் வளர்க்க முடியும். குழந்தைகளை வளர்த்து உருவாக்குவதில், பெற்றோர்களால் மிகவும் மேம்பாடான முறையில், தங்களுடைய தனிப்பட்ட கவனத்தையும், அக்கறையும் காட்டி அவர்களால் வளர்க்க இயலும். பெற்றோர்களுக்குக் கிடைக்காமல் போய்விட்ட வாழ்வில் நல்லதொரு ஊக்கத்தைத் தரக்கூடிய ஆரம்பத்தை, புதிய பரம்பரையைச் சேர்ந்த குழந்தைகள், இதனால் பெறமுடியும். ஆகவே, மக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லும்பொழுது, சிறு எண்ணிக்கையுள்ள குடும்பங்கள் என்ற வழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளுதல், ஒவ்வொரு கல்யாணமான தம்பதிகளும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளோடு மன நிறைவு பெறுதல் என்றுதான் பொருளாகும்.

3. மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளில் ஒவ்வொரு குடும்பமும் இந்த அவசியத்தை உணர்ந்து கொண்டுவிட்டது. ஆகவே அவர்களுக்கு விசேஷமாக புத்திமதிகளோ, ஆலோசனைகளோ சொல்லத் தேவையில்லை. இந்த மாநிலத்தில், (இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைப் போலவே) இந்த உண்மையினை இப்பொழுதுதான் மெள்ள மெள்ளப் புரிந்துகொண்டு வருகிறார்கள். ஆகவே அதிகப்படியான எண்ணிக்கையுள்ள குடும்பங்களைத் தவிர்க்க வேண்டியதின் அவசியம், அவைகளை எப்படித் தவிர்ப்பது என்பது பற்றிய எல்லாம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விசேஷமாக அதைப்பற்றி எடுத்துப்பேசி ஆலோசனை சொல்லி, அவர்களுக்கு அடிக்கடி அதைப்பற்றி ஞாபகப் படுத்திக்கொண்டிருக்கிற முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இந்தக் காரணத்தை முன்னிட்டுத்தான், ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் இப்படிப் புத்திமதி கூறுவதும் அவைகளுக்கு ஞாபகப்படுத்துகின்றதுமான இந்தக் கடமையானது, அந்தக் கிராமத்தின் பஞ்சாயத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. அதனால்தான், மாநில பஞ்சாயத்து மகாநாட்டில் கூடிய மாநிலத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் இதுவிஷயத்தில் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றினார்கள் :

முதலாவதாக,

மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் பின்வருமாறு சிபார்சு செய்கிறது:

" (1) கிராமத்தில் ஒவ்வொரு மாதமும், ஜனன மரணக் கணக்கை ஆராய்ந்து பார்த்து, அந்தக் கிராமத்தில் ஜனத் தொகை வளர்ச்சியைப்பற்றி சரியானதும், முழுமையானது மான தகவல்கள் கிடைக்க வழிகோலுதல்.

(2) கிராமத்தில் அல்லது நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள எல்லாக் குடும்பங்களும் பஞ்சாயத்து யூனியனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாட்டுக்கான முறைகளைத் தெரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டும். குறிப்பாக, குழந்தை பெறுவதற்கு முன்னோ பின்னோ, மூன்று மாதங்களுக்குள்ளாக ஒவ்வொரு தாயும் குடும்பக் கட்டுப்பாட்டுக்கான முறைகளைத் தெரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டும்.

(3) குடும்பங்கள் கட்டுக்கு மீறிப் போவதை நிறுத்த வேண்டும். அளவாகவுள்ள குடும்ப வழக்கத்தை மேற் கொண்டு ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒவ்வொரு குடும்பமும் உதவும்படிச் செய்ய வேண்டும்.

(4) குடும்பத்தை அளவோடு வைத்துக்கொள்ள அறுவை சிகிச்சை முறை ஆபத்தற்றது என்பதைப் பெற் றோர்கள் உணரும்படிச் செய்து, அறுவை முறை சிகிச்சை செய்து கொள்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

இரண்டாவதாக,

மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் பின்வருமாறு சிபார்சு செய்கிறது:

ஒவ்வொரு வட்டாரத்திலும் குடும்பத் திட்டத்தைப் பற்றி, முறையான பயிற்சி அளிக்க பஞ்சாயத்து யூனியன் முற்பட வேண்டுமென்று சிபார்சு செய்கிறது. மேலும், எல்லா பஞ்சாயத்துக்களிலும் அளவான குடும்பத் திட்ட முறை எந்த அளவுக்கு முன்னேற்றம் காட்டியுள்ளது என்பதை, தொடர்ந்து பரிசீலனை நடத்துவதோடு, இந்த வேலைக்கு, எல்லா பஞ்சாயத்துக்களிலும் எடுக்கப்படும் முயற்சிகளை ஒருமைப்படுத்தி வழிகாட்ட வேண்டும்."

4. மேற்கூறப்பட்ட தீர்மானத்தை நடைமுறையில் செயல் படுத்த வேண்டுமென்றால், அவ்வரவர்களுடைய கிராமங் களில் ஏற்படுகின்ற பிறப்புக்கள், இறப்புக்கள் பற்றிய சரியான விவரங்களை ஒவ்வொரு பஞ்சாயத்தும் பெற் றிருக்க வேண்டும். 1899-ம் ஆண்டு சென்னை ஜனன-மரணப் பதிவுச் சட்டத்தின்கீழ் ஒரு கிராமத்தில் ஏற்படு கின்ற ஒவ்வொரு பிறப்பும், ஒவ்வொரு மரணமும் கிராம மணியக்காரருக்கு தெரியப்படுத்த வேண்டும். அவர் அந்த விவரங்களைப் பதிவு செய்துக்கொண்டு, கிராமத்தில் அந்த மாதத்தில் ஏற்பட்ட பிறப்புக்கள்-இறப்புக்கள் விவ ரங்களைப்பற்றி மாதாந்தர அறிக்கை ஒன்றினை அவர் அனுப்பி வைக்க வேண்டும். ஆனால், கிராமத்தில் ஏற் பட்ட பிறப்புக்களும், இறப்புக்களும் ஒன்றுகூட விட்டுப் போகாமல், அவரிடம் அறிவிக்கப்படுகிறதா என்பதைப் பற்றி மணியக்காரர் உறுதிப்படுத்திக்கொள்ள முடிய வில்லை. ஆகவே, அதனால் அவர் அனுப்பி வைக்கிற மாதாந்தர அறிக்கையில் கண்டுள்ள விவரங்கள் பூர்த்தி யானவையாக இல்லாமல், அரைகுறை விவரங்களாகவே உள்ளன. அத்துடன் இந்த அறிக்கைகளிலிருந்து சேகரிக் கப்படும் விவரங்கள் குறைபாடு உடையதாகவும், உப யோகத்திற்கு லாயக்கற்றவையாகவும் உள்ளன. ஆனால், இந்தப் புள்ளி விவரங்கள் மாதந்தோறும், வருடந் தோறும், சரியாக சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டால், தன் பொறுப்பில் உள்ள கிராமத்திலோ, வட்டாரத்திலோ மக்கள் எண்ணிக்கை எந்த அளவில் பெருகிக் கொண்டு வருகிறது என்பதும் எந்த குடும்பங்கள் சிறிய எண்ணிக்கையிலேயே உள்ளன, எந்தக் குடும்பங்கள் எண்ணிக்கையில் பெருகிக்கொண்டே போகின்றன என்பது பற்றிய இந்த விவரங்கள் ஒவ்வொரு பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும் சரியாகத் தெரிந்து கொள்ள இயலும். சரியான விவரங்கள் கிடைக்கப் பெற்றால், பஞ்சாயத்தானது, சம்பந்தப்பட்ட கிராம மக்களுக்கு போதிய புத்திமதிகளையும் கூறி, அவர்களை இந்தத் துறையில் ஞாபகப்படுத்துகின்ற கடமையை நிறைவேற்ற முடியும். வட்டாரத்தில் உள்ள பல்வேறு கிராமங்கள் இத்துறையில் எப்படி முன்னேறிக்கொண்டு வருகின்றன என்பதுபற்றி கண்காணிக்கவும், நல்ல முறையில் செயலாற்றுகின்ற பஞ்சாயத்துக்களை ஊக்குவிக்கவும், போதிய முறையில் நல்ல வகையில் காரியங்கள் செய்கின்ற மற்ற கிராமங் களுக்குத் தூண்டுதல் அளிக்கவும் பஞ்சாயத்து யூனியன் செய்யும்.

5. இதனால்தான், முதல் வேலையாக, தன்னுடைய பொறுப்பில் உள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட பிறப்புக் களும், இறப்புக்களும் பதிவு செய்யப்படுவது மிகவும் சரியாகவும், விட்டுப் போகாமலும் செய்யப்படுகிறதா என் பதை ஒவ்வொரு பஞ்சாயத்தும் பார்த்துக் கொள்ள வேண்டும். எல்லாப் பஞ்சாயத்தும், ஒவ்வொரு மாதமும் இந்த விஷயமானது பஞ்சாயத்தினால் கண்காணிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு, அதனால் இனிமேல் ஏற்படுகின்ற எல்லாப் பிறப்புக்களும்-இறப்புக்களும் பற்றிய விவரங்கள் எந்த வகையிலும் விட்டுப் போகாமல் தெரியப்படுத்த வேண்டும் என்ற நிலையை உண்டாக்கவே, இந்த உத்தர வில் கண்டுள்ள உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

6. 1899-ம் ஆண்டு தமிழ்நாடு ஜனன மரணப் பதிவுச் சட்டத்தின் 3-வது பிரிவின்கீழ், ஜனன மரணப் பதிவு செய்யப்படும் காரியத்திற்கான பிரதேச அளவு, ரெவின்யூ

கிராமமாகும். கிராமப்புறங்களில் தற்போதுள்ள நிர்வாக அமைப்பு முறையின்படி, பதிவு செய்வதற்குப் பொருத்தமான பிரதேச அளவு பஞ்சாயத்துக் கிராமம் என்று கருதப்படுகிறது. இதற்கான அறிவிப்பு அரசாங்கத்தினால் தனியாக பிறப்பிக்கப்படும்.

7. ஒரு பஞ்சாயத்துக் கிராமம் ஒரு ரெவின்யூ கிராமம் போன்றதே. ஆனால், சில அம்சங்களில், ஒரு பஞ்சாயத்துக் கிராமம், இரண்டு அல்லது மூன்று ரெவின்யூ கிராமங்களை உள்ளடக்கியதாகவோ, அல்லது அந்த எண்ணிக்கையுள்ள ரெவின்யூ கிராமங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாகவோ இருக்கலாம். எங்கே ஒரு பஞ்சாயத்துக் கிராமமானது ஒரு ரெவின்யூ கிராமத்திற்குமேல் உள்ளடக்கியுள்ளதாக இருக்கிறதோ, அதில் உள்ள பெரிய ரெவின்யூ கிராமத்தின் மணியக்காரர் ஜனன-மரணப் பதிவாளராக நியமிக்கப்படுவார். 1899-ம் ஆண்டு சென்னை ஜனன-மரண பதிவுச் சட்டத்தின் பிரிவு 5 (1)-ன் கீழ், பஞ்சாயத்துக் கிராமங்களுக்கு ஜனன-மரணப் பதிவாளர்களை நியமிப்பதுபற்றி திருத்தப்பட்ட உத்தரவுகளை மாவட்டக் கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த உத்தரவுகள் உடனடியாக தயாரிக்கப்பட்டு, மேலே 6-வது பாராவில் உள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டதுமே, பிறப்பிக்கப்பட தயாராக வைக்கப்பட வேண்டும்.

8. பஞ்சாயத்துப் பிரதேசத்தில் ஏற்படுகின்ற ஜனன-மரணங்களை ஆராய்ந்து பரிசிலனை செய்கின்ற வேலையானது, பஞ்சாயத்துக்களின் மாதாந்தரக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் வரையறுக்கப்பட்டுள்ள பொருள்களில் ஒன்றாகவே கொள்ளப்பட வேண்டும். ஜனன-மரணப் பதிவாளர் பஞ்சாயத்தின் மாதாந்தரக் கூட்டத்தில் கலந்து கொண்டு, ஜனன-மரணப் பதிவேட்டினை பஞ்சாயத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். முன் மாதம் சம்பந்தமாக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்களை பஞ்சாயத்துத் தலைவர் படித்துக்காட்டி, ஏதாவது ஜனன-மரண விவரங்கள் பதிவு செய்யப்படாமல் விட்டுப்போய் இருந்தால், அதைத் தெரியப்படுத்துமாறு பஞ்சாயத்து அங்கத்தினர்களை கேட்டுக் கொள்ளலாம். ஒரு மாதத்திற்குப் பதிவு செய்யப்படுகிற விவரங்கள் குறைச்சலாகத்தான் இருக்கும். கிராமத்தில், பதிவேட்டில் பதிவு செய்யப்படாமல் விட்டுப் போய் எந்த பிறப்பாவது இறப்பாவது இருந்தால், அதைப்பற்றிய விவரங்கள் பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்கு தெரியாமல் போகாது. இந்த விஷயத்தைப் பற்றி பஞ்சாயத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பெண் அங்கத்தினர் விஷயங்களைத் தெரிந்து கொள்கின்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும். அவற்றைத் தெரிந்துகொள்வதின் மூலம், பிறப்புக்கள்-இறப்புக்கள் பதிவேடுகளை தவறில்லாமலும், விவரங்கள் விட்டுப் போகாமலும் இருக்கும்படியாக வைத்துக்கொள்வதில் பெண் உறுப்பினர் சிறப்பான முறையில் உதவி புரிய முடியும். பதிவு செய்யப்படாத விவரங்கள் ஏதாவது எந்த அங்கத்தினராவது பஞ்சாயத்துத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால், அந்த விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்து கொண்டு, பின்னால் பதிவாளர் அவற்றை சரி பார்க்கவும், பதிவு செய்துகொள்ளவும் செய்வதற்கு ஆவன புரிய வேண்டும். விட்டுப் போய்விட்டது என்று ஒன்றும் சொல்லப்படவில்லை யென்றால், பதிவேட்டில் தலைவர் "சரி பார்க்கப்பட்டு விவரங்கள் சரியாக இருக்கின்றன" என்று குறிப்பு எழுதி, தன்னுடைய கையெழுத்தினை அதில் இடுவார்.

9. சென்னை நகராட்சி மன்றங்கள் சட்டத்தின் சம்பந்தப்பட்ட விதிகளைக் கையாள்வதன் மூலம், பிறப்புக்கள், இறப்புக்கள், பதிவு செய்தலை மேற்கொண்டுள்ள நகரப் பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவை தங்களுடைய சொந்த முறையில் ஜனன மரணப் பதிவாளர்களை நியமித்துக்கொள்ளலாம். மேலே 6, 7, 8 பாராக்களில் சொல்லப்பட்டுள்ள அறிவிப்புக்கள் நகரப் பஞ்சாயத்துக்களுக்குக் கிடையாது.

10. கிராமப் புறங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள இப்பொழுது உள்ள ஜனன–மரணப் பதிவேடுகளின் பிரதிகள் இந்த உத்தரவை இணைப்பில், தகவலுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பதிவேடுகள் அவைகளைச் சரிப்படுத்த வேண்டியும், போதிய தகவல்கள் சேகரிக்கவும் வசதி செய்ய வேண்டி, திருத்தப்படும். உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய படிவங்களின் (Forms) பிரதிகளும், செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் பற்றிய விவரக் குறிப்புகளும், இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட படிவங்கள் புகுத்தப்படுவது வரையில், இப்பொழுது உள்ள பதிவேடுகள் சம்பந்தப்பட்ட வரையில், தேவையான திருத்தங்களுக்காக வேண்டிய மாறுதல்களுடன் புதிய ஜனன–மரணப் பதிவேடுகள் உபயோகத்திற்குத் தொடங்கப்படுகிற தேதியான 1–1–1962–முதல், இந்த உத்தரவில் விவரிக்கப்பட்டுள்ள நடைமுறை கையாளப்படலாம்.

11. இந்திய அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரில், 18–12–1961–ம் நாள் இந்தியா பூராவும் குடும்பக் கட்டுப்பாடு தினமாகக் கொண்டாடப்படும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் இந்தக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வது மட்டுமன்றி, இந்தக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு பஞ்சாயத்தும் முழுமையும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

அதற்காக வேண்டி, அந்தத் தேதியில் பஞ்சாயத்தின் விசேஷக் கூட்டம் ஒன்று கூட்டப்பட வேண்டுமென்றும், அந்தக் கூட்டத்தில் மணியக்காரர் பிரசன்னமாகி இருந்து, இந்த உத்தரவைப் படித்துக் காட்ட வேண்டும். அதற்குப் பிறகு, ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு தடவை, ஜனன மரணங்களைப் பஞ்சாயத்து பரிசிலனைசெய்கின்ற புதிய வேலை முறையானது, காரியாம்சத்தில் நடைபெறவேண்டும்.

12. ஜனன–மரணங்களைப் பற்றி சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கும் என்பதற்காக மட்டும் இந்த உத்தரவு பிறப்பிப்பதன் உட்கருத்தாகக் கொள்ளவில்லை அரசாங்கம் என்பதை எல்லாப் பஞ்சாயத்துக்களுக்

கும் மற்றுமொரு முறை அரசாங்கம் ஞாபகப்படுத்த விரும்புகிறது. பஞ்சாயத்தில் உண்டான ஜனன-மரணங்களைப் பற்றிய மாதாந்திர பரிசீலனை செய்கின்ற புதிய வேலை முறையின் மூலம் இந்த ஒரு உபயோகமான பயன் உள்ளது என்பதைப் பற்றி சந்தேகம் இல்லை. ஆனால், இதனால் கிடைக்கக் கூடிய, கீழே குறிப்பிட்டுள்ள இன்னும் மிக முக்கியமான பயன்களுடன் பார்த்தால், இந்தப் பயன் சாதாரணமானதேயாகும்:—

(அ) மக்களின் உடல் நலம் பற்றி நல்ல கவனம் செலுத்தப்படுவதன் விளைவாக, கிராமத்தில் ஏற்படுகின்ற மரணங்கள், முன் வருஷத்தில் இருந்ததைவிட, அடுத்த வருடத்தில் குறைந்துவிடும்.

(ஆ) அதிகப்படியான எண்ணிக்கை உள்ள குடும்பங்களைத் தவிர்க்க வேண்டும் என்றும், அதை எப்படிச் செய்வது என்றும் பற்றி மக்களுக்கு யோசனை சொல்லி அவர்கள் அது பற்றி ஞாபகப்படுத்திக்கொண்டிருப்பதன் விளைவாக, கிராமத்தில் ஏற்படுகின்ற பிறப்புக்களின் எண்ணிக்கை எடுத்த எடுப்பில் அதிகமாவது இல்லாமல் ஆகிவிடும். அதன் பிறகு, ஆண்டுதோறும் பிறப்புக்களின் எண்ணிக்கை வெகு வேகமாக, மரணங்களின் அளவைவிட, இன்னும் வேகமான அளவில், குறையும்.

(இ) இது நடைபெறும்பொழுது, மக்கள் எண்ணிக்கைப் பெருக்கமானது, திறமையான முறையில் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும். சிறிய அளவுள்ள குடும்பங்கள் என்ற கருத்தானது கிராமங்களில் பலமாக வேரூன்றிவிடும். அதனால் மக்களின் மகிழ்ச்சிக்கும் வளமான வாழ்வுக்கும் அடிகோலப்பட்டுவிடும்.

(24—11—61 தேதியிட்ட கிராமநல - நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண். 3142)

ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ளவை :

கிராமப் புறங்களுக்கான திருத்தப்பட்ட பிறப்புப் பதிவேடு பற்றிய விளக்கக் குறிப்பு:

1899-ம் ஆண்டு மூன்றாவது சட்டத்தின் கீழ் ஜனன மரணங்கள் பதிவு செய்யப்படுவதற்கான விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள ஜனனப்பதிவேடு ஒன்றின் நகலிலும், *திருத்தப்பட்ட ஜனனப் பதிவேடு ஒன்றும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இப்பொழுதுள்ள ஜனனப் பதிவேட்டில் செய்யப்பட்டுள்ள மாறுதல்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன :—

(1) குழந்தை உண்மையாகப் பிறந்த இடத்தைக் குறிப்பதற்காக என்று திருத்தப்பட்ட பதிவேட்டில் ஒரு புதிய பத்தி (5) காட்டப்பட்டுள்ளது. இது எதற்காகச் செய்யப்பட்டிருக்கிறது என்றால், இருப்பிடங்களில் ஏற்பட்ட பிறப்புக்கள், இருப்பிடங்கள் அல்லாத இடங்களில் ஏற்பட்ட பிறப்புக்கள் ஆகியவை பற்றிய புள்ளி விவரங்கள் தனித்தனியாக சேகரித்துக் காட்டப்படுவதற்காகவே.

(2) இந்த அரசாங்க ஆணையில் பாரா 8-ல் கண்டுள்ள உத்தரவின்படி, இந்தியாவைச் சேர்ந்தவர்களுக்காக மட்டிலுமே அவர்களின் பிறப்புக்களைக் காட்டும் ஒரு ஜனனப் பதிவேடு பராமரிக்கப்படும். 16-10-1961 தேதியிட்ட பொதுத் துறையின் அரசாங்க ஆணை எண் 1726-ன் படி, ஜாதி பற்றிய விவரங்கள் அதிகார பூர்வமான பதிவேட்டில் பதிவு செய்யப்படக் கூடாது. ஆகவே இப்பொழுதுள்ள பதிவேட்டில் "இனமும் ஜாதியும்", என்பதைக் காட்டும் 7-வது பத்தி எடுக்கப்பட்டுவிட்டது.

(3) குழந்தையின் தாய்-தந்தை பற்றிய விவரங்கள் தனியாக ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. தாயைப் பொறுத்த வரையில், பிரசவ காலத்தில் எப்படிப் பார்த்துக்கொள்ளப்பட்டது என்பது பற்றிய தகவல்கள் குறிப்பதற்காக வசதி செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் தாய்-சேய் நல பணிகளை மேலும் விஸ்தரிக்க இது அவசியமாக உள்ளது. ஆகவே, பிரசவம் மருத்துவ மனைகள், பிரசவ விடுதிகள், நர்சிங் விடுதிகள் போன்ற இடங்களில் ஏற்பட்டதா, அல்லது வீட்டில் ஏற்பட்டதா என்ற விவரங்களையும், அதன் பிறகு, தாயானவள் தகுதி பெற்ற மருத்துவச்சியினால் கவனிக்கப்பட்டார்களா இல்லையா என்பது பற்றிய விவரத்தையும் குறிப்பிட என்று மூன்று பத்திகள் (12, 13, 14) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(4) 16-10-1961 தேதியிட்ட பொதுத் துறையின் அரசாங்க ஆணை எண் 1726-ல் கண்டுள்ள உத்தரவுகளின் படி, தந்தையின் வகுப்பு, குலம் என்ன என்பது பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டியுள்ளது. ஆகவே, மதத்தை (ஹிந்து, முகம்மதியர், கிறிஸ்துவர், மற்ற மதத்தினர் என்பதைக்) காட்ட 16-வது பத்தி சேர்க்கப்பட்டுள்ளது. வகுப்பினை (அட்டவணையில் கண்டுள்ள ஜாதியினர், அட்டவணையில் கண்டுள்ள குடிகள், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், மற்ற பிற்பட்ட வகுப்பினர், மற்றவர்கள்) என்பதைக் காட்ட மற்றொரு பத்தியும் (17) சேர்க்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களுக்கான திருத்தப்பட்ட மரணப் பதிவேடு பற்றிய விளக்கக் குறிப்பு :

1899-ம் ஆண்டு மூன்றாவது சட்டத்தின் கீழ் ஜனன மரணங்கள் பதிவு செய்யப்படுவதற்கான விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள மரணங்கள் பதிவேட்டின் நகல் ஒன்றும், **திருத்தப்பட்ட பதிவேட்டின் நகல் ஒன்றும்

* இந்தப் பட்டியலை vi-ம் பக்கத்தில் பார்க்கவும்.

** இந்தப் பட்டியலை vii-ம் பக்கத்தில் பார்க்கவும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மரணங்கள் பதிவேட்டில் செய்யப்பட்டுள்ள மாறுதல்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன :—

(1) இந்த அரசாங்க ஆணையில் பாரா 8–ல் கண்டுள்ள உத்தரவின்படி, இந்தியாவைச் சேர்ந்தவர்களுக்காக மட்டிலுமே, அவர்களின் மரணங்களைக் காட்டும் மரணங்களின் பதிவேடு என்று பராமரிக்கப்படும். 16–10–1961 தேதியிட்ட பொதுத் துறையின் அரசாங்க ஆணை எண் 1726–ன்படி, ஜாதி பற்றிய விவரங்கள் அதிகார பூர்வமான பதிவேட்டில் குறிப்பிடக் கூடாது. ஆகவே, தற்சமயம் உள்ள பதிவேட்டில் இனம், ஜாதியினரைக் குறிப்பிட்டுக் காட்டும் 11–வது பத்தி எடுக்கப்பட்டுவிட்டது.

(2) 16–10–1961 தேதியிட்ட பொதுத் துறையின் அரசாங்க ஆணை எண் 1726–ல் கண்டுள்ள உத்தரவுகளின் படி, தந்தையின் மதம், குலம் என்ன என்பது பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டியுள்ளது. ஆகவே, மதத்தினை (ஹிந்துக்கள், முகம்மதியர், கிறிஸ்துவர் மற்ற மதத்தினர் என்பதைக்) காட்ட 10–வது பத்தி சேர்க்கப்பட்டுள்ளது. வகுப்பினை (அட்டவணையில் கண்டுள்ள சாதியினர், அட்டவணையில் கண்டுள்ள குடிகள், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், மற்ற பிற்பட்ட வகுப்பினர்கள், மற்றவர்கள் என்பதைக்) காட்ட மற்றொரு பத்தியும் (11) சேர்க்கப்பட்டுள்ளது.

(3) இப்பொழுதுள்ள மரணங்கள் பற்றிய பதிவேட்டில், மரணம் எற்படக் காரணங்கள் இவை என்று காட்ட 18 பத்திகள் உள்ளன. இதனால் மரணம் குறிப்பாக இந்தக் காரணத்தினால் ஏற்பட்டது என்று அதற்கான குறிப்பிட்ட பத்தியில் குறிப்பிட கிராம மணியக்காரருக்கு வசதியாக இருக்கும். மூளைக்கொதிப்பு நோய், கடுமையான டிப்தீரியா போன்ற நோய்களால் ஏற்படும் மரணங்களை கண்டுபிடித்துச் சொல்லும் அளவுக்கு மணியக்காரருக்கு மருத்துவத் துறையில் ஞானம் இருக்காது. ஆகவே, மரணங்கள் உண்டானதற்குக் காரணங்கள் என்றுள்ள பட்டியலானது சுலபமாக்கப்பட வேண்டும். அதனால், மரணங்கள் ஏற்படுவதற்கான அவருக்குப் பழக்கமான குறிப்பிட்ட சில காரணங்கள் என்று காட்ட ஒரு பகுதியும் பொதுவாக மரணம் எற்பட்டதின் காரணங்கள்—சுரம், காச நோய், மற்றும் இதுபோன்றவை— என்று காட்ட மற்றொரு பகுதியும் கொடுக்கப்படலாம். குறிப்பிட முடியாத நோய்கள் சம்பந்தப்பட்ட மட்டில், மரணம் எற்படுகின்ற நிலையில் காணப்பட்ட நோய் அறிகுறிகளை, மரணங்களின் பதிவேடுகளின் குறிப்புகள் எழுதுகின்ற பத்தியில் அவர் பதிவு செய்யலாம். இப்பொழுதுள்ள பதிவேட்டில் கண்டுள்ள 18 பத்திகளுக்குப் பதிலாக, ஒரு பத்திதான் வேண்டியுள்ளது. குறிப்பிட்ட காரணங்கள் குறிப்பிட்டுக் காட்ட முடியாத காரணங்கள் என்று காரணங்கள் விவரம் அடங்கிய பட்டியல் ஒன்று பதிவேட்டின் முன்னால் தனித் தாளில் அச்சடிக்கப்பட்டிருக்கும். மணியக்காரர் இந்தப் பட்டியலைப் பார்த்து, பட்டியலில் கண்டுள்ளபடி குறிப்பிட்ட காரணத்தைப் பற்றி முடிவு செய்து, அதை "மரணம் ஏற்படக் காரணம்" என்றுள்ள 16–வது பத்தியில் எழுத வேண்டும்.

(4) இப்பொழுதுள்ள மரணங்கள் பற்றிய பதிவேட்டில் இறந்துபோனவர், இறக்கும் சமயத்தில் இருந்த இருப்பிடத்தைக் குறிப்பிட என்று ஒரே ஒரு பத்திதான் உள்ளது. இத்துடன், இறந்ததுபோனவரின் நிரந்தரமான இருப்பிடத்தைக் குறிப்பிட்டுக் காட்டவென்று 14–வது பத்தி புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது இருப்பிடங்களில் ஏற்பட்ட மரணங்கள் இருப்பிடம் அல்லாத இடங்களில் ஏற்பட்ட மரணங்கள் என்ற அடிப்படையில் மரணங்கள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் பேரில் இந்த மாதிரிச் செய்யப்பட்டுள்ளது.

வரப்பெற்றோம்

திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியன்

ஆண்டு விழாமலர்

முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் செயல் படத் தொடங்கி, ஓராண்டுக் காலம் ஆகிவிட்டது. இந்த ஓராண்டில் செய்துள்ள வேலைகள் என்ன, மேலும் என்ன செய்ய வேண்டியதுயுள்ளது, என்பது பற்றி சீர்தூக்கிப் பார்த்து செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். திருவள்ளூர் (ஈக்காடு) பஞ்சாயத்து யூனியன் ஆண்டு விழா மலர் இந்த நோக்கத்தை நிறைவேற்றி வைக்கிறது. யூனியனில் ஆக்க வேலைகள் நிறைய நடந்திருக்கின்றன என்பது இந்த மலரிலிருந்து தெரிகிறது. யூனியனிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் இந்த ஆக்கப்பணியில் ஈடுபட்டுச் செயலாற்றும் வகையில், காரியங்கள் நடந்திருப்பது மிகவும் மகிழ்ச்சியை அளிப்பதாகும். தமிழ் நாட்டில் செயல்பட்டுவரும் மற்ற எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இந்த மலர் அனுப்பிவைக்கப்பட்டால், கிராம முன்னேற்ற வேலைகளில் திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியன் மேற்கொள்ளும் முறைகளைப் பிற யூனியன்களும் தெரிந்து கொண்டு, பயனடைய துணையாக இருக்கும்.

திருத்தப்பட்டது

.......................மாவட்டத்தில்..........தாலுகாவில்,..........கிராமத்தில்..........ஆண்டில் ஏற்பட்ட பிறப்புகளைக்காட்டும் பதிவேடு

					குழந்தை பற்றிய விவரங்கள்.			தாய் பற்றிய விவரங்கள்.						தந்தை பற்றிய விவரங்கள்.				தகவல் கொடுத்தவர் பற்றிய விவரங்கள்.					
					ஆணா? பெண்ணா?						பிரசவ சமயத்தில் எந்த மாதிரி கணகாணிக்கப்பட்டது.												
வருட எண்.	மாத எண்.	பிறந்த தேதி.	பதிவு செய்யப்பட்ட தேதி.	குழந்தை பிறந்த இடம்.	ஆண்.	பெண்.	பெயர்.	பெயர்.	பிரசவ காலத்தில் வயது.	எத்தனையாவது குழந்தை?	நிரவணம் மூலமா?	உழைப்பாளியா?	உழைப்பாளி அல்லாதவரா?	பெயர்.	மதம்.	வகுப்பு.	இருப்பிடம்.	பெயர்.	அவரைப் பற்றிய விவரம்.	இருப்பிடம்.	தகவல் சொன்னவரின் கையெழுத்து அல்லது குறி.	பதிவாளரின் கையெழுத்து.	குறிப்புகள்.
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24

குறிப்பு.—(1) குழந்தை இறந்து பிறந்திருந்தால், விவரங்கள் சிகப்பு மையினால் எழுதப்படவேண்டும். பதிவு எண் கொடுக்கப்படக்கூடாது. அப்படிப்பட்டவை பிறப்பு, இறப்பு பற்றிய விவர அறிக்கை தயார் செய்யும்பொழுது, மொத்த எண்ணிக்கையில் சேர்க்கப்படக்கூடாது.

(2) குழந்தை வயிற்றிலேயே இறந்திருந்தால் "பிறப்பு இல்லை" என்று குறிப்புப் பத்தியில் எழுதப்படவேண்டும்.

(3) தவறான கூட்டுறவில் பிறந்த குழந்தையாக இருந்தால் "தவறான கூட்டுறவில் பிறந்தது" என்று குறிப்புப் பத்தியில் எழுதப்படவேண்டும். 1899-ம் ஆண்டு மூன்றாவது சட்டத்தின் 9-வது பிரிவில் இரண்டாவது விதியில் கண்டுள்ள முறையில் தவிர, தந்தை என்று யாருடைய பெயரும் எழுதப்படக்கூடாது.

திருத்தப்பட்டது

மாவட்டத்தில்   தாலூகாவில்   கிராமத்தில்   ஆண்டில் ஏற்பட்ட மரணங்களின் பதிவேடு

				இறந்துபோனவர் பற்றிய விவரங்கள்.														தகவல் சொன்னவர் பற்றிய விவரங்கள்.					
					ஆணா ? பெண்ணா ?						வயது.												
வருட எண்.	வரிசை எண்.	இறந்த தேதி.	பதிவு செய்யப்பட்ட தேதி.	பெயர்.	ஆண்.	பெண்.	இறந்து போனவரின் தந்தை யின்/கணவரின் பெயர்.	தாயார் பெயர்.	மதம்.	வகுப்பு.	வருடம்.	மாதம்.	நாள்.	இறந்துபோன இருப்பிடம்.	நிரந்தரமான இருப்பிடம்.	பிறந்து இறந்ததா ?	மரணத்திற்கு காரணம் (காரணங்கள் பட்டியலை முன்னே தனியாக உள்ள பக்கத்தில் காண்க.)	பெயர்.	விவரம்.	இருப்பிடம்.	தகவல் சொன்னவரின் கையெழுத்து (அல்லது கையொப்பக்குறி)	பதிவாளரின் கையெழுத்து.	குறிப்புகள்.
1	2	3	4	5	6	7	8	9	10	11	12 அ	12 ஆ	12 இ	13	14	15	16	17	18	19	20	21	22

குறிப்பு.—(1) குழந்தை இறந்து பிறந்திருந்தால், விவரங்கள் சிகப்பு மையினால் எழுதப்படவேண்டும். பதிவு எண் கொடுக்கப்படக்கூடாது. அப்படிப் பட்டவை ஜனன மரண மொத்த எண்ணிக்கை அறிக்கை தயார் செய்யப்படும்பொழுது, அவற்றில் சேர்த்துக்கொள்ளப்படக்கூடாது.

(2) குழந்தை வயிற்றிலேயே இறந்து பிறந்திருந்தால், "வயிற்றிலேயே இறந்து பிறந்தது" என்று குறிப்புகளில் பத்தியில் குறிப்பிடவேண்டும்.

கிராமக் கணக்குகள்—மகசூல் உத்தேசக் கணக்கு—கிராமக் கணக்குச் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகள்

Accounts--Village Accounts-Estimate on yield of Crops—Recommendations of the committee for the improvement of village accounts—orders passed [G. O. Ms. No. 3150, R. D. & L. A., dated 25-11-61.]

இராம அதிகாரிகள், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், தாசில்தார்கள் ஆகியோர் வைத்துவரும் கணக்குகள் தஸ்தாவேஜுகள், பதிவேடுகள் முதலியவைகளைப் பொருத்தமான வகையில் திருத்த வேண்டும் என்ற பிரச்சினை அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

இந்தக் கணக்குகள், தஸ்தாவேஜுகள், பதிவேடுகள் அநேகம் இருப்பதால், அவைகளை ஆராய்ந்து திருத்தி அமைக்கவும், சரியான, முழு அளவில் அவைகளைப் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொள்ளவும் வேண்டியது அவசியம் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக, பஞ்சாயத்து உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் அநுபவங்களையும், பிரதேச வாரியான உண்மைகளையும் தெரிவிப்பதன் மூலம் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் உதவவேண்டியது அவசியமாகும் என்றும் கருதப்படுகிறது. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961 மார்ச் 2-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 600-ல், கிராம, வட்டார, தாலூகா நிலை அலுவலங்களில் பல்வேறு அதிகாரிகளால் வைத்துக்கொள்ளப் பட்டிருக்கும், பதிவேடுகளையும், தவணைக்கணக்குகளையும், திருத்தி அமைக்கும் விஷயத்தை ஆராய்வதற்கு ஒரு குழுவை அமைக்கவும், அந்தக்குழு அந்த ஆணையில் கூறிய படி தன்னுடைய சிபாரிசுகளைச் செய்யவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அந்தக் குழு தன்னுடைய முதல் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையில் கிராமக் கர்ணம் இப்பொழுது வைத்திருக்கும், விளைச்சலைப் பற்றிய உத்தேச அறிக்கைகளைத் தொகுத்தல், பட்டம், சாகுபடி ஆகியவை பற்றிய கணக்குகளை ஆராய்ந்து, ஒரு திருத்தமான, மேற்குறித்த அரசாங்க ஆணையில் கூறிய முறைகளின்படி அமைந்த முறையைக் கையாளலாம் என்று சிபாரிசு செய்துள்ளது.

குழுவினுடைய சிபாரிசுகள், சென்னையில் 1961 ஆகஸ்ட் மாதத்தில், குறிப்பிட்ட சில கலெக்டர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள், மாவட்ட விவசாய அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், அரசாங்கத் தலைமை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டில் விவாதிக்கப் பட்டன. அந்த மகாநாடு, சாகுபடி உத்தேசத்தைப் பற்றிய, குழுவின் சிபாரிசுகளை ஒப்புக்கொண்டது. மேலும் அந்த மகாநாடு குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள புதிய முறை, கிராம நிலையில் எடுக்கப்படும் புள்ளிவிவரத்தின் தரத்தை உயர்த்தும் என்ற அபிப்பிராயத்தையும் வெளியிட்டது. அந்த புள்ளி விவரங்கள், பஞ்சாயத்துக்கள், உணவு உற்பத்தி விஷயத்தில் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பலனை அறிவதற்குப் பெரிதும் உதவியாய் இருக்கும் என்றும் அபிப்பிராயம் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட முறையை எல்லாக் கிராமங்களிலும் ஒரு பசலிக்கு பரீட்சார்த்தமாக நடை முறையில் கொண்டுவரலாம் என்றும், அவ்வாறு ஒரு முழுப் பசலிக் காலத்தில் அந்த முறை செய்யப்படும் வகையைப் பார்த்துப் பின்னால் இது குறித்து முடிவு செய்யலாம் என்றும் இந்த மகாநாடு ஆலோசனை கூறியுள்ளது.

ஆகவே, முன்னதாகத் தயாரிக்கப்படும் உத்தேசக் கணக்கறிக்கைகள் பட்டங்கள் விளைச்சல் பற்றிய அறிக்கைகள் தொகுப்பு விஷயத்தில், அந்தக் குழு செய்துள்ள சிபாரிசுகளை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது. அதனால், இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள 'விளக்க அறிவிப்பில்' விளக்கியுள்ளபடி திருத்தப்பட்ட கணக்கெடுப்பு முறையை 1372 (1962-63) பசலிக் காலத்துக்கு நெல், சோளம், கம்பு, ராகி ஆகிய பயிர்கள் விஷயத்தில் மட்டும், பரீட்சார்த்தமாகக் கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறது.

பஞ்சாயத்துக்கள் சிறப்பாகப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ள பயிர் விளைச்சலின் உத்தேசக் கணக்கெடுப்பில் திருத்தப்பட்ட முறையைக் கைக்கொள்ளுகின்ற வேலை, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அளிக்கப்படும் விவசாய மானியத் தொகைகளைப் பயன்படுத்தி கிராம உணவு உற்பத்தித் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றுகின்ற வேலை முறையின் இன்றியமையாத ஒரு பகுதியாகும் என்று அரசாங்கம் கருதுகின்றது. அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்கி-நிறைவேற்றுகின்ற பொறுப்பில் உள்ள அனைவரும் இந்த ஆணையில் கூறப்பட்டுள்ள விஷயங்களை விளக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்றும் அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, முதலாவதாக இந்த ஆணை மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் முன்னும் பின்னர் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், கடைசியாக பஞ்சாயத்துக்கள் முன்னும் அவற்றின் ஆலோசனைக்கு வைக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. சென்னை தவிர, ஏனைய மாவட்டக் கலெக்டர்கள், முறையே இந்த விவாதங்களை ஒவ்வொரு நிலையிலும் ஏற்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திருத்தப்பட்ட முறையைச் செயல்படுத்தும் விஷயத்தில், அடுத்தபடியாக, அரசாங்கம் கீழ்க்கண்டவாறு உத்தரவு களைப் பிறப்பிக்கிறது :

(1) இந்த மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உள்ள எல்லா நிலங்களும், இணைப்பில் கூறப்பட்டுள்ளபடி "உயர்தர சாகுபடிப் பகுதிகளாக" வகைப்படுத்தி அமைக்கப்படவேண்டும். வட்டாரத்தின் விவசாய வளர்ச்சி அதிகாரியின் (Extension officer-Agriculture) மேற்பார்வையில் இந்தப் பகுதியின் கிராமசேவக் கிராம கர்ணத்தின் துணையுடன், இந்த வேலையைச் செய்து முடிக்கவேண்டும்.

இந்த வேலை உடனடியாகத் தொடங்கப்பட்டு, 1371-ம் பசலி முடிவதற்குள் செய்து முடிக்கப்பட வேண்டும். விவசாய வளர்ச்சி அதிகாரிகள், கிராம சேவக்குகள், கிராம கர்ணங்கள் ஆகியோருக்குத் தேவையான விளக்கங்களைப் பிறப்பிக்கும்படி விவசாயத் துறை இயக்குநரும், சென்னை தவிர ஏனைய, மாவட்டக் கலெக்டர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(2) ஒவ்வொரு உயர்தர சாகுபடிப் பகுதிக்கும் கீழ்க் கண்டவர்களடங்கிய ஒரு குழு அமைக்கப்படவேண்டும் :

(அ) பஞ்சாயத்துக்களின் தலைவர்.

(ஆ) கிராமக் கர்ணம்.

(இ) பகுதியின் பிரதிநிதியாக பஞ்சாயத்தினால் நியமிக்கப்படும், முற்போக்கு எண்ணமும், அறிவுத் தெளிவும் உள்ள ஒரு விவசாயி.

உயர்தர சாகுபடிப் பகுதிகளுக்குக் குழுக்களை அமைக்கின்ற வேலையை உடனே தொடங்கி, அமைத்து முடிக்க— சென்னை தவிர ஏனைய, மாவட்டக் கலெக்டர்களும் உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இப்பொழுது நடத்த எண்ணியுள்ள சாகுபடி உத்தேசக் கணக்கெடுப்பு, நடைமுறைக்கு ஒத்த முறைதான் என்பதில் அரசாங்கத்திற்கு யாதொரு ஐயமும் இல்லை. மேலும் அந்த முறை சரியாகச் செயல்படுத்தப் பட்டால் இப்பொழுது கிராமக் கர்ணத்தினால் பதிவு செய்யப்படும் அன்னவாரி விவரங்களினால் கிடைக்கமுடியாத உத்தேசங்களை எல்லாம் பஞ்சாயத்துக் கிராமத்துக்கும், பஞ்சாயத்து அபிவிருத்திக்கும் எளிதில் கிடைக்கச் செய்யலாம். இந்த வேலை முறையினால், அமைக்கப்படும் குழு, யாராவது வெளியாரின் தலையீட்டுக்கு இடமளித்து, அதனுடைய உத்தேசத் திட்டங்கள் ஏதாவதொரு நிலச் சொந்தக்காரருக்கும் குத்தகைக்காரருக்கும் இடையில் ஏற்படும் சிக்கல், அல்லது கிராமத்தில் உள்ள நில உரிமையாளர்களுக்கு வேறு வகை சங்கடங்களை ஏற்படுத்தக் காரணமாகி விடுமோ என்ற ஒரு ஐயத்தைத் தவிர, இதன் வெற்றியைப்பற்றி வேறு ஐயம் கிடையாது. இந்தத் திட்டத்தை ஆராய்ந்த குழுவும், மகாநாடும், அது விஷயத்தில் அதிக முக்கியத்துவம் கொடுத்து ஆராய்ந்தன. மேலும், பகுதியில் சேர்க்கப்பட்ட எந்தத் தனி நிலத்தைப் பற்றியும் எந்த ஒரு விவரமும் தனியே இருக்காது. பகுதி நிலத்தை மொத்தமாகத்தான், குழு விவரங்களை ஆராய்ந்தது. சரியான, உத்தேசப் புள்ளி விவரங்கள் பஞ்சாயத்துக்களுக்குக் கிடைத்தால், அவைகளைக் கொண்டு கிராம உணவு உற்பத்தித் திட்டத்தை பஞ்சாயத்துக்கள் நன்கு செயல்படுத்தவும் முடியும் என்று இந்தச் சரியான, உத்தேசக் கணக்கெடுப்பின் இன்றியமையாமையை உணர்ந்து இந்த முறையையே ஒரு பாதுகாப்பான முறையாக அரசாங்கம் கருதுகிறது. இந்த வகையான பிரச்சினைகளுக்கு முடிவு காணும் விஷயத்தில், முழுப் பொறுப்பையும், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவைகளிடம் ஒப்படைத்து, அவை ஏற்றுக்கொண்டு செயல்படும் கொள்கையை நடைமுறையில் கொள்வதை விட இவற்றைத் தீர்க்க வேறு வழி இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது. இது விஷயங்களை எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களின் மனதிலும் பதியுமாறு பரப்பும்படி கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த வேலையைப் பற்றி 1372-வது பசலியின் முடிவில் தயாரிக்கப்படும் விளக்க அறிக்கையின் போது, பஞ்சாயத்துக்கள் தம் கடமையைச் செவ்வனே ஆற்றியுள்ளன என்ற நிலையே இருக்கும் என்று அரசாங்கம் நம்பிக்கை தெரிவிக்கிறது.

இணைப்பு I

விளக்கக் குறிப்புகள்

பிரிவு I

முன்னுரை—

விவசாயத்தைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் முறை, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தொடங்கி, நாளடைவில், படிப்படியாக ஏற்பட்ட அனுபவத்தின் விளைவாக, வளர்ந்துள்ளது. இந்தப் புள்ளி விவரங்களுக்குப் பெரிய ஆதாரமாக விளங்குவது கர்ணம் வைத்திருக்கும் கணக்குகளாகும். சாகுபடியைப் பற்றிய புள்ளி விவரங்கள் எல்லாம் அடங்கல் (அல்லது) ஸ்டேட்மெண்ட்-2 என்ற கணக்கில் உள்ளன. அந்தக்கணக்கு, அஜிமாஷ், ஜமாபந்திக்கு வேண்டிய விவரங்களை எல்லாம் அறிவதற்கென்று இருப்பதாகும். அந்தக் கணக்கு பசலிக் காலத்தில் நேரடியாக விளை நிலங்களுக்குச் சென்று பார்த்துத் தயாரிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கர்ணம், பதிவேடு-2ல் (Register No. 2) பல்வேறு பயிர்களும் விளைந்திருக்கின்ற நிலத்தின் விஸ்தீரணத்தையும், ஒவ்வொரு நிலத்தையும், சரியாக அளந்து பார்த்துப் பதிவு செய்ய வேண்டும். அவர், மொத்த சர்வே நம்பரையும், பயிர் விளைந்திருக்கும் நிலத்தின் பதிவு செய்யப்பட்ட சப் டிவிஷனையும் (Register Sub-division), செட்டில்மெண்ட் பதிவேட்டில் உள்ளபடி (Settlement Register—A. Register) எழுத வேண்டும். ஒரு சர்வே நம்பர் அல்லது சப் டிவிஷனுடைய ஒரு பகுதி, பயிர் செய்யப்பட்டிருக்கும் போதும் அல்லது பல வகைப்பயிர் ஏறியிருக்கும் போதும் கர்ணம் விவரமாக அஜிமாஷ் செய்யவேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறார். கர்ணம், பல்வேறு பயிர்கள் உள்ள நிலத்தை அளந்த பின்னர், அவற்றின் விளைச்சலின் மதிப்பை அணுக்களாக உத்தேசக்கணக்கெடுப்பு எடுக்க வேண்டும். அந்தக் கணக்கெடுப்பில் 12 அணு பலிதத்தை "சாதாரண விளைச்சலாகக் கொள்ள வேண்டும்" பின்னர் கர்ணம் மாதாந்திர விவசாயக்கணக்கை (ஸ்டேட்மெண்ட் எண். 1)-யும் ஒரு கணக்கறிக்கைத் தொகுப்பையும் (ஸ்டேட்மெண்ட்-எண் 1-எ) ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பிவைக்க வேண்டும். இதைக் கொண்டு ரெவினியூ இன்ஸ்பெக்டர் பிர்க்காவுக்கான புள்ளி விவரத்தொகுப்பை பதிவேடு எண்-27-ல் தயாரித்து, வரையறுக்கப்பட்ட கால அட்டவணைப்படி, ஒவ்வொரு மாதமும் 28-ம் தேதி, தாலூகா அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும். இதைக்கொண்டு தாலூகாப் பதிவேடு எண். 28-ல் முன்னறிவிப்பு அறிக்கையை (Fore cast Report) தயாரித்து, புள்ளி விவரத்துறை இயக்குனருக்கு அனுப்பி வைக்க வேண்டும். கர்ணத்தினுல் ஜமாபந்தியில் சமர்ப்பிக்கப்படும் முடிவான புள்ளி விவரங்கள் தான் பட்டம்-சாகுபடி அறிக்கைகளுக்கான அடிப்படைப் புள்ளி விவரங்களாகும். தாலூகா நிலையில் பொறுப்பாளர்களாயுள்ள தாசில்தார்கள், துணைத்தாசில்தார்கள் ஆகியோர் அனுப்பிவைக்கும் பல்வேறு புள்ளி விவர அறிக்கைகளையும், மாவட்ட விவசாய அதிகாரிகள், மாவட்டப் புள்ளி விவர அதிகாரிகள் ஆகியோர் அனுப்பிவைக்கும் அவ்வப்போதைய நிலைமைகளைப் பற்றிய அறிக்கைகளையும், மழை பெய்த கணக்கு அறிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு மொத்தமாக மாநிலத்திற்குப் பல்வேறு அறிக்கைகள் தயாரிக்கப்படும். ஒரு பயிரின் மொத்த விளைச்சலை அந்தப் பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தின் விஸ்தீரணம், சாதாரணமாக ஒரு ஏகரில் விளையும் விளைவு, பட்டம் ஆகியவைகளைக்கொண்டு நிர்ணயிக்கப்படும். ஒரு ஏகருக்கு சாதாரண விளைச்சல் இவ்வளவு என்று ஒவ்வொரு தொகுதிக்கும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விவசாயத்துறை இயக்குனரால் 1919-லேயே வரையறுக்கப்பட்டது. இந்த சாதாரண விளைச்சல் கணக்கு, அறுவடைப்பரிசோதனை முடிவுகள், அரசாங்க சாங்கப்பண்ணைகளில் விளைச்சல் பிரதேசத்தில் விவசாய அதிகாரிகளுடைய அனுபவம்—ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்பட்டதாகும். இவ்வற்றுள் சில புள்ளி விவரங்கள் அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டன. அவ்வப்போது மாறக்கூடிய பட்டம் (பருவகாலம்) ரெவினியூ இலாகாவினுல் தயாரிக்கப்பட்ட அணுக்கணக்கில் தயாரிக்கப்பட்ட உத்தேச சாகுபடிக் கணக்கை அடிப்படையாகக்கொண்டது.

பிரிவு II.

இப்பொழுது இருந்துவரும் சாகுபடிக் கணக்கு முறையை மாற்ற வேண்டியதன் அவசியம்

மேலே விளக்கப்பட்ட இப்போதைய கணக்கெடுப்பு முறை மாநிலம் முழுவதற்குமான சரியான புள்ளி விவரத்தைத் தொகுக்கும் விஷயத்தில் முழுத் திருப்தியை அளிக்கவில்லை. தவறுன விவரங்கள் பற்றிய புகார்களும் உள்ளன. முடிவான முன்னறிவிப்பு அறிக்கை (Final fore cast Report) தயாரிக்கக் கொடுக்கப்பட்ட விஸ்தீரணத்திற்கும், பருவம்-விளைச்சல் அறிக்கைகள் (Season and Crop Returns) தயாரிக்கக் கொடுக்கப்பட்ட விஸ்தீரணத்திற்கும் பெருத்த வேறுபாடுகள் காணப்பட்டன. மாவட்ட நிலையிலும், தாலூகா நிலையிலும் சரியான புள்ளி விவர அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை. அத்தகைய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதிலும் நீண்ட காலதாமதங்கள் காணப்பட்டன.

ஒவ்வொரு நிலத்தைப்பற்றியும் புள்ளி விவரமெடுப்போர் அதிகமாகவோ அல்லது குறைத்தோ மதிப்பிடுகின்ற மனப்பான்மையைத் தான் கடந்த கால அனுபவம் காட்டுகிறது. ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், துணைத் தாசில்தார்கள், தாசில்தார்கள் சட்ட விதிகளில் கூறப்படும் முறைப்படி அஜிமாஷ் செய்ய திறமையற்றவர்களாக இருந்தபடியால் பரிசோதிக்கப்படாத விவரங்களும், தவறுன விவரங்களும் மேலே அனுப்பப்பட்டு மாநில நிலையில் பயன்படுத்தப்பட்டன. ஆகவே, அந்தந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களாலேயே ஒவ்வொரு நிலத்தின் விளைச்சலைப் பற்றிய முழு விவரங்களையும் அறிவதற்கான மாற்றங்களைச் செய்ய வேண்டியது தேவையாகிறது.

பிரிவு III—நோக்கம்

7. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தைப் படிப்படியாக அமுல் நடத்துவது, மாநிலம் பூராவும், ஒரு சில இடங்கள் தவிர, முழுதும் நடந்தேறிவிட்டது. சட்டத்தின் 66-வது பிரிவின் கீழ், விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் பஞ்சாயத்து யூனியன்களிடமும் அவைகளுடன் சேர்ந்த பஞ்சாயத்துக்களிடமும் அரசாங்கம் ஒப்படைக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒப்படைப்புக்கு ஒரு நிபந்தனையாக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், தன்னுடைய பொறுப்பில் உள்ள வட்டாரத்திற்காக, பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட அம்சங்களுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை

உருவாக்கவும், அந்த வேலைத் திட்டங்களை செயல்படுத்தி வைக்கின்ற பொறுப்பினை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

8. அப்படிக் குறிப்பிட்டுள்ள அம்சங்களில், விவசாயம் மிகவும் முக்கியமானது. மாநிலத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் விவசாய உற்பத்தித் திட்டத்தை உருவாக்குகின்ற பொறுப்பானது பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு, அதற்காக மூன்றாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் விவசாய மானியம் என்று இரண்டு லட்சம் ரூபாய் கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை சீரான முறையில் பஞ்சாயத்துக்கள் நிறைவேற்றிவைக்கவேண்டுமானால், அவைகளையும், அப்படிப் பட்ட திட்ட வேலைக்கு அடிப்படையாக, கிராமத்தில் விவசாயப்படுகின்ற நில அளவு என்ன என்ன மாதிரி பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன, பயிரான பயிர்களின் அளவு என்ன என்பது பற்றி யெல்லாம் முழுத் தகவல்களும் இருக்கவேண்டும். இந்த வேலைத் திட்டங்களின் கீழ், விவசாயி விவசாய உற்பத்தியைப் அபிவிருத்தி செய்ய கையாள்கிற தீவிர நடவடிக்கைகளின் விளைவினால், பலவகைப்பட்ட பயிர்கள் உற்பத்திப் பெருக்க அளவினை மதிப்பீட்டினையும் தெரிந்து கொள்கிற அளவில் பஞ்சா சாயத்துக்கள் இருக்கவேண்டும். ஆகவே, பஞ்சாயத்துக்கள், கிராம அளவில், விவசாயம் சம்பந்தமான புள்ளி விவரங்களைச் சேகரித்தலும், அவைகளை பதிவு செய்தலுமான ஆகிய வேலைகள் சம்பந்தப்பட்ட பலவகை ஏற்பாடுகளில் கலந்துகொள்வது அவைகளுக்கே மிகவும் அவசியமாகும். கிராமங்களில் விவசாயம் செய்யப்படுகிற சிறந்த விவசாயப் பகுதிகள் என்று எல்லைக் கோடிட்டு பிரித்துக் காட்டவும், அடுத்த பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள முறையில், குழுக்களை அமைத்துக் காட்டவும் இது போன்ற வேலைகளினால் பஞ்சாயத்துக்கள் இந்த வேலையில் பங்கு கொள்வது என்பது உறுதியானதாகி விடும்.

பிரிவு IV

பஞ்சாயத்துக்களை சிறந்த விவசாயப் பகுதிகள் என்று எல்லை குறித்து காட்டுதலும், குழுக்களை அமைத்தலும்

9. ஒவ்வொரு பகுதியினைச் சேர்ந்த கிராம சேவக்கும், சம்பந்தப்பட்ட கிராம அதிகாரிகளின் உதவியுடன், ஒவ்வொரு பஞ்சாயத்துப் பிரதேசத்திலும் கிடைக்கின்ற நிலங்களை, வசதியான பகுதிகளாக பிரித்து எல்லைக் கோடிட்டுக் காட்டவேண்டும். இந்தப் பகுதிகள் இனிமேல் "சிறந்த விவசாயப்பகுதிகள்" என அமைக்கப்படும். ஒரே மாதிரியான நில நூல் அம்சங்கள், ஒரே மாதிரியான மண்வளம் ஒரே மாதிரியான நீர்ப்பாசன வசதிகள் அமையப்பெற்றுள்ள விட்டுப்போகாத தொடர்பான சர்வே எண்கள் ஒரு சிறந்த விவசாயப் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும். சாதாரணமாக, நஞ்சைப் பயிர்கள் பயிரிடப்படுகின்ற ஒரு பகுதியின் பிரதேச அளவு 200 ஏக்கருக்கு மேலும், புஞ்சைப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. ஒரு பகுதியின் பிரதேச அளவு 300 ஏக்கருக்கு மேலும் போகக்கூடாது. இந்தப் பகுதிக்கு பிரதிநிதி என்று பஞ்சாயத்தினால் நியமனம் செய்யப்படுகிற விவசாயிக்கு அந்தப் பகுதியில் விளைவிக்கப்படுகின்ற பயிர்கள் பற்றியும், அந்தப் பிரதேசத்தைப்பற்றிய மண் வளத்தைப் பற்றியும் மிகவும் நெருக்கமாக விவரங்கள் தெரிந்திருக்கவேண்டும் என்பதற்காகவே, பிரதேச அளவில் இந்த அளவு முறையானது வகுககப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ரொக்கமாக அமைக்கப்பட்டதாகவும், சீரான முறையில் அமையப்பெற்றதாகவும் இருக்க வேண்டும். நீர்ப்பாசனம் செய்யப்படுகிற பிரதேசங்கள், நீர்ப்பாசனம் செய்யப்படாத பிரதேசங்கள் பிரித்துக்காட்டப்பட்டு, அவை தனித்தனி பகுதிகளாக இருக்க வேண்டும். நிலங்களை இப்படி பகுதிகளாகப் பிரித்து எல்லைக்கோடிட்டுக் காட்டுகின்ற வேலை பஞ்சாயத்தின் வளர்ச்சி அதிகாரி (விவசாயம்)யினால் மேற்பார்வை செய்யப்படவேண்டும். கிராமப்பட நகல் ஒன்றில் இப்படி பிரித்து எல்லைக்கோடிட்ட பகுதிகள் குறிப்பிட்டுக்காட்டப்பட்டு நீர் பாசனம் செய்யப்படுகின்ற நிலங்கள், நீர்பாசனம் செய்யப்படாத நிலங்கள் என்று தனித்தனியாக வரிசையாக அவைகளுக்கு வரிசை எண்கள் கொடுக்கப்படவேண்டும். அப்படிக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள கிராமப்படத்தின் நகல் பஞ்சாயத்துக்களுக்கு தகவல் தெரிந்து கொள்வதற்காக கொடுக்கப்படவேண்டும். அதன் பிறகு அது பஞ்சாயத்து அலுவலகத்தில் வைக்கப்படவேண்டும். இப்படி நிலங்களை சிறந்த விவசாயப் பகுதிகளாகப் பிரித்து எல்லைக்கோடிட்டுக்காட்டுகின்ற வேலையானது உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, 1371 பசலி முடிவதற்குள்ளாக, இந்த வேலை முடிக்கப்படவேண்டும்

10. ஒவ்வொரு சிறந்த விவசாயப் பகுதிக்கும் ஒரு கமிட்டி இருக்க வேண்டும். அந்தக் கமிட்டி பஞ்சாயத்துத் தலைவர், கிராமக் கர்ணம், அந்தப் பகுதியின் பிரதிநிதியாக பஞ்சாயத்துத் தலைவரால் நியமிக்கப்படுகின்ற தேர்ந்த விவசாய அறிவும், முற்போக்கான விவசாயக் கருத்துக்களும் உள்ள விவசாயி ஒருவர் ஆகிய இவர்கள் அடங்கியுள்ளராதாக இருக்க வேண்டும். அந்தக் கமிட்டி "சிறந்த விவசாயப் பகுதி உப-கமிட்டி" என்று அமைக்கப்படலாம். ஒரு பஞ்சாயத்தில் உள்ள சிறந்த விவசாயப் பகுதி உப கமிட்டிகளுக்கு சிறந்த விவசாயப் பகுதி உப கமிட்டி- எண் I, சிறந்த விவசாயப்பகுதி உப கமிட்டி II என்று இப்படி வரிசை எண்கள் கொடுக்கப்படலாம். பஞ்சாயத்தில் உள்ள ஒவ்வொரு சிறந்த விவசாயப்பகுதிக் கமிட்டிக்கும் பஞ்சாயத்துத் தலைவர் தான் தலைவராக இருக்கவேண்டும். ஒவ்வொரு பகுதி சம்பந்தப்பட்ட வரையில், தன்னுடைய பகுதியில் விளைகின்ற பயிர்களைப்பற்றி ஒரு நிலையில் நின்று சரியான விவரங்களையும் மதிப்பீட்டையும் கொடுக்கக்கூடிய திறமை வாய்ந்தவராக புத்திசாலியாகவும், பொறுப்புள்ளவராகவும், பொதுச் சேவையில் ஊக்கமுள்ளவராகவும் உள்ள ஒரு விவசாயியை பஞ்சாயத்தானது நியமனம் செய்யும். அவர் பஞ்

சாயத்து அங்கத்தினராக இருக்கலாம். ஆனல் அப்படி இருக்கத்தான் வேண்டுமென்று ஒரு கட்டாயமும் இல்லே. சிறந்த விவசாயப் பகுதிக்காக அமைக்கப்படும் இந்தக் கமிட்டி, எல்லா விஷயங்களிலும், பஞ்சாயத்தின் உற்பத்திக் கமிட்டியின் ஒரு உப குழுவாக இயங்கும். பஞ்சாயத்தினுல், அந்தப் பகுதியில் திட்டமிடப்பட்டு, செயல் படுத்தப்படுகின்ற எல்லா விவசாயம் சம்பந்தமான வேலே திட்டங்களேயும் எடுத்துச் செயலாற்றுகின்ற பொறுப்பானது இக்கமிட்டியைச் சார்ந்ததாகும். ஆகவே, சிறந்த விவசாயப்பகுதிக்கு நியமனம் செய்யப்பட்ட அங்கத்தினர் பஞ்சாயத்தின் உற்பத்திக் கமிட்டியின் அங்கத்தினராகவும் இருப்பது விரும்பத்தக்கது. எல்லாச் சிறந்த விவசாயப் பகுதிகளுக்கும் இப்படிப்பட்ட கமிட்டிகள் உடனடியாக அமைக்கப்பட்டு, வெகு விரைவில் கமிட்டிகள் அமைக்கும் இந்த வேலே முடிந்து விடும்படியாக பார்த்துக்கொள்வது ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியின் பொறுப்பாகும்.

11. அறுவடைச்சமயத்தில், கிராம கர்ணம், ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நிலங்களில், 5 சத விகித அளவு நிலங்களில், உண்மையாக விளேந்த விளேவு எவ்வளவு என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டு, (பின்னல் இணேக்கப்பட்டுள்ள இணேப்புகள் II, III-களில்) கண்டுள்ள படிவங்களில், விளேவு எவ்வளவு, போன்ற மற்ற விவரங்களேக்காட்டும் ஸ்டேட்மெண்ட் ஒன்றினேத் தயாரித்து, அதை கமிட்டியின் முன் வைக்கவேண்டும். கீழே 12-வது பாராவில், ஒவ்வொரு பயிர்களுக்கும் எதிராக கொடுக்கப்பட்டுள்ள தேதிகளில், கமிட்டியானது கிராமக் கர்ணத்தினுல் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களே, தங்களுடைய பிரதேச சம்பந்தமாக தங்களுக்குத் தெரிந்ததுள்ள விவரங்களே அடிப்படையாகக் கொண்டு, பரிசீலனே செய்து அந்தப் புள்ளி விவரங்கள் சரியானவைகளா என்று சேர்த்துப் பார்க்கவேண்டும். (முன்பே கர்ணத்தினுல் சேகரிக்கப்பட்டுள்ள 5-சத விகிதத்திற்கான தகவல்களேயும் சேர்த்து) பிரதேசத்தில் குறைந்த பட்சம் 10 சத விகித அளவினுக்கு விளேவு எவ்வளவு ஆயிற்று என்பது பற்றிய மேலும் தகவல்களே, விசாரித்தறிதல் மூலமும், நேரில் பார்வையிடுவதன் மூலமாக கமிட்டி பொதுவாக அறிந்து உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அதை வைத்து, பகுதிக்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரி விளேவு எவ்வளவு என்ற புள்ளி விவரத்தைப் பெற வேண்டும். தனிப்பட்ட முறையில் மனத்தாங்கல்கள், துன்புறுத்தல்களே தவிர்க்க வேண்டி, தனிப்பட்ட நிலங்கள் பற்றிய வரையில் எந்த விதமான தகவல்களேயும் கமிட்டி வைத்துக்கொள்ளாது. கமிட்டியானது, அதன் பிறகு, பகுதிகள் சம்பந்தப்பட்ட வரையில், விளேவின் மதிப்பீடானது சரியாக உள்ளதா என்று பரிசீலிக்கப்பட்டுள்ளது. பார்வையிட்ட பொழுதும், விசாரித்ததின்மூலம் சேகரிக்கப்பட்டுள்ள பரப்பளவு போன்ற மற்ற விஷயங்கள்பற்றி மேற்கொண்டும் கிடைத்த தகவல்களும் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன என்று சான்றிதழ் வழங்கவேண்டும். அப்படி பரிசீலனே செய்யப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்ட அறிக்கையானது நகல் பிரதியுடன் கர்ணத்தினுல் தயாரிக்கப்படவேண்டும். கிராமத்தில் உள்ள கர்ணம் எல்லாப் பகுதிகள் சம்பந்தமாக உள்ள விவரங்களேயும் அவர் நன்ருகச் சேர்த்து அப்படி புள்ளி விவரங்கள் சேர்க்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையினே, பகுதிகளுக்காக தனித் தாள்கள் தயார் செய்து, கையெழுத்திட்டு, அவைகளேயும் அறிக்கையுள் சேர்த்து, தாலூகா அலுவலகத்திற்கு கர்ணம் அனுப்பிவைக்க வேண்டும். தொகுக்கப்பட்ட அறிக்கையின் நகல் பிரதியை கர்ணம் அடுத்த அறிக்கையையும், தொடர்ந்து தயாரிக்கப்படவேண்டிய அறிக்கைகளேயும் அனுப்பிவைப்பதற்கு உபயோகப்படுத்துவதற்காக வேண்டி அலுவலகப் பிரதியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

12. முன்புள்ள பாராவில் குறிப்பிட்டுள்ள தகவல்களே தயாரித்து இந்த தேதிகளுக்குள் அனுப்பி வைக்கவேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ள தேதிகள் பின்வருமாறு :—

முன்னறிந்து கூறுகிற அறிக்கைகள்

	அறிக்கை தயாரிப்பதற்கான கடைசி தேதி	அறிக்கை அனுப்பி வைப்பதற்கான கடைசி தேதி
அ. கார், குருவை நெல் சம்பந்தமாக முன்னறிந்து கூறுகிற விசேஷ அறிக்கை		
திருநெல்வேலி மாவட்டத்தில்.	ஜூன் 15	ஜூன் 17
முன்கூட்டி கிடைக்கின்ற கார் நெல் குறுவையும் கார் நெல்லும்.	செப்டெம்பர் 15	செப்டெம்பர் 17
ஆ. கார், குருவை அல்லாத மற்ற நெல் வகைகள்.		
முதல் முன்னறிந்து கூறுகிற அறிக்கை.	டிசம்பர் 3	டிசம்பர் 5
இறுதி முன்னறிந்து கூறுகிற அறிக்கை	பிபரவரி 3	பிப்ரவரி 5
இ. சோளம், கம்பு, ராகி.		
முதல் முன்னறிந்து கூறுகிற அறிக்கை.	ஜனவரி 15	ஜனவரி 17
இறுதி முன்னறிந்து கூறுகிற அறிக்கை.	மார்ச் 15	மார்ச் 17

வருஷவாரி பயிர் பற்றிய அறிக்கைகள்

பசலி முடிந்ததும், ஒவ்வொரு பகுதியின் கமிட்டியினுல் வருடாந்தர பருவவாரி, பயிர் பற்றிய அறிக்கைகள் தாயர் செய்யப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜூலே 15-ம் தேதி அன்ருே அதற்கு முன்னுலோ, தாசில்தாருக்கும் புள்ளி விவரத்துறை இயக்குனருக்கும் அனுப்பி வைக்கப்படவேண்டும். பசலி முடிந்ததும், ஒவ்வொரு பயிருக்கும் அதன் சம்பந்தமாக பரிசீலனே செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்ட இறுதி முன்னறிந்து கூறுகிற அறிக்கையானது இந்த அறிக்கைதான் இருக்கும். எப்படி அறிக்கையா

ளது தயார் செய்யப்பட்ட வேண்டும், அந்த அறிக்கை தயார் செய்ய வேண்டிய முறை பற்றிய விவரங்கள் இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்சமயத்திற்கு, திருத்தப்பட்ட நடைமுறையானது, மா நிலத்தின் முக்கிய தானியப் பயிர்களான நெல், ராகி, சோளம், கம்பு ஆகியவைகளுக்கு மட்டும் தான் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

பிரிவு V

சாகுபடி உத்தேசக் கணக்கிலிருந்து வரும் அணு முறைக்குப் பதிலாக நயா பைசா முறையை மாற்றி அமைத்தல்

பயிர்களின் சாகுபடிப் பலிதத்தை அணுக்கணக்கில் உத்தேசமிட்டு பதிவு செய்கின்ற இப்போதைய முறை, தசாம்ச நாணய முறை மாற்றத்தின் விளைவாகவும், வசதி, எளிமை, கருதியும் கைவிடப்பட்டது. பல்வேறு மாவட்டங்களிடையே சாகுபடி பற்றிய விவரத்தின் ஒருமைப்பாடும் இல்லை. ஆகையால், சாகுபடி உத்தேசக் கணக்கு இனிமேல் நயா பைசாக் கணக்கில் மட்டுமே இருக்கவேண்டும். ஒரு நயா பைசா, 10 பட்டணம் படி நெல் அல்லது தினை வகைகளையும், 100 நயே பைசே அல்லது ஒரு ரூபாய் 1,000 பட்டணம் படி தானியத்தையும் குறிக்கும். எடுத்துக்காட்டாக மேற் சொன்ன குழுவின் கர்ணம் ஒரு நிலத்தினுடைய விளைச்சலை ஒரு ஏகருக்கு 600 பட்டணம் படி நெல் ஆகும் என்று உத்தேசமாகக் கணக்கிடுவாராகுல் அதை 60 நயா பைசா விகிதமாக கணக்குப் பதிந்து கொள்ளவேண்டும்.

இணைப்பு II

கிராம விசேஷ கார், குருவை நெல் முதல்/முடிவு முன்னறிவிப்பு அறிக்கை

........................மாதத்தில் அறுவடை செய்யப்பட்ட பயிரைப் பற்றிய அறிக்கை
பயிர் : நெல்/சோளம்/கம்பு/கேழ்வரகு.

1 மாவட்டம்		
2 தாலூகா		
3 கிராமம்		
4 கிராமத்தில் குறிக்கப்பட்ட உயர்தரச் சாகுபடிப் பகுதிகளின் எண்.		
5 இந்த அறிக்கை சம்பந்தப்பட்ட பகுதியின் எண்.		
6 நீர்ப்பாசனம் (அ) நீர்ப்பாசனமல்லாத பகுதி.		
7 துணைக்குழு உயர்தரச் சாகுபடிப் பகுதியில் உள்ள பகுதிப் பிரதிநிதியின் பெயர்.		
8 துணைக்குழுவினுல் பரிசோதிக்கப்பட்ட பகுதியில் பயிர் செய்யப்பட்டுள்ள மொத்த விஸ்தீர்ணம்.	I போகம் (b) II போகம்.	ஏகர்கள். மொத்தம்.
9 மொத்தப் பகுதியிலும் பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தின் விஸ்தீர்ணம்.	போகம் (b) II போகம். மொத்தம்.	ஏகர்கள்.
10 வீதாசாரம் '(8) லிருந்து (9)' (குறைந்த பட்சம் 10 சத வீதம் இருக்கவேண்டும்).	I போகம் (b) II போகம்.	
11 8-வது பத்தியில் குறிக்கப்பட்ட பரிசோதனைப் பகுதியில் பகுதியில் சாகுபடியாண மொத்த அளவு.	1 போகம். (b) II போகம். மொத்தம்.	பட்டணம் படிகள்.
12 பரிசோதிக்கப்பட்ட நிலத்தில் ஒரு ஏக்கருக்கு எதிர்பார்க்கப்படும் விளைவின் அளவு (8-வது பத்தியால் வகுக்கப்படும் 11-வது பத்தி).	I போகம் (b) II போகம்.	பட்டணம் படிகள்.
13 துணைக் குழுவினுல் அமைக்கப்பட்ட மொத்தப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு எதிர்பார்க்கப்படும் விளைவின் அளவு.	1 போகம் (b) II போகம் மொத்தம்.	பட்டணம் படிகள். நயா பைசா. (10 ப.ப.: 1ந.பை.

14 மொத்தப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியின் அளவு. (மூட்டைகளில்). [பத்தி 9×பத்தி 13]

1 போகம்	மூட்டைகள். (1 மூட்டை .... பட்டணம் படிகள்)
(b) II போகம்	
மொத்தம்.	

(a) அறிக்கை, அறிக்கைக்கென குறித்த நாட்களுக்கு முன்னதாகவே அமையும் அறுவடைக்காலத்துடன்—தொடர்பு கொண்டது.

(b) " II போகம்" என்ற இடத்தில்—அவை பொருந்தாத இடத்தில்—கார், குருவை சம்பந்தப்பட்ட மட்டில் அவை இல்லை. தேவையான இடத்தில் III போகம்—என்று குறித்துக்கொள்ளலாம்.

தேதி. கையெழுத்து.

தாசில்தார் அவர்களுக்கு, 1 பஞ்சாயத்துத் தலைவர் :

.... 2 பகுதியின் பிரதிநிதி :

புள்ளி விவரத்துறை இயக்குநவர், சென்னை-7 அவர்களுக்கு. 3 செயலாளர்/கர்ணம் :

கிராம முன்னறிவிப்பு அறிக்கை தயாரிக்க விளக்கம்

8-வது வகை : துணைக்குழு ஆராய்ந்து, விசாரித்துச் சேகரித்த சாகுபடி விவரங்கள் சேகரித்த 10 சத வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட விஸ்தீர்ணத்தைப் பற்றியது. இது.

9-வது வகை : கர்ணம் அறிக்கை 2 (ஸ்டேட்மெண்ட்–2) லிருந்து இந்த விவரத்தைக் குறிப்பார்.

11-வது வகை : துணைக்குழுவினல் சாகுபடி உத்தேசக் கணக்கெடுக்கப்பட்ட 10 சத வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட விஸ்தீர்ணமுள்ள நிலத்தின் பயிர்.

13-வது வகை : 11-வது பாராவில் விளக்கப்பட்டபடி துணைக்குழு உறுப்பினர்களால் ஆராயப்பட்ட பின் பொருத்தமாக ஈடு செய்துகொள்ளப்படுகின்ற முறையில், பரிசோதிக்கப்பட்ட நிலங்களில் ஒரு ஏகர் சாகுபடியை அடிப்படையாக வைத்து குறிக்கப்பட்ட பகுதியின் மொத்த உத்தேச சாகுபடி.

இணைப்பு III

வருடாந்திர, கிராமப் பட்டம் (பருவ காலம்) பயிர் அறிக்கை

.....................பசலிக்கான அறிக்கை.

பயிர் : நெல்/சோளம்/கம்பு/கேழ்வரகு.

1 மாவட்டம்.

2 தாலூகா.

3 கிராமம்.

4 கிராமத்தில் பிரித்துக்காட்டப்பட்ட உயர்தரச் சாகுபடிப் பகுதியின் எண்.

5 இந்த அறிக்கை சம்பந்தப்பட்ட பகுதியின் எண்.

6 நீர்ப்பாசன (அ) நீர்ப்பாசனமல்லாத பகுதி.

7 துணைக்குழு உயர்தரச் சாகுபடியில் உள்ள பகுதிப் பிரதிநிதியின் பெயர்.

8 துணைக்குழுவினல் பரிசோதிக்கப்பட்ட பகுதியில், பயிர் செய்யப்பட்ட மொத்த விஸ்தீர்ணம்.	I போகம் : II போகம் : மொத்தம் :	ஏகர்கள்.
9 மொத்தப் பகுதியிலும் பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தின் விஸ்தீர்ணம்.	I போகம் : II போகம் : மொத்தம்.	ஏகர்கள்.
10 (8) லிருந்து (9) வரையில்வீதாச்சாரம் (குறைந்த பட்சம் 10 சத வீதம் இருக்கவேண்டும்.)	I போகம் : II போகம்.	

11 8-வது பத்தியில் குறிக்கப்பட்ட, பரிசோதனைப் பகுதியில் சாகுபடியான மொத்த அளவு.	I போகம் II போகம் மொத்தம் :	பட்டணம் படிகள்.
12 பரிசோதிக்கப்பட்ட நிலத்தில், ஒரு எக்கருக்கு எதிர்பார்க்கப் படும் விளைவின் அளவு. (8-வது பத்தியால் வகுக்கப்படும் 11-வது பத்தி).	I போகம். II போகம்.	பட்டணம் படிகள்.
13 துணைக் குழுவினால் அமைக்கப்பட்ட மொத்தப் பகுதியில்-ஒருஎகருக்கு எதிர்பார்க்கப்படும் விளைவின் அளவு.	I போகம். II போகம்.	பட்டணம் படிகள். நயா சைபசா. (10 ப.ப-1 ந.பை.)
14 மொத்தப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியின் அளவு. (மூட்டைகளில்). (பத்தி 9×பத்தி 13).	I போகம். II போகம். மொத்தம்.	மூட்டைகள். (1 மூட்டை பட்டணம் படிகள்.]

தேதி :

கையெழுத்து :

1 பஞ்சாயத்துத் தலைவர் :

2 பகுதிப் பிரதிநிதி :

3 கர்ணம்/செயலாளர் :

....

தாசில்தார் அவர்களுக்கு,

சென்னை புள்ளி விவரத் துறை இயக்குநர் அவர்களுக்கு,

வருடாந்தர கிராம பட்டம் (பருவ காலம்), பயிர் அறிக்கை தயாரிக்க விளக்கம்

இந்த அறிக்கையானது, இறுதி முன்னறிந்து கூறுகிற அறிக்கையின் அடிப்படையில் இருக்கும். பசலி முடிவு பெற்ற பின்னர், இந்த அறிக்கையானது, ஒவ்வொரு பயிர் விஷயமாகவும், ஆராயப்பட்டு, செய்யப்பட்டு, இறுதியாக முடிவு செய்யப்படும்.

(பாரா 12).

எங்கெங்கு அப்படி உள்ளனவோ அங்கே முதல் பயிரின் கீழ், முன் கூட்டி கிடைக்கின்ற காரையும், குறுவையையும் குறிப்பிடுக. எங்கே அது உற்பத்தி செய்யப்படுகிறதோ, அங்கே மூன்றாவது பயிரினைக் குறிப்பிடுக.

கிராமநல-தல் நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு நவம்பர் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் : 3150.

'கிராம நல' இதழ் ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்.,
தலைமைச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி,
கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை,
துணைக்காரியதரிசி (பஞ்சாயத்து).

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி—பஞ்சாயத்து நிதி இயக்குநர்.

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி (வேலைமுறை)

ஸ்ரீ எஸ். வேங்கடரமணன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி, நிதித்துறை (திட்டம்)

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி / ஆசிரியர்.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.